# கோவைக் கோயில்கள்





14—4—1967

கலைமகள் மன்றம்

சிங்காநல்லூர்-கோயமுத்தூர்-5.

"When Better Yarn is Spun,
We will Spin it".

SELVARAJA MILLS (PRIVATE) LTD.,
ODDERPALAYAM,
ONDIPUTHUR (P. O.)
COIMBATORE-16.

T-UN-393

# கோவைக் கோயில்கள்

ஆசிரியர்கள் :

திரு. நா. சுந்தரம்,
திரு. கொ. ச சுப்புராமன்,

வெளியீடு :
கலைமகள் மன்றம்
சிங்காநல்லூர், கோவை-5.

50-காசு.

## உள்ளே ... ... ...

1. முன்னுரை
2. ஏன் எழுதினோம் ?
3. சற்று நில்லுங்கள்.
4. ஆசிச் செய்திகள்
5. கோயமுத்தூர் — பெயர் காரணம்.
6. ஸ்ரீ கோனியம்மன் கோயில், கோவை
7. ,, சங்கமேஸ்வரர் கோயில், கோட்டைமேடு, கோவை
8. ,, விநயகர் கோயில், ஈச்சனுரி, கோவை
9. ,, வாசவ கன்யா பரமேஸ்வரி ஆலயம், கோவை
10. ,, பட்டீசர் ஆலயம், பேரூர்,
11. ,, முத்துவிநயகர், காமாட்சியம்மன், ஏகாம்பரேஸ்வரர் கோயில், கோவை
12. ,, லக்ஷ்மி நாராயண வேணுகோபால சுவாமி கோயில் ( கெரடி கோயில், ) கோவை
13. ,, வேணு கோபாலஸ்வாமி கோயில், சலிவன் கோவை
14. ,, ஆஞ்சநேய சுவாமி கோயில், கோவை,
15. ,, பாலதண்டாயுதபாணிசுவாமி கோயில், கோவை
16. ,, சுப்பிரமணிய ஸ்வாமி கோயில், மருதமலை.
17. ,, அனுபாவி சுப்பிரமணியர் கோயில் பெரிய தடாகம், கோவை
18. ,, இரத்தின விநயகர் கோயில், கோவை.
19. ,, நாகசாயி மந்திர், கோவை.
20. ,, விருந்தீஸ்வரர் கோயில், துடியலூர், கோவை
21. ,, கோதண்டராமஸ்வாமி கோயில், ராம் நகர்
22. ,, தண்டபாணி ஸ்வாமி திருக்கோயில், சிரவண புரம், கோவை
23. ,, தண்டுமாரியம்மன் கோயில் அவனுசிப்பாதை,
24. ,, விஸ்வேஸ்வரசுவாமிகோயில்பேட்டை, கோவை
25. ,, ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில், பாப்ப நாயக்கன் பாளையம், கோவை.
26. ,, கரிவரதராஜப் பெருமாள் கோயில் பூளைமேடு
27. ,, நீலகண்டேஸ்வரர் கோயில், இருகூர்.
28. ,, வரதராஜ ஸ்வாமி கோயில், வெள்ளலூர்.
29. ,, ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயில்
30. ,, நரசிங்கப்பெருமாள் கோயில், இராமனுதபுரம், கோவை.
31. ,, கரிவரதராஜப் பெருமாள் கோயில் நஞ்சுண்டா புரம் கோவை.
32. ,, தேனீஸ்வரமுடையார் கோயில் வெள்ளலூர்,
33. ,, உலகளந்தப் பெருமாள்கோயில், சிங்காநல்லூர்
34. இன்னும் சில ...!

# முன்னுரை ... ...

சிங்காநல்லூர் 'கலைமகள் மன்றத்தார்' நமது கோவைமா நகரத்திலுள்ள, தெய்வங்களின் உறைவிடமாம் ஆலயங்களையும் அங்கு வாழ்ந்து, மக்களையும் வாழவைக்கும் கடவுளின் அவதாரங்களையும் குறித்து 'கோவைக் கோயில்கள்' என்ற புத்தகம் வெளியிட முன் வந்திருப்பது என் மனதைக் குளிரச் செய்தது. இம் முயற்சியில் அவர்கள் தங்களால் இயன்ற அளவிற்கு கோவை நகரிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் சுமார் 10 மைல்களுக்கு எட்டுமளவிலுள்ள ஒரு சில ஆலயங்களை அணுகி அதனதன் விபரங்களை வரலாற்று, சரித்திரப்புகழ், ஆலய அமைப்பு, அந்த ஆலயத்தில் ஒரு குறிப்பிட்ட கடவுளை வழி படக் காரணம். வழிபாட்டு முறை, கொண்டாடும் உற்சவங்கள், அங்குள்ள கல்வெட்டுச் சான்றுகள், இலக்கியச் சான்றுகள் ஆகியவற்றை சேமித்து பொதுமக்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

இந்த 'கோவைக் கோயில்கள்' நம் எல்லோருக்கும் பயனுள்ள ஒரு புத்தகம். இன்று சாதாரணமாக எல்லோரும் இயந்திர வாழ்வு வாழ்கிறோமென்பது அறிந்த ஒன்று. இயந்திரத்திற்குக் கூட எண்ணை போடவேண்டும். அப்பொழுதுதான் அதுவும் சீராக ஓடும். அதுபோல மனித இனத்திற்கும், அவனதுமனம்-ஆத்மா தன் சலிப்புகளையும் — வாழ்க்கைப் பிரச்சனைகளையும் மறந்து சிறிது நேரம் அமைதி பெற்று நிலைக்க அவன் தன்னையும் மீறிய, தனது கட்டுக்கப் பாற்பட்ட ஒரு சக்தி வாழும் இடத்திற்கு—அதாவது ஆலயத்துக்குச் சென்று வழிபடவேண்டும். அந்த சில நிமிட நேர மாறுதல் அவன் பிற்கால வாழ்க்கை இனிக்க உதவுகிறது. தற்காலம் 'கடவுள்' இல்லை என்ற நாத்திக வாதம் ஒழிந்து கடவுளை நம்பும் இளையோர் தோன்றிய காலமாக இன்று திகழ்கிறது. எந்தக் கோயிலிலும் மக்கள் கூட்டம் — குறிப்பாக இளைஞர்கள் கடவுளை வழிபட்டுச் செல்வதைக் காண்கிறோம். அதே போல கோயில்களில் நடக்கும் சமயச் சொற்பொழிவுகளுக்கும் இளையோரைத்தான் அதிகம் காண முடிகிறது. இதிலிருந்து 'நாளைய உலகம் நன்றாக வாழும் வழி நோக்கித்தான் செல்கிறது' என்பதை அறிகிறோம்.

இடைக்காலத்தில் மறந்துவிட்ட 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற பொன்மொழி இன்று மின்னவும், மக்கள் மனதில் பதிந்து அவர்களைச் செயல்படுத்தவும் தொடங்கியுள்ளது.

மக்களுக்கு நல்வழி காட்ட, இன்ப நலமளிக்கும் தெய்வத்தின் திருவடிகளைச் சுட்டும் இந்த 'கோவைக் கோயில்களை' எழுதிய இளைஞர்களின் பணி சிறந்து வளர வேண்டும். இதே ஆர்வம் என்றும் நிலைத்திருக்க இறைவன் அருள் புரிய வேண்டும். வாழ்க அவர்கள் மன்றம்! வளர்க அவர்தம் முயற்சி

கோவை,
*12—2—67.*

**ம. இராமச்சந்திரன்.**
*(கோவைக் கிழார்)*

## 'கோவைக் கோயில்களுக்கு'

## ஆதாரமான புத்தகங்கள்.

1) 'கோவன் புத்தூர், கோனியம்மன் வரலாறு"
*(ஆசிரியர்: கோவை சி. கு. நாராயணசாமி முதலியார்)*

2) "துடிசைப் புராணம்"
*(ஆசிரியர்: துடிசைக் கிழார் திரு. அ. சிதம்பரனுர்)*

3) "பூளைமேடு வரலாறு"
*(ஆசிரியர்: திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு)*

4) " ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி திருக் கோவில் கும்பாபிஷேக விழா"
*(ஆசிரியர்: தவத்திரு சுந்தர சுவாமிகள், கௌமார மடம், சிரவணபுரம்)*

5) " திருப் பேரூர் புராணம்"
" சுருக்க வசனம்"
*(ஆசிரியர்: கச்சியப்ப முனிவர்)*

6) "வேங்கடம் முதல் குமரி வரை"
"*பாகம் 3*"
*(ஆசிரியர்: திரு பாஸ்கரத் தொண்டைமான்)*

# ஏன் எழுதினேம்?

வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் எங்களது
தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இந்தத் தமிழ் புத்தாண்டு நந்நாளில் உங்கள் அனைவரது கரங்களையும் எங்களது 'கோவைக் கோயில்கள்' எனும் புத்தகம் அலங்கரிப்பது ஒரு மகிழ்விற்குரியது. இப்புத்தகம் உங்கள் கரங்களை மட்டுமல்லாமல் இதயங்களையும் கவர்ந்து, சிந்தனைக்குரிய பல விஷயங்களையும்அளிக்குமென்பதிலும் ஐயமில்லை.

இந்தப் புத்தகத்தினை, அதுவும் கோவைமா நகரின் கோயில்களை மட்டும் குறிப்பாக எடுத்துக்கொண்டு நாங்கள் ஏன் எழுத முனைந்தோம்? இக்கேள்வி உங்கள் உள்ளங்களில் எழுவது இயற்கை! இக்கேள்வியே எமது மனதிலும் ஒரு நண்பரால் எழுப்பப்பட்டதால், அக்கேள்வியே ஒரு பெரும் ஆலமரத்தை வளர்க்கும் சிறு விதையாக எமது மனதில் விதைக்கப்பட்டதால், இப்புத்தகத்தை ஒரு ஆலமரமாக மாற்றி அந்த வடிவில் அமைத்து உங்களுக்கு அளிக்கிறேம்! நாம் இந் நாட்களில் நமது கோவைமா நகரைக் குறித்த கைடுகளையும், பல வடிவிலுள்ள புத்தகங்களையும் பார்க்கிறேம். அப்புத்தகங்களில் பூங்காக்கள், மருத்துவ மனைகள், பஸ்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் என்று பல விபரங்களையும், கோயில்களைக் குறித்த விபரங்களையும் அளித்து வருகிருர்கள். ஆனல் ஏனைய விஷயங்களைப் போல கோயில்களைக்குறித்த, மனிதனை ஆத்மீகத் துறைக்கு இழுத்துச் செல்லும் விஷயங்களை அதிகமாக அளித்ததாக எமக்குத் தெரியவில்லை: அது அவர்கள் தவறும் ஆகாது. ஏனெனில் திரும்பிய இடமெல்லாம் கோயில்களைக் கட்டியிருக்கிருர்கள் நம் முன்னேர். அவை அனைத்தையும் குறித்து விபரங்களை அளிக்க வேண்டுமென்ருல் அதற்கே ஒரு தனி புத்தகம் போடவேண்டும். அந்தப் பணியை நாங்கள் ஏற்று செய்ய முன்வந்துள்ளோம். இந்நாளில் இயந்

திரமாக மாறிவரும் மனிதன் மனிதனுக மாறுவதற்கும், அவனது மனம் பல தொல்லைகளிலிருந்தும் விடுபட்டு சிறிது நேரமாவது அமைதிபெறவும் வேண்டியது அவசியம். அதற்கு நாம் கோயில்களுக்கு கிருத்திகை போன்ற விசேஷ நாட்களில் சென்று வருகிறோம்! ஆனுல் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க, பாடல்கள் பெற்ற கோயில்களும் நமது கோவைமாநகரத்தில் இல்லாமலில்லை. அவற்றை எல்லோருக்கும் எங்களால் இயன்ற அளவில் அறிமுகப்படுத்தி இதன் மூலம் எல்லோரும் அக்கோயில்களுக்கும் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களையும் தரிசித்து வரவும், அப்படியே அக்கோயில் ஜீரணமாகும் நிலையில் இருந்தால் அதைத் திருப்பணி செய்ய நம்மால் இயன்ற சிறு உதவியையும் செய்துவிட்டு வர ஒரு வாய்ப்பும் கிடைக்குமல்லவா?

இவை அனைத்தையும்விட எமது குறிக்கோளாக இத்துறையில் ஒரு புத்தகத்தை வெளியிடக் காரணமாக அமைந்தது எமது மன்றமான 'கலைமகள் மன்றத்தின்' வளர்ச்சியும்தான். கடந்த பதினைந்து ஆண்டுகளாக (இன்று 14—4—67ல் 15வது ஆண்டு விழா) வெற்றிகரமாக இலக்கியப் பணிகளிலும், பொதுத் துறையிலும் பீடு நடை போட்டு முன்னேறிவரும் எமது மன்றம் சுமார் 2000 புத்தகங்களைக் கொண்ட ஒரு நூலகத்தையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. அதன் வளர்ச்சி இப்புத்தகத்தின் வாயிலாக வரும் சிறு துகையில் ஓரளவிற்கு உயரும்! ஆதலால் எமக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் ஒரு செயலைச் செய்வதில் பெருமைப்படுகிறோம். நீங்கள் வாங்கும் ஒவ்வொரு புத்தகமும் எம்மை வளர்க்கும் ஒவ்வொரு முன்னேற்றப்படியாக அமையும் என்பதும், அதே நேரத்தில் இப்புத்தகமும் உங்களுக்கும் ஒரு உறுதுணையாக விளங்கி உங்கள் உள்ளங்களை நிரப்புமென்பதில் எமக்குச் சிறிதும் ஐயமில்லை. பல இடர்பாடுகளுக்கிடையே, பெரியவர்களின் ஆசியுடனும் பலரது ஒத்துழைப்புடனும் இப்புத்தகத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்!

கடைசியாக இந்த எமது 'கோவைக் கோயில்கள்' என்னும் புத்தகம் வெளிவருவதற்கு பல பெரியோர்கள் பல விதங்களிலும் உதவியுள்ளனர். அவர்களை எங்களால் மறக்கவே முடியாது. கோயில்களின் வரலாறுகளைப்பற்றி முகஞ்சுளிக்காதுவிபரங்கள் அளித்த நிர்வாக அதிகாரிகள், அர்ச்சகர்கள் ஆகியோருக்கும், விளம்பரங்கள் ஈந்து பொருளுதவியளித்த பெரியோர்களுக்கும்

**For Strength Durability &**

**modern Finish !**

Phone : 22511 Grams : 'NURSMAN'

# ESSEN TILES

BEST TESTED

**MOSAIC &**

**MARBLE TILES**

FACTORY—KANJIKODE—PALGHAT—

PGT :

Phone : 279

CONTACT :

S. NARASIMHAN, M A. S R. E.

IRON -STEEL

111, MILL ROAD,

COIMBATORE—1.

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !

ஜீவனுள்ள சிறந்த போட்டோக்கள்,
எழில் மிக்க என்லார்ஜ்மெண்ட்கள்,
வண்ண எழில் கலர் போட்டோக்கள்
எடுக்கச் சிறந்த இடம் !

# சிவராம் ஸ்டுடியோ

சிங்காநல்லூர்.

கோவை-5.

Prop: A. S- வெங்கடாசலம்.

# 'Gopal Enterprises,

39. SAROJINI STREET,

RAMNAGAR. COIMBATORE-9

Phone : 25276. Cable : 'GEEYEE'




PLEASE CONTACT FOR :

**'PSG' Lathes, Motors, Pumpset, Engine, Laboratory, Equipments, Baling Presses, etc.**

**'BHAGWATI BANI' chucks.**

**'ELECTRA' Generating Sets**

**'LANTIS' Weighing Machines.**

**'MALIK' Electric Arc Welding Transformers**

**'FESTO—ELGI' Wood Working Machines.**

**'LAKSHMI RATHAN' Spindles**

*With the best compliments from:*

# THE NARASIMHA MILLS PRIVATE LTD.,

No. 1, V. PALANISWAMY NAIDU STREET,

AVANASHI ROAD.

COIMBATORE-18.

Grams :
'LION'

Phone :
24051 &
24052.

எமது இதயங்கனிந்த நன்றி. மேலும் இந்த நூலுக்கு தனது வயதான காலத்திலும் கூட, சிறிதும் சிரமம் பாராமல் முன்னுரை ஈந்து 'கோவைக் கோயில்களின்' மதிப்பினை உயர்த்திய பெரியவர் திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் (கோவைக் கிழார்) அவர்களுக்கு எமது பணிவு கலந்த நன்றி உரித்தாகுக. அடுத்தபடியாக இந்த 'கோவைக் கோயில்கள்' தொகுப்பு வேலைகளில் எங்களுக்கு பேருதவியாக இருந்த சிங்காநல்லூர் வாரவழிபாடு சங்கத்தலைவர் திரு. கோ. அ. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், இந்தக் 'கோவைக் கோயில்கள்' உருவாக. துவக்க முதல் ஒவ்வொரு கட்டத்திலும் இந் நூலை தனதாகவே பாவித்துபேருதவிதந்த நண்பர் திரு. ந. இராமநாதன் அவர்களுக்கும்எமது உளமார்ந்த நன்றி.

எம்மால் இயன்ற சக்திகளுக்குட்பட்டு முடிந்த கோயில்களைப்பற்றி மட்டும்தான் விபரங்கள் அளிக்க முடிந்தது. நல்லன நாடி அதேநேரம் தீயன இருப்பின் அவற்றினை நீக்கி எம்மை ஊக்குவிக்க கோருகிறோம்........உங்களது அன்பும் ஆதரவும் எமது மன்றத்தை வளர்க்குமென்பதில் ஐயமில்லை. எம்மை வாழ்த்தி வளர வழிசெய்யுங்கள்.

வணக்கம் ஆசிரியர்கள்

**கலைமகள் மன்றம்,** சிங்காநல்லூர்


**எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

'வரப்புயர வழி செய்யும்'

'விக்டர் பம்புகள்'

தயாரிப்பாளர்கள் :

**கலா இண்டஸ்டிரீஸ் பிரைவேட் லிமிடெட்,**

**துடியலூர் அஞ்சல்,**

**கோவை - 11.**

## சற்று நில்லுங்கள்...!

கோவை மா நகரத்தின் கோயில்களேயும் அதன் வரலாறுகளேயும் தெரிந்துகொள்ளுமுன் கோபுரமில்லாத, 'கலேமகளின்' திருநாமம் கொண்ட சிறிய ஆலயத்தினுள் நுழைவோம்.

நுழைந்ததும் உள்ளே வரிசையாக அடுக்கப்பட்டுள்ள எண்ணற்ற கலேப் பொக்கிஷங்கள், சுவற்றிலே மாட்டப்பட்டுள்ள 'கலேமகள்', 'மலேமகள்', 'அலேமகள்' ஆகியோரின் திரு உருவப் படங்கள், நாட்டின் சுதந்திரம், மதம், ஆன்மீகம் ஆகியவை தழைக்கப் போராடிய தலேவர்களின் ஓவியங்கள், மணம் கமழும் 'கலே மலர்கள்' ஆகியவை நமக்கு ஒரு சரித்திரத்தையே கூறுகின்றன.

இச்சிறு ஆலயம் 'கலேமகளின்' பெயர் தாங்கி கடந்த பதினேந்து ஆண்டுகளாக கலேத்தொண்டு புரிந்து வருவது அனேவரும் அறிந்த ஒன்று. இம்மன்றத்தின் பதினேந்து பின்னேடுகளேப் புரட்டினுல், உழைப்பும் மன உறுதியும் அடிப்படையாகக் கொண்ட ஒரு வரலாறு தென்படும்.

1952-ல் ஜனவரி மாதம் இம்மன்றம் துவக்கப்பட்டது. 'விளேயும் பயிர் முளேயிலே' என்பது போல அன்று சுமார் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் சிலரால் சிறு திண்ணேயிலே அரும்பிய இம்மன்றம் இன்றுவரை ஆற்றிய செயல்கள் பல. தமிழில் இயல், இசை, நாடகம் வளர உழைத்துள்ளது: இயலுக்கு ஆன்ருேர் பலரும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய பல விழாக்களுண்டு. மேலும் மன்றத்தில் திங்கள் தோறும் நடத்தப்படுகின்ற 'இலக்கிய அரங்கங்கள்' இதுநாள் வரை எண்ணிக்கையில் 44 ஆக வளர்ந்துள்ளது, நாடகத் தமிழும், அத்துடன் இசைத் தமிழும் வளர 'ஸ்ரீ கிருஷ்ணன் தூது முதல் 'அன்புச் சுழல்' வரை எட்டு நாடகங்களே அரங்கேற்றியுள்ளது. இதற்கெல்லாம் மேலாக தனது மூச்சாக அன்று தோன்றிய சிறு நூலகம் இன்று சுமார் இரண்டாயிரம் புத்தகங்கள் வரை பெரிய நூலகமாக வளர்ந்து, மக்களிடையே

படிக்கும் ஆர்வத்தை வளர்க்கிறது, மேலும் ' கலை மலர் ' என்னும் இலக்கிய ஏட்டினை மூன்று மாதத்திற்கொன்ருக வெளியிட்டு அதன் மூலம் வருங்கால எழுத்தாளர்கள், ஓவியர்கள், கவிஞர்கள் ஆகியோரை உருவாக்குகிறது. எமது 'கலைமலர்' இதுநாள் வரை16 இதழ்களை மணஞ்சொரிய விரித்துள்ளது.

இவ்வாறு பதினைந்து ஆண்டுகளைத் தனது முன்னேற்றப் பாதையில் கடந்துவிட்ட எமது மன்றம் சொந்தமாக ஒரு கட்டிடத்தை அமைத்துக்கொள்ள உழைக்கிறது. ஆரம்ப முதல் அன்பும் ஆதரவும் அளித்துவரும் பெரியோர்கள் எமது இந்த முயற்சியிலும் கைதூக்கி முன்னேற்றப்பாதை காட்டி ஆதரிப்பார்கள் என்று நம்புகிறது.

ஆயிற்று சிறு கோயிலைப்பற்றித் தெரிந்துகொண்டுவிட்டோம்! அதன் வேண்டுகோளும் செவியில் ஒலிக்கிறது! வாருங்கள், அடுத்த கோயில்களுக்குச் செல்வோம்!

**With the best compliments from:**

# Sri Rajaram Commercial Institute

( ESTD. 1949 )

SINGANALLUR P. O.

COIMBATORE-5.

**(Approved by the Govt. of Madras)**

# ஆசிச் செய்திகள்

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு**
**ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம், காஞ்சீபுரம்**

கோயமுத்தூருக்கு ஸமீபத்திலிருக்கும் சிங்காநல்லூர் அக்ர ஹாரத்தில் அனேக ஆஸ்திகர்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கலைமகள் மன்றத்தின் நிர்வாகத்தினர் கடந்த பதினுன்கு வருஷங்களாக பொது ஜனங்களின் அறிவுவளர்ச்சிக்காக நூலகம் நடத்துவது முதலிய தொண்டுகளை செய்து வருவதையும், ஸமீபத்தில் இம்மன்றத்தின் பதினைந்தாவது ஆண்டுவிழாவைக் கொண்டாட இருப்பதையும், அச்சமயத்தில் கோயமுத்தூர் நகரத்திலுள்ள கோயில்களின் விவரங்களடங்கிய 'கோவைக் கோயில்கள்' என்னும் புத்தகத்தை வெளியிட முன்வந்திருப்பதையும் அறிந்து ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் ஸந்தோஷிக்கிருர்கள்.

அன்பர்கள் எல்லோரும் இம்மன்றத்தின் ஆண்டு விழாவிலும் இதன் மற்ற ஸத்கார்யங்களிலும் ஒத்துழைத்து எல்லா மங்களங்களையும் அடையும்படி ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் அனுக்ரஹிக்கிருர்கள்.

முகாம் : காளஹஸ்தி
தேதி : 28—11—1966

ஆக்ஞைப்படி
**எஸ். சாம்பமூர்த்தி சாஸ்திரி,**
மானேஜர்.

**கலைமகள் காரியாலயம்**
மயிலாப்பூர் :-: சென்னை 4.

கோவை நகரின் கோயில் வளத்தைக் குறிக்கொள்ள
மேவும் நூலை வெளியிடுகின்ருர்! விழைவோடே
சேவை செய்யச் சிங்காநல்லூர் திகழ் கின்ற
தாவில் சீரார் கலைமகள் மன்றம் சார்ந்தோரே !

பத்தி மணக்கச் சரிதை நயக்கப் பல செய்தி
வைத்து விரித்துத் தெளிவுற எழுதி மலரச் செய்
இத்தகு நூலை யாவரும் ஏற்றே இனிதாகச்
சித்த மகிழ்ச்சி பெற்றுயர் வுறுக திருவருளால்.

**கி. வா. ஜகந்நாதன்.**

கலைமகள் மன்றம் தன்பதினைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் ஓர் கலைமலர் வெளியிட இருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி.

கோயிலைக் கட்டிய மன்னர்கள் மறைந்தார்கள். அவர்கள் வாழ்ந்த அரண்மனைகளும் மறைந்தன. காலம் கடந்து, என்றும் நின்று, நிலைத்து, எல்லோருக்கும் மன அமைதியை-நல்வாழ்வை — இகபர இன்பத்தை — நல்குவது தெய்வக் கோயில்கள்தான். கோயமுத்தூரைச் சுற்றியுள்ள கோயில்களைப் பற்றிய வரலாறுகள் மலரில் இடம் பெறுவதாகத் தெரிந்ததால் இன்பம் இரட்டிப்பாகிறது.

மன்றத்தின் ஒன்பது குறிக்கோள்களும் மன்றம் செயலாற்ற விரும்பும் எழுவகைப் பணிகளும் இனிது கைகூட, எல்லாம் வல்ல செந்தில் முருகனின் சீரடி நினைந்து, வணங்கி வாழ்த்துகிறேன்.

என்றும் தங்கள் அன்பன்,

**சிவகலை மு. சுப்பையா.**


While at Coimbatore:

Visit

**'MISHTAN'**

The Quality Sweet House

The Most Popular Restaurant of the Town.

- Famous for its Quality Sweets
- Delicious Bombay Style Sweets
- Clean & Polite Services.

*Braneh* :

R. G. STREET (Opp: Teppakulam Maidan)

# கோயமுத்தூர்—பெயர் காரணம்.

**கல்வெட்டுச் சான்றுகள் :-**

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் கொங்கு நாடு மரங்கள் அடர்ந்த பெருங்காடாக இருந்தது அக்காலத்தில் 'கோவன்' என்ற இருளர் தலைவன் 'இருளர்பதி' என்ற சிற்றூரை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தான். அவன் பெயரை முன்வைத்து 'கோவன் புத்தூர்' என்று வழங்கப் பட்டது. பிறகு கரிகாலசோழன், சமய முதலி. சேரமான் பெருமாள் முதலியோர்கள் வந்து காடுவெட்டி நாடுண்டாக்கி ஊரைப் பெரிதாக விளங்கும்படி செய்தார்கள், முதன் முதலில் இந்த கொங்கு நாட்டை அரசாண்ட சேர மன்னர்கள் கோவன் புத்தூர் நிலப்பரப்புக்கு 'வீரகேரள நல்லூர்' என்று பெயரிட்டு அழைத்துவந்தனர். இது நாளடைவில் சுருங்கி 'வீர கேரளம்' என்ருகி, இப்பொழுது கோவை வேளாண்மைக் கல்லூரிக்கு அருகிலுள்ள ஒக்கிலியர்பாளையமாக உள்ளது.

இது குறித்த விபரங்கள் அடங்கிய கல்வெட்டுகள் பேரூர் பட்டீஸ்வரர் கோவிலிலும், 'உடுமலை குமரலிங்கம் கோவிலிலும்' உள்ளன.

கி. பி. 1183—1206-ஆம் ஆண்டில் அரசாண்ட 'வீர சோழன்' காலத்து கல்வெட்டு ஒன்று 'வெள்ளலூர் தேனீஸ்வரமுடையார்' ஆலயத்தில் காணப்படுகிறது. அதிலும் 'கோவன்' என்ற பெயர் காணப்படுகிறது. பின்னர் 'பேரூர் பட்டீஸ்வரர்' கோயிலில் காணப்படும் இன்னெரு கல்வெட்டில் 'கோவன் புத்தூர்' என்ற 'வீர கேரள நல்லூர்' என்ற கல்வெட்டும் இவ்வூரையே குறிப்பதாக தெரிகிறது.

இவ்வாறு கி. பி. 11-ம் நூற்ருண்க்கு முன்னரே, கோவன் என்ற பெயர் புனைந்து கொண்ட நாட்டின் தலைவன் அல்லது குறுநில மன்னன் இங்கு வசித்திருத்தல் வேண்டும் என்றும், அவன் ஒரு புத்தூரை தன் பெயரால் ஏற்படுத்தியிருக்கவேண்டுமென்றும், இவை காரணமாக இப்பெரு நகரத்திற்கு 'கோவன் புத்தூர்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கவேண்டுமென்றும், அதுவே நாளடைவில் மருவி 'கோயமுத்தூராக' மாறியது என்றும் கூறலாம்.

**இலக்கியச் சான்றுகள் :-**

இருளர் தலைவன் கோவன் ஆட்சிக்குப்பிறகு பல அரசர்கள் கொங்கு நாட்டை அரசு புரிந்தனர். பின்னரே சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந் தொகை, மதுரைக் காஞ்சி முதலிய சங்க நூல்களில் சிறப்பாகப் பேசப் பட்ட 'இளங்கோசர்' அல்லது 'கோசர்' என்பவர்கள், பலம் குன்றியிருந்த கொங்கு நாட்டைப் பிடித்து அரசு புரிய ஆரம்பித்தனர். இக்கோசரே, "வேன் வேலிளம்பில் கோசர்" (புறம் 169) 'வலம் புரி கோசர் (புறம் 283) 'நனைக்கள்ளின் மனைக்கோசர்' (புறம் 396) 'நாலூர் கோசர் நன்மொழி' ,'ஒன்று மொழிக் கோசர்" (குறுந் தொகை 15 முதல் 73) "மெய்ம்மலி பெரும்பூ செம்மற்க்கோசர்" "வடுவுடை முகத்தற் கடுங்கட் கோசர்," "காப்புக்கை நிறுத்த பல்வேற்கோசர்," வாய்மொழி நிலை இயசேன் விளங்கு நல்லிசை வளங்கொழு கோசர்," (அகநானூறு 15, 90, 113, 205) "அவையகம் விளங்க நான் மொழிக் கோசர்," 'கடந்தடு வாய் வாளிலம் பல் கோசர்' (மதுரைக் காஞ்சி 507, 778), "கொங்கிளங் கோசர் குறும்பு செலுத்துவார்" (சிலப்பதிகாரம் உரை பெருங்கதை) என்று பாரட்டப்பட்டவர்கள்.

இந்த கோசர்கள் மெய்மை, வாய்மை, வீரத்தைப் போலவே தமிழ் வளர்ப்பிலும் தன்னிகரற்று விளங்கினர். தமிழ்ப் புலவர் களைப் போற்றி வளர்த்த கடையேழு வள்ளல்கள் அனைவரும் காலத்தால் கவரப்பட்டனர். தமிழை இனித் தாங்கிக் காப்பார் யாரோ?" என்று புலவர்கள் ஏங்கி வாடினர். அக்காலத்தில் இவர்கள் இந்த ஏழுவரின் கடமையையும் தான் ஒருவனே தனியனாய் நின்று தாங்கும் வன்மை வாய்ந்த ஒருவனைக் கண்டனர். 'முதிர மலையில்' குமணன் என்ற பெயரோடு அவன் செங்கோலோச்சி வந்ததை அறிந்து குமணனை அணுகினர். ஆனால் விதி வசமாக 'குமணன்' சொந்த தம்பி யால் காட்டிற்குத் துரத்தப்பட்டிருந்தான்: என்று அறிகிறோம். இதிலிருந்து கோவன் புத்தூர் வாசிகள் தமிழ் பற்றுடனும் விளங்கி வந்தனர் என்று அறிகிறோம்!

இவ்வாறு கோவன் இனத்தார் மெய்யுணர்வு, வாய்மை, வீரம், தமிழ் வளர்ச்சி ஆகியவற்றில் சிறந்து விளங்கினர் என்று மேற்கண்ட சான்றுகளிலிருந்து தெளிவாகிறது.

இனி மேலே சென்று 'கோவன் புத்தூர் கோயில்களிலுள்ள' தெய்வங்களை தரிசிக்கலாம் வாருங்கள்! ............... !

# ஸ்ரீ கோனி அம்மன் கோயில்

பெரிய கடைவீதி, கோவை.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே! அருளே! உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியாமுத்தி ஆனந்தமே!

சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன் இப்பொழுது கோயமுத்தூர் என்று வழங்கி வரும் 'கோவன் புத்தூர்' இருளர்களின் தலைவனான கோவன் என்பவனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. தனது முன்னோர்கள் செய்து வந்த வழக்கப்படி கோவன் தங்கள் குடிசைக்கு சிறிது தூரத்தில் வடக்குப் பக்கத்தில் சிறு கோவில் ஒன்று எடுத்து ஒரு கல் நட்டு தானும் தனது இனத்தார்களும் அதனைத் தனது குல தெய்வமாக நம்பி வழிபட்டுக் கொண்டாடி வந்தார்கள். இக் கோவில் தற்பொழுது கோவன் புத்தூருக்கு வடக்கில் துடியலூருக்கு செல்லும் நடைவழியில், சங்கனூர் பள்ளத்திற்கு அருகில், பாழடைந்து கிடக்கிறது. மக்கள் இக் கோவிலை 'கோனி அம்மன் பழைய கோவில்' என்று கூறுகின்றனர்.

இதற்குப்பின் சங்க இலக்கியங்களில் புகழப்படும் "இளங்கோசர்" அல்லது "கோசர்" என்ற ஜாதியினர் அப்பொழுது சிறந்த வீரர்களாய் இருந்தனர். அவர்கள் தாங்கள் அரசு செய்யும் கொங்கு நாட்டின் மீது பக்கத்திலுள்ள சேரர்கள் படையெடுத்தால் அதை தடுப்பதற்கு பலமான ஒரு மண் கோட்டையும் பேட்டை ஒன்றையும் கடடுவித்தனர். அங்ஙனம் கட்டிய கோட்டைக்குக் காப்பு தெய்வமாகவும் தன் பெயர் விளங்கும் படியும் சிறிய கோவில் ஒன்றினையும் எடுத்து, அந்த தெய்வத்திற்கு கோனி என்று பெயரிட்டு கோயில் கொள்ளச் செய்தார்கள். அக் கோயிலே இப்பொழுது நகர நடுவில்

விளங்கும் கோனி அம்மன் கோயில் என்பது. இக் கோயிலைத் தான் மக்கள் 'புதிய கோனியம்மன் கோயில்' என்று அழைக்கின்றனர்.

கோச அரசர்களால் கட்டப்பட்ட கோவன் புத்தூர் கோட்டையும் பேட்டையும் புகழ் பெற்று வரும் காலையில் 'சேரன் செங்குட்டுவன்' கற்புடைத் தேவி கண்ணகிக்கு சிலை வடிக்க இமயத்திற்கு கல்லெடுக்கச் சென்றான். அப்படிச் செல்கையில் முதன் முதலில் அவனுடைய படைகளுக்கு கோவன் புத்தூரின் காப்பு அரணாக இருந்த கோட்டை பலியாயிற்று. கோட்டை அழிந்ததால் கோசர் ஆட்சி அடங்கி அவர்களும் அக்கோட்டையை விட்டு அகன்றனர்

கோசர்களால் அமைக்கப் பட்ட கோனி அம்மன் கோயிலிலுள்ள மூலஸ்தானத்து கற்சிலை தமிழ் நாட்டு சிற்ப சாஸ்திரத்தை தழுவி சித்தரிக்கப்பட்டிருந்தது. அத் திருவுருவம் பராசக்தியின் பல கோடி உருவங்களில் ஒரு வகையைச் சார்ந்தது. சிரசில் கிரீடமும், ஆயுதங்கள் ஏந்திய நான்கு திருக்கரங்களும் அழகமைந்த திருமேனியும் நின்ற கோலமும் ஆக விளங்கியது. இச்சிலை இளங்கோசர் ஆட்சிக்குப் பின் எக்காரணத்தாலோ உடல் வேறு சிரம் வேறாக துண்டிக்கப் பட்டு போயிற்று. இங்ஙனம் துண்டு பட்ட பழைய கோனியம்மன் சிலையின் சிரசை மட்டும் அதன் அழகைக் கண்டு வியந்த அன்பர்கள் அதனை எறிந்து விடாமல் இன்றுள்ள கோயிலின் மேற்கு பிரகாரத்தில் வட கோடியிலுள்ள கன்னிமார் கோயிலுள் கழுத்தளவுள்ள சிரத்தைஒழுங்காக பதித்து காலந்தோறும் பூசை செய்து வருகின்றனர்.

பின்னர் கொங்கு நாட்டை கைபற்றிய மைசூர் அரசர்களில் ஒருவர் இக் கோயிலில் பூசை இல்லாதிருப்பதை அறிந்து வருந்தி சிதைந்து போன கற் சிலைக்கு பதிலாக தாமும் தமது முன்னோர்களும் வழிபட்டு வந்த மகிஷாசுர மர்த்தனியைப் போல் ஒரு கற்சிலை எடுத்து வேதாகம விதிப்படி பிரதிஷ்டை செய்து தேர்த் திருவிழாவும் பூசையும் செய்து வந்தனர்.

மூலஸ்தானத்தில் கோயில் கொண்டிருக்கும் மகிஷாசுர மர்த்தினியின் கற்சிலை சுமார் 3 அடி அகலமும் 2½ அடி உயரமும் உள்ளது. அம்மனின் தோற்றம், முகத்தில் மூண்ட கோபமும், உக்ரமான பார்வையும் சிங்க வாகனத்திலிருந்த படியே மகிஷாசுரனுடைய சிரத்தை வெட்டி வீழ்த்தி வீர வாகை சூடியது போல் விளங்குகிறது. அக்கினிக் கம்பமிட்ட எட்டாம் நாளில் அம்மனுக்கு பொங்கலிட்டு மாவிளக்கு வைத்து பூசை செய்வார்கள்.

கோனியம்மனின் பிரம்மோற்சவ தேர்த் திருவிழா மாசி மாத வெள்ளிக்கிழமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தற்பொழுது உள்ள சிறிய கோயிலை புதுப்பிக்க எண்ணி 5 நிலை ராஜ கோபுரம் மூன்று நிலை உள் கோபுரம், கல்யாண மண்டபம், அதையொட்டிய மண்டபம், கர்ப்ப கிருகம், அர்த்த மண்டபம், கொண்ட கோயிலாக சுமார் 12 லட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பு செய்ய துவங்கி அற நிலயக் குழுவினரின் தீவிரமான முயற்ச்சியில்மேற்கண்ட திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தினமும் மாலை நேரங்களில் தேவார வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு சிறந்து விளங்கும் கோனி அம்மனைக் கண்டு தரிசித்த மகிழ்ச்சியுடன் அடுத்த கோவிலுக்கு புறப்படுவோம்.

---

*With the best compliments from :*

Phone : 27457. Tel : "KUSHUM"

**M. K. Bhatt & Company**

COTTON & COTTON WASTE MERCHANTS,

& EXPORTERS,

**POST BOX No. 52**

COIMBATORE

# ஸ்ரீ சங்கமேஸ்வரர் கோயில்

## கோட்டைமேடு, கோவை.

கோவையில் கோட்டைமேடு என்று அழைக்கப்படும் இடத்தில், ஒரு பெரிய கோட்டை இருந்ததாகவும், அதன் மையத்தில் இந்த ஆலயம் அமைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னல் சேரனின் படையெடுப்பால் கோட்டை அழிந்து போனலும், தான் மட்டும் மிஞ்சிய கோயிலே இன்று நாம் காணும் கோட்டை ஈஸ்வரன் கோயிலாகும்.

இக் கோட்டை "ஈஸ்வரன் கோயில்" கோவை பெரிய கடை வீதி மணிக் கூண்டுக்குத் தென்புறமாகச் செல்லும் வீதியில் அமைந்துள்ளது. இக் கோயில் கிழதிசை நோக்கி உள்ளது. கோயிலுக்கு முன்புறம் அரச மர விநயகர் அமைந்துள்ளார். அதையொட்டிக் கோயிலின் சிறிய தேர் உள்ளது. நுழை வாயிலைக்கடந்ததும் ஒரு மண்டபத்தைக் காண்கிரும். அதையடுத்து பிராகாரத்தைச் சுற்றி வரும் போது, வலப்புறத்தில் அரச மரப்பிள்ளையார் அழகாக அமர்ந்துள்ளார். அரச மரத்தைச் சுற்றி, மேலே செல்கையில் சூரிய நாராயணரையும், தனிக் கோயிலில் கிழதிசை நோக்கி யதிரு நீலகண்டரையும், அதையும் தாண்டி ஸ்ரீ தக்ஷிண மூர்த்தி, விநயகர் ஆகிய தெய்வங்களையும் காணலாம் அதையடுத்து இடது பிராகாரத்தில் சண்டிகேஸ்வரர், துர்க்கையம்மன், காலபைரவர் மற்றும் இடது கோடியில் நவக்கிரஹங்களையும் தரிசிக்கலாம். இவைகளைத் தாண்டி மையத்திலுள்ள ஸ்ரீசண்முக சுப்ரமணியசுவாமி கோயிலில் நுழைகையில் சுவாமியை நோக்கிய மயில் வாகனத்தைக் காண்கிரும் அதையும் தாண்டிச் செல்கையில். உள்ளே சன்னதிக் கெதிராகக்கோயிலின் தீர்த்தக் கிணறு உள்ளது. எதிரிலே ஸ்ரீ சண்முக சுப்ரமணிய சுவாமி, சம்ஹார சுப்ரமணியராகக் கைதனில் வேலொடும், பன்னிரு கைகளுடனும் போர்க் கோலம் பூண்டு காட்சி தருகிறர். இது போன்ற வடிவுடைய சம்ஹார சுப்ரமணியர் இந்தியாவிலேயே ஒரிசாவில் ஓர் இடத்திலும், இங்கும் தான் உள்ளது என்று கூறுகிறர்கள். உற்சவ மூர்த்தி நல்ல செப்புச்சிலை வடிவில் காட்சி தருகிறர். வெளி மண்டபத்தின் சுற்றுச் சுவர்களில் ஆறுமுகனின் திரு உருவ ஓவியங்கள் அழகாக வரையப்பட்டிருக்கின்றன. அதையடுத்து மண்டபத்தின் இடப்புறம் கோயிலின் உற்சவமூர்த்திகள் மனதைக் கவர்கின்றன.

ஆறுமுகன் கோவிலின் வலப்புறத்தில், சங்கமேஸ்வரர் சுயம்புலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். ஷண்முகருக்கு இடப்புறத்தில் விசாலாட்சியம்மன் சன்னதி உள்ளது. கோயில் சிவன் கோயிலானுலும் இங்கு அவர் தம் தனயர் ஆறுமுகருக்கே பெருமை கோவிலில் சிறப்பாக சித்திரை தேர்த்திருவிழா பதினேரு நாட்களும். தைப்பூசை, ஆருத்திரா தரிசனம், நவராத்திரி, விஜயதசமி, கந்தசஷ்டி ஆகிய உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. தவிர, பிரதி மாதம் கிருத்திகை விமரிசையாக நடைபெறுகிறது. ஒவ்வொரு ஞாயிறும் வார வழிபாடு நடைபெறுகிறது.

இப்படியாக முருகனையும் அவர் தம் அம்மையப்பனையும் ஒருங்கே தரிசிக்கும் பேறு பெற்றுத் திரும்புகிறேம்.

போன் : 24187.

## 'கிரவுன் ஸ்டுடியோ'

பெரியகடை வீதி,

கோவை.

**க்ரூப் போட்டோக்கள், பிளாஷ் போட்டோக்களுக்கும் சிறந்த இடம்!**

குறைந்த செலவில் புதிய கருவிகளைக்கொண்டு

டாக்குமெண்ட் காப்பிகள், பத்திரங்கள், கடிதங்கள்

ஆகியவை தெளிவாக எடுத்துக் கொடுக்கப்படும்.

சிங்காநல்லூர் 'கலைமகள் மன்றம்'

நூலகத்தின் 15-வது ஆண்டு விழாவிற்கு

எமது உளம் , கனிந்த நல்வாழ்த்துக்கள் !

* பெங்காலி & பாம்பே ஸ்வீட்கள்
* நவீன ரக காரவகைகள்
* சத்துள்ள பானங்களுக்கும்

"ஆரிய பவன்"

"ஸ்வீட்ஸ்"

—நகரில் சிறந்த அலங்கார அமைப்புள்ள

—பாம்பே ஸ்டைல் சைவ சிற்றுண்டிசாலை

★

ராஜ வீதி,

(புது மார்க்கெட் எதிரில்)

கோயமுத்தூர்-1.

எமது தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

P S G



# TMS AND COMPANY

123, AVANASHI ROAD, **COIMBATORE-18.**
**Phone: 22762** **Grams: 'DISTRIBUTS'**

பொது மக்களுக்கு எமது தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## "மினி எலக்டிரிகல் மானுபாக்சரிங் கம்பெனி"

மேட்டுப்பாளையம் ரோடு,
*சாயிபாபா மிஷின்* P. O.

கோயமுத்தூர்-11.

தயாரிப்புகள் :—

**'MINI'** சிங்கிள் பேஸ், த்ரீ பேஸ்,

மோட்டார்கள், டொமஸ்டிக் பம்புகள்

மானோ பிளாக் பம்புகள்.

*With the best compliments from :*

SRI DEVI CYCLE, ELECTRICALS
AND SOUND SERVICE,

N. G. R. GROUNDS,
SINGANALLUR
COIMBATORE-5.

With the best compliments from :

Phone : 22103. Grams : ALLIED

# 'PURUSHOTAMDAS MADHAVDAS'

POST BOX NO. 529

17/10, OPPANAKARA STREET,

COIMBATORE-1.

DEALERS IN :

**Ball Bearings, Textile Stores & Hessain cloth, Ring Travellers, Leather Belting, 'GOOD YEAR' Beltings, Rayon Gord-Cone Drum Belts, V-Ropes**

**Round Ropes & any Size**

# ஸ்ரீ விநாயகர் கோயில்

ஈச்சனாரி, கோவை.

---

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது —
பூக்கொண்டுதுப் பார்திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார்தமக்கு.

கோவை பொள்ளாச்சிப் பதையில் 12-ம் நெ. பஸ்ஸில் இக் கோவிலுக்குச் செல்லலாம். ஈச்சனாரி கோவிலில் இறங்கியதும் ஒரு அதிசியத்தைக் காண்கிறோம். அந்த வழியாகப் போகும் பஸ் கார் ஆகியவற்றின் வேகம் சற்று தணிந்து இந்த விநாயகரை கரம் கூப்பி வணங்கியோ, சிரமத்தைப் பாராமல் இறங்கி ஒரு தேங்காய் வாங்கி சிதறு தேங்காய் உடைத்தோ, தேங்காய்பழம் ஆகியவற்றுடன் விநாயகரை தரிசித்து விட்டோ, அவர்கள் செல்வதைக் காணலாம். அதெல்லாம் சரி, நாமும் ஸ்ரீ விநாயகரை தரிசிக்கவேண்டாமா? வாருங்கள் கோவிலுக் குள்ளே நுழையலாம்.

கோவை பொள்ளாச்சிப் பாதையில் ஈச்சனாரி என்ற சிறு கிராமத்தில் உள்ளது இக் கோயில்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் மதுரையை திருமலை நாயக்கர் அரசாண்ட காலத்தில் பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்ய ஒரு பெரிய விநாயகர் சிலையை வண்டியில் ஏற்றிவரும்போது இந்த ஈச்சனாரி கோவிலுக்கு அருகில் வரும் போது வண்டியின் அச்சு முறிந்துபோக இந்தப் பிள்ளையாரை மறுபடியும் வண்டியில் ஏற்றிக் கொண்டு போகாமல் இங்கேயே பிரதிஷ்டை செய்து விட்டனர்.

சிறு மேடையில் இருந்த இந்த விநாயகர் சுமார் 50 ஆண்டு களுக்கு முன்னால் கோயில் திருப்பணி செய்யப்பட்டு அக் கோயிலில் பிரஷ்திடை செய்யப்பட்டார். கிழதிசை நோக்கிய கோவில். ஸ்ரீ விநாயகர் சுமார் 6 அடி உயரத்தில் அமர்ந்த நிலையில் உள்ளார். ஸ்ரீ விநாயகருக்கு அருகில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி உள்ளார். முன் பிராகாரமும், அர்த்த மண்டபமும், அதையடுத்து கருவறையில் ஸ்ரீவிநாயகரும் உள்ளார் பிராகாரச் சுற்று வரும் போது கோயிலின் சிறு கோபுரத்தையும் தரிசிக்கலாம்.

இக் கோவிலுக்கு தினமும் எந்நேரமும் பக்தர்கள் வழி பாட்டுக்கு வந்தவண்ணமிருக்கின்றனர் இக் கோயிலுக்கு காலை, மதியம், இரவு ஆகிய மூன்று நேரங்களிலும் அர்ச்சனைகள் நடைபெறுகின்றன.

வினாயக சதுர்த்தி, மாதந்தோறும் ஸ்ரீ சுப்பிரமணிக் சுவாமிக்கு கிருத்திகை ஆகிய உற்சவங்கள் சிறப்பாக கொண்டாடப் படுகிறது. விரைவில் திருப்பணி செய்யப் படுமென்பதை அறிகிறோம்.

ஈச்சனாரி ஸ்ரீ வினாயகரை தரிசித்துவிட்டு தென்னகத்திலேயே ஒரு சிறந்த புகழ் வாய்ந்த கோவிலுக்குச் சென்ற நிறைவுடன் வீடு திரும்புகிறோம்.

**WITH BEST WISHES :**

M O R F

Grams: 'PRABHATH'

Phones: 22551, 22694
25013.

TELEX : 211

# P. L. RANGAIAH CHETTY SONS,

15, VINCENT COLONY,

**COIMBATORE-2.**

## ஸ்ரீ வாசவ கன்யா பரமேஸ்வரி ஆலயம்

வைசியாள் வீதி, கோவை.

வைசியாள் வீதியில் வடதிசை பார்த்து அமைந்த கோயில், முன் கோபுர வாயிலைத் தாண்டி மகா மண்டபத்தில் நுழைந்ததும் இடப்புறம் நவக்கிர ஹங்கள் உள்ளன. அவற்றை நாம் சுற்றி வரலாம். பின்பு எதிரே வடதிசை பார்த்து சுமார் 100 வருடங்களுக்கு முன் வரைந்த ஸ்ரீ ராமர் படம் ஒன்றைக் காணலாம். மேலும் கிழதிசை நோக்கி ஸ்ரீ வாசவ கன்யா பரமேஸ்வரி ஸ்ரீ இராஜ இரஜேஸ்வரி ஸ்ரீ விஞயகர் ஸ்ரீ ராமர் லக்ஷமணர் சீதை ஆகிய தெய்வங்களை தரிசித்து மகிழலாம். இன்னும் சிறிது உள்ளே சென்ருல் ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை சமேதராய் இருப்பதை தரிசிக்கலாம்.

இக் கோயிலில் பிரம்மோற்சவம் பிரதி வருடம் வைகாசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இதையும் தவிர நவராத்திரி உற்சவம் கொண்டாடப்படுகிறது. இக் கோயிலில் தினசரி பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்ஞல் இக் கோவில் ஆரிய வைசியர்களால் கட்டப்பட்டது. இன்றும் இக் கோவில் நிர்வாகம் இந்த ஆரிய வைசியர்களாலேயே நடத்தப்படுகிறது.

அமைதியான. இந்த கன்னியா பரமேஸ்வரி தரிசனம் கோவையிலேயே ஒரு இடத்தில் தான் கிடைக்கிறது.


With the best Compliments from :

A. NANJAPPA & CO.,

STATIONERS

COIMBATORE

PHONE : 24730.

# Sri Renuka Foundry,

K. R PURAM, GANAPATHY,

**COIMBATORE-6.**

*Manufacturers of:*

## 'SRF' Centrifugal Pumps, Pump Spare Parts, Footvalves, CI Flanges etc.

Phone : 26323.

# Sri Renuka Leather Company,

DPF. STREET, P. N. PALAYAM,

COIMBATORE-1.

Manufacturers of :

FOOTVALVE LEATHER WASHERS, GIN WASHERS, LEATHER LACES ETC.

# ஸ்ரீ பட்டீசர் ஆலயம்

## பேரூர்.

---

ஆரூரத்தா! ஐயாற்றமுதே! அளப்பூர் அம்மானே!
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகாவூரானே!
பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே!
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூர் அம்மானே!

சுந்தர மூர்த்திகள்—தேவாரம்—ஊர்த்தொகை.

கோவையிலேயே பழமையும் புகழும் வாய்ந்த இந்த பட்டீசர் ஆலயத்தை டவுன் பஸ்கள் மூலம் மிகவும் எளிமையாக, கோவை ரயில் நிலையத்திலிருந்து அடையலாம். இக்கோயில் கோவையிலிருந்து மேற்கே மூன்று கல் தொலைவில் உள்ளது. இக்கோயிலுக்குப் போகும் வழியில் காஞ்சி மாநதி யென்றழைக்கப்பட்ட நொய்யலாறுகுறுக்கிடுகிறது இப்புண்ணிய நதியை கடந்ததும் ஸ்ரீ சாந்தலிங்க அடிகளாரின் திருமடமும், தமிழ் கல்லூரியும் காணலாம். இதையும் தாண்டிச் சென்றால் கோயிலின் (ஐந்து நிலை இராஜ கோபுரம்) நெடிதுயர்ந்து வரவேற்கிறது. இக்கோவிலின் முன்புறம் ஒரு சிறு மேடையில் பிறவாப்புளி எனும் மரத்தைக்கண்டு மேலே செல்கிறோம். இதே போல் கோவிலுக்கு வடக்கே ஓடும் நொய்யலாற்றங்கரையிலுள்ள 'வடகைலாயம்' என்னும் சிற்றாலயத்தின் வெளி முற்றத்தில் உள்ள 'இறவாப்பனை' எனும் பனைமரத்தையும் காணலாம். இந்த பிறாவாப்புளி, இறவாப் பனை ஆகியவைகளைக் கண்டு 'இறைவனின் பிறப்பு இறப்பு அற்ற தன்மைகளை காட்டுவதற்காகவே இவை உள்ளன, என்று உணர்கிறோம். கோவிலுக்கு முன்னால் படிக்கட்டுகளுடன் சிறு தெப்பக்குளம் ஒன்றை காணலாம்.

கிழதிசை பார்த்த ஆலயம். துவஜஸ்தம்பத்தைத் தாண்டி, ஐந்து நிலை ராஜ கோபுரத்தைத் தாண்டி முன் மண்டபத்தில் நுழைகிறோம். முன் மண்டப மேற்புறச் சுவரில் அறுபத்தி மூன்று நாயன் மார்களது வரலாற்று ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளதைக் காணலாம். இதையே 'வெள்ளி மன்றம்' என்று அழைக்கின்றனர். இம்மண்டபம் 94 அடி நீளமும் 38 அடி அகலமும் உள்ளது

இதை 16 அடி உயரமுள்ள 36 பெரிய கல் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம்மண்டபத்திலுள்ள அழகிய சிற்பங்கள் இங்குள்ள கனகசபை சிற்பங்களுக்கு முன்னேடியாகத் திகழ் கின்றன. வெள்ளி மண்டபமும், கனக சபை மண்டபமும் சேரு மிடத்தில் பெரிய துவஜஸ்தம்பமும், அருகே நந்திவாகனமும் உள்ளன. வலப்புறமுள்ள பெரிய மண்டபத்தில் விநாயகர் குடிகொண்டுள்ளார். இடப்புறம் ஸ்ரீ ஷண்முக சுப்பிரமணியர் கோவிலும், அருகே நவக்கிரஹங்கள் கோயிலும் உள்ளன. அதனருகே இடப்புறம் புகழ்பெற்ற சிற்றம்பலம் எனும் கனசபை மண்டபம் அமைந்துள்ளது. தெற்குப் பார்த்த இம் மண்டபம் சிற்ப சாஸ்திரங்களுக்கே ஒரு இலக்கணமாய் அமைந்துள்ளது. இங்குதான் நடராஜர் அன்னை சிவகாமியுடன் எழுந்தருளி யுள்ளார். இந்த நடராஜரே 'ஆடவல்லான்' என்று அழைக்க படுகிறார். இக் கனகசபை கி. பி. 1625—1659 காலத்தில் திரு. அளகாத்திரி நாயக்கரால் (திருமலை நாயக்கரின் சகோதரன்) கட்டப்பட்டது. நுழை வாயிலில் இரு யானை கள் வரவேற்கின்றன அதையடுத்த இரு தூண்களில் இரு புறமும் குதிரை வீரர்கள் கடுவாளம் பிடித்த கோலத்தில் காட்சி தருகின்றனர். குதிரைகளின் கால்களின் கீழே புலிகளின் (இருபுறமும்) உருவம் செதுக்கப்பட்டுள்ளன. அடுத்து யாழி யில் இரு வீரர்கள் அமர்ந்துள்ள தோற்றம் காண்கிறோம். அதையடுத்த நான்கு ஜோடித் தூண்களும் சிற்பங்களின் உயிர் தோற்றங்களாகத் திகழ்கின்றன. யானையுரி போர்த்த மூர்த்தி, பிக்ஷாடனர், அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், ஆலங்காட்டுக் காளி, யானை முக மூர்த்தி (நடன விநாயகர்) ஆறுமுகப் பெருமான் ஆகியோரின் சிற்பங்கள் ஒரே கல்லினால் செதுக்கப்பட்டிருப்பது வியப்பை அளிககிறது. மண்டபத்தின் மேல் பாகத்தில், எட்டு கற்சங்கலி கள் செதுக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருகின்றன. இரண்டு யாழி வீரர்களின் தூண்களும் அதையடுத்து துவார பாலகர் களாக கோமுனி, பட்டி ஆகியோரும் உள்ளனர். உள்ளே ஸ்ரீ நடராஜரும், சிவகாமி அம்மையும் வெள்ளிக் கவசம் சார்த்தப்பட்டு காட்சி தருகின்றனர். இந்த ஆடவல்லான் திருவுருவம் தமிழ் நாட்டிலேயே நடராஜர் திருவுருவங்களில் சிறந்ததென்று அறிகிறோம். கனக சபை ஒரே பாறையில் செதுக்கப்பட்ட மண்டபம். கல்லோவியங்களைப் பார்த்த பின் மேல் சுவரிலுள்ள வண்ண ஓவியங்களையும் காணலாம்.

இக் கனக சபை பற்றிபெர்கூசன் (Fergusan) என்ற அயல் நாட்டுக் கலா விமர்சகர் "பேரூர் வெள்ளி மண்டபத்து சிற்பங்கள், சிற்பக்கலை மலினமடைந்த காலத்தில் உரு வானவை என்றாலும் அவை சிற்பக்கலை, உச்ச நிலையில் உயர்ந்து விளங்கிய உன்னத காலத்தைச் சேர்ந்தவையாம்" என்று கூறுகிறார். இந்த விமர்சனமே இந்த சிற்ப வடிவங்களின் சிறப்புக்கு தக்க சான்று ஆகும். இதையடுத்து உள் மண்டபத் தில் நுழைந்ததும் இடப்புறம் தீர்த்தக்கிணறு உள்ளது. அர்த்த மண்டப நுழை வாயிலில் துவாரபாலக சிற்பங்களும் மேல் விதானத்தில் படஉசுவரர் வரலாறு கூறும் பசுமாடு புற்றில் லிங்கத்திற்குப் பால் சுரப்பதும், லிங்கத்தில் கன்று தன் முன்னங்கால்களை வைத்திருப்பதும், லிங்கத்திலிருந்து ரத்தம் வழிவதுமாகிய ஓவியம் வைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத் தூண்களில் கல்வெட்டுக்களைக் காணலாம், வலப்புறம் விநயகர், உள்ளார்.

கோவிலின் கருவறையில் இருப்பவர்தான் ஸ்ரீ பட்டீசர்,, கோட்டீசர் என்றும், பெயர் பெற்றவர். இவர் சுயம்பு மூர்த்தி, இவர் தலையில் கன்றுக்குட்டி குளம்பின் சுவடும், பசுவின் கொம்புச் சுவடும் உள்ளன. ஆதியில் இந்தப் பக்கம் முழுவதும் ஒரே அரசமரங்கள் அடர்ந்த காடாக இருக்கிறது. அதனால், 'பிப்பிலாரண்யம்' என்று பெயர் பெற்றிருக்கிறது. காம தேனுவே இங்கு வந்து பட்டியிட்டு இறைவனை பூசித்திருக்கிறது, ஒரு நாள் பசுவாகிய காமதேனுவின் இளங்கன்று இக் காட்டில் துள்ளிக் குதித்து அங்குள்ள மணல் புற்றில் வந்து தங்கியிருக்கி றது. கன்றை விடுவிக்கும் ஆவலில் காமதேனு தனது கொம்பால் குத்தி புற்றை அகற்றியிருக்கிறது. இப்புற்றிடம் கொண்ட இறைவன் அங்கு வெளிவந்திருக்கிறார். எனவே கன்றின் கால் குளம்பும் காமதேனுவின் கொம்புத் தழும்பும் உடையவனை பட்டீசனாக இருந்தவன் கோட்டீசன் என்றும் பெயர் பெற்றிருக் கிறான்.

உட்பிரகாரத்தில் சூரிய தேவர், சித்தி விநாயகர், கைலாச நாதர், மங்களாம்பிகை, திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி, மாணிக்க வாசகர் மற்றும் அறுபத்தி மூன்று நாயன்மார்களும் வலப்புறம் உள்ளனர். மேலும் அஞ்சையப்பர் ஸ்ரீ விநயகரும் உள்ளனர். உட்பிரகாரத்தில் கிழதிசை நோக்கி காசி, அத்திரி, பரத்துவாஜன், விசுவாமித்திர, கௌதம.

ஜமதக்னி, வசிஷ்ட, சகஸ்திரி, லிங்கங்களை தரிசிக்கிலாம். அருகிலேயே மனோன்மணியம்மையாரும் உள்ளார். மூலவரின் பின்புறம் அண்ணாமலை ஈஸ்வரர் உள்ளார். அச்சுவர்களில் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. மனோன்மணியம்மையைத் தாண்டி இட உட்பிரகாரத்தில் கிழக்கு நோக்கி ஸ்ரீ சுப்பிரமணி--யர் ஆலயம் உள்ளது. ஸ்ரீ சுப்ரமணியர் எதிரே சுவற்றில் அறுபடை வீடுகளின் ஓவியங்களைக் காணலாம் ஸ்ரீசுப்பிரமணியர் அழகிய சிலை வடிவில் சேவற் கொடியும் வேலும் தாங்கி காட்சி தருகிறார். பட்டீசர் கருவறையின் இடப்புறம் ஸ்ரீ பிரம்மாவும், சண்டிகேஸ்வரரும், ஸ்ரீ விஷ்ணு துர்க்கையும் உள்ளனர். உட்பிரகாரத்தில் இடப்புற கிழக்கு மூலையில் சேரமான் பெருமாள், சுந்தர மூர்த்தி, ஆகியோர் உள்ளனர். அதையடுத்து ஞானபைரவரும், சந்திர பகவானும் எழுந்தருளியுள்ளனர்.

வெளிப்பிரகாரத்திலிருந்து பார்த்தால் ஸ்ரீ விநாயகர் ஆலய கோபுரம், ஸ்ரீ பட்டீசர் கோபுரம், இரண்டடுக்கு இடைக் கோபுரம் ஐந்து நிலைராஜ கோபுரத்தையும் ஒருங்கே காணலாம். வெளிப்பிரகார தெற்கு திசை மூலையில் ஒரு சிறு கோயிலில் விநாயகரை காணலாம். வெளிப் பிரகாரத்தில் மேற்கு நோக்கி நடுவில் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி, விஸ்வநாதர், விசாலாட்சி அம்மனுடன் கோயில் கொண்டுள்ளார். ஸ்ரீபாலதண்டாயுதபாணி சந்நிதியில் நிற்கும் போது அருணகிரிநாதரின் கீழ்கண்ட திருப் புகழ் நினைவிற்கு வருகிறது.

தீராப்பிணி தீர சீவாதுமதொ ஞான
ஊராட்சியதான, ஓர் வாக்கு அருள்வாயே!
பாரோர்க்கிறை சேயே, பாலாசுகிரி ராசா
பேரால் பெரியோனே, பேரூர்ப் பெருமானே!

விஸ்வநாதர் ஆலயத்தின் வலபுறம் ஸ்ரீ விநாயகரை காண் கிறோம் பாலதண்டயுதபாணி வேலேந்தி ஆண்டியாய் சுமார் 4 அடி உயரத்தில் காட்சி தருகிறார். எதிரே மயில் வாகனத்தை யும், துவஜஸ்தம்பத்தினையும் தாண்டிச் சென்றால் சண்டிகேஸ்--வரரை வணங்கிச் செல்லலாம்.

பட்டீசர் சந்நிதிக்கு இடப்புறம் கனக சபைக்கு அருகே கிழக்கு நோக்கி சிவகாமி அம்மையின் பிராகாரம் உள்ளது. வெளி மண்டபத்தின் வலப்புறம் ஸ்ரீ துர்க்கையம்மனும், இடப்புறம்

ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாளும் உள்ளனர். வலப்புற மேல் சுவற்றை அஷ்ட லக்ஷ்மிகளின் உருவப் படங்கள் அலங்கரிக்கின்றன. மேலும் காப்பு, செங்கீரை தாலாட்டு, சப்பாணி, மூத்தபருவம் ஆகிய ஓவியங்களையும், ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் சந்நிதி மேல் சுவற்றில் தசாவதாரச் காட்சிகளும், வருகை, அம்புலி. அம்மானை, நீராடல், பொன்னூஞ்சல், ஆகிய பருவங்களின் ஓவியங்களைக் காணலாம். அம்மனின் உள் மண்டப வாயிலில் துவார பாலகைகளின் அழகான திருவுருவம் உண்டு. அர்த்த மண்டபத்தைத் தாண்டி கருவறையில் ஸ்ரீ சிவகாமி அம்மன் சுமார் 4 அடி உயரத்தில் அழகிய கோலத்தில் காட்சி தருகிறூர். அம்மன் சந்நிதியின் வலப்புறம் கல்யாண மண்டபம் உள்ளது. இங்கு அறுபத்து மூன்று நாயன் மார்கள். சந்திர சேகரப் பெருமாள், விஞயகர், சிவகாமி அம்மை, வள்ளி தெய்வானையுடன் முருகன் ஆகியவர்களின் உற்சவ மூர்த்திகள் உள்ளனர். இக் கோயிலின் அமைப்பு இவ்வாறு உள்ளது.

இக் கோயில் ஈசன், சுந்தரமூர்த்தியின் வரலாற்றுத் தொடர்பு உடையது. ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயஞர் ஒரு காலத்தில் எம் பெருமானிடம் பணம் வேண்டி இவரை அண்டி நிற்க பட்டீசர் தன் துணைவி பச்சை நாயகியோடு உழவன் வடிவில் வயல் காட்டிற்கு போய் நாற்று நடுவது போல் பாவனை செய்ய சுந்தரர் அங்கும் சென்று இறைவனைப் பாட, பின்னர் அவர் விருப்பப்படியே இறைவன் தன் ஆனந்தக் கூத்தையும் அம்பலத்தில் நடித்துக் காட்டினுர். அப்பேரூர் பெருமானை நினைத்து சுந்தரர் தில்லைச் சிற்றம்பலத்திலே பாடிய பாடலும் உள்ளது.

கோயிலின் கருவறை, அர்த்த மண்டபத்தைப் பார்த்தால் சோழர்கள் கட்டிய கோயிலாகவே தெரிகிறது. கி. பி. 11-ஆம் நூற்றுண்டில் ராஜ ராஜ சோழர் மகன் இராஜேந்திரன் அரியணை ஏறி இருபத்தி இரண்டு ஆண்டுகள் கழித்து இத் திருப்பணியைத் துவக்கி மூன்று ஆண்டுகளில் அர்த்த மண்டபம், மஹா மண்டபம் ஆகியவற்றைக் கட்டி முடித்திருக்கிறுன். மகா மண்டபம் கட்ட விழுமிய பட்டன் தனபாலன், கனபாட்டி அரசாண்டார், வீரசேகரத் தேவர், அகமுடையான் தேவி, சோழ பிச்சன், அதியமான் முதலியோர் உதவியுள்ளதாக கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வாறு சோழர்களால் கட்டப்பட்ட கோயில் பின்னர் கொங்கு சோழர், கொங்கு

பாண்டியர், ஹொய்சளர், விஜய நகர மன்னர்கள், அதன் பின் நாயக்க மன்னர்கள் ஆகியோர்களால் சுற்றுப் பிரகாரம், முன் மண்டபம் எல்லாம் கட்டப்பட்டு விரிவடைந்திருக்கிறது. 18 ஆம் நூற்ருண்டில் ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இங்கு வந்திருந்து "திருப்பேரூர் புராணம்" பாடியுள்ளார்.

இக் கோயிலில் வருடத்தில் ஆருத்திரா தரிசனம், மிகச் சிறப்பாக நடக்கும், சுவாமி புறப்பாடு, திரு உலா, உண்டு. மற்றும் வழக்கம் போல் எல்லா வற்சவங்களும் உண்டு.

இவ்வாறு பேரூர் பட்டிசர் தரிசனம் பெற்றபேறுடன் வெளி வருகிறோம்.

புது வருடக் காலண்டர்களும்,
பொங்கல் வாழ்த்துக்களும், நாவல்கள்,
பாடப் புத்தகங்களும், கிடைக்குமிடம் :

**'தெண்டபாணி ஸ்டோர்ஸ்'**

பல்புகள், ஒயர்கள், ஓல்டர்கள், முதலிய எல்லாவித
எலக்டிரிக் சாமான்களுக்கும் ஏற்ற இடம் :

**'தெண்டபாணி எலக்டிரிக் ஸ்டோர்ஸ்'**

சைக்கிள்களுக்கு தேவையான எல்லா ஸ்டோர் பார்ட்ஸ்
களுக்கும் சிறந்த இடம் :

**'சக்தி சைக்கிள் ஒர்க்ஸ்'**

திருச்சி ரோடு, சிங்காநல்லூர்.

போன் : 24698.

மணமும் சுவையும் மிக்க புகையிலைக்கு

அசல் மீனம்பாளையம்

Vijay

விஜய்

துண்டுப்புகையிலை

L.2.No.97/66. DUTY PAID

Prop: R.V.SUNDARAM, P.N.Pudur, Cbe 7

துண்டு 4 பைசா, 20 துண்டு 65 பைசா,

துண்டு 2 பைசா, 40 துண்டு 65 பைசா!

**With Best Compliments From :**

# "SOUTH INDIA SANFITS"

(MANUFACTURERS OF : FLUSH TANK, AND

SUGAR CANE CRUSHERS)

TRICHY ROAD,

**CHINTHAMANIPUDUR,**

**ONDIPUDUR ( P. O.)**

COIMBATORE-16.

Telephone No: 26988

தங்கள் சேமிப்புக்கு சிறந்த இடம் :

## ★ தங்கம் சிட் பண்ட்ஸ் ★

ரிஜிஸ்டர் நெ. 3094

சரோஜாமில் எதிர்புரம், ஒண்டிப்புதூர், சிங்கநல்லூர் P. O.

கோயமுத்தூர்-6

மாதாந்திர சீட்டுகளுக்கும், தினசரி சீட்டுகளுக்கும்

**தங்கம் சிட் பண்ட்சையே நாடுகள்**

மேலும் எங்களிடம் .-

சைக்கிள்,
ரேடியோ,
பீரோ,
கட்டில்,
கடிகாரம்,
சோபா கம்பெட்.

ஆகியவைகள் சுலபமான தவணைகளில் கிடைக்கும்

**நேரில் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.**

*உரிமையாளர்கள்*

ந. ப. சுப்பையன், க. கருப்பண்ணன்



அதிக விளைச்சலுக்கு

## டி. எப். சி. மார்க்

கலப்பு உரங்களையே உபயோகியுங்கள்!

சூபர் பாஸ்பேட், புண்ணுக்குத்தூல்,

பொனியம் பாஸ்பேட், முதலியவை

கிடைக்கும் இடம் :

தமிழ் நாடு பெர்டிலைசர் கம்பெனி

8 26, திருச்சி ரோடு

*சிங்கா நல்லூர்.*

TEL : Fertiliser
Singanallur

Phone : 23713

ஒரே விலை !

கலியாணம், மற்ற விசேஷங்களுக்கு
தேவையான
பட்டு, நூல், மில்
ஜவுளிகளுக்கு !

ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

Prop: M. T. பெருமாள் செட்டி & சன்ஸ்

121, ராஜ வீதி, கோயமுத்தூர்–1.

போன் : 25859.

எங்களது ஷோரூம்கள்

கடை வீதி, சேலம்-1,
போன் : 3345

186, காந்தி ரோடு
காஞ்சீபுரம்,
போன் : 231 & 248

Telephone : 22127 & 23036
Factory : 26451

Grams :
'NANCO'
Post Box : 242

# The Nanco Rubber and Plastics Ltd.,

A. T. T. COLONY, COIMBATORE-18.

TENNIS BALLS, ALL TYPES OF RAILWAY RUBBER FITTINGS· RUBBER PROFITS FOR RAILWAY COACH BUILDINGS. HARD RUBBER BATTERY CONTAINERS 'NANCOTEX, SYNTHETIC SPINNING COTS· 'NANCOFLEX' AUTOMOBILE SUSPENSION, 'RUBBER BUSHES AND MOUNTINGS, RUBBER TO METAL BONDED ANTI-VIBRATION FITTINGS AND MOUNTINGS MIRCO CELLULAR SHEETS AND FOOTWEAR MATERIALS-EBONITE GOODS ALL TYPES OF SYNTHETIC AND NATURAL RUBBER GOODS.

Branch Office : 5, Seethamma Road, Madras-18.

Telegrams : 'NANRUB'
Telephone : 73406

## With Best Compliments of:

# A. P. MUTHUKRISHNAN,

PAPER BOARD & MILLSTORE
MERCHANTS
162, NEW SIDDAPUDUR,
**Pappanaickenpalayam**
COIMBATORE-18

Post Box No. 309.

Phones : 23102
26113

GRAMS : 'TRANSKING' Phone : 23870.
27376.

# Get your Goods on the Market first by:

## South Eastern Roadways,

( Premier Road Carriers )

23/213, THIYAGI KUMARAN STREET.

**COIMBATORE-18**

( H. O 134, Mahatma Gandhi Road, Culcutta-7 )

---

**Direct Casgo Service to and Fro :**

**Ahmedabad, Aligarh, Amritsar, Bombay, Calcutta, Delhi, Durgapur, Ernakulam, Faridabad, Gaya, Hyderabad, Jaipur, Jamshedpur, Jullundur, Kanpur, Lucknow, Ludhina' Madras, Nagpur, Pating, Secunderabad. Vijayawada & All Stations of Bengal and Assam.**

OTHER SISTER CONCERNS :

M/s. Road Transport Corporation
M/s. Air Transport Corporation

* Quick Movement
* Full Insurance Facilities
* Pacco Godowns at all Plaees
* Low & Economical Rates
* Our own Branches more than 150 Places.
* Save Time

Special arrangements with :

**SOUTHERN ROADWAYS PVT. LTD.**

(TVS) Madurai, for 431 Stations in South India )

" If you your lips would guard from Slips,

Five things observe with eare :
of whom you speak, to whom you speak, And how, and when, and where ".

---

''கடவுள் வரையறைகளுக்கு அடங்காதவர் நாம் அவரை உணருகிறோமே ஒழிய அறியவில்லை''

—காந்திஜீ—

---

" So long as God seems to be outside and faraway, there is ignorance. But when God is realised within, there is true knowledge "

**—Sri Ramakrishna—**

'' எதிரி உண்டாக்கிய காயம் விரைவில் ஆறிவிடும். ஆனால் தானே உண்டாக்கிக்கொண்ட காயங்கள் தான் சீக்கிரம் ஆறமாட்டா''

—நேருஜி—

'' அரசியல் வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனாலும் விருப்பங்களுக்கும், சினத்திற்கும் அவன் அடிமையாயிருப்பின் உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணர அவனுக்கு இயலாது''

—விவேகானந்தர்—

---

அன்பளிப்பு :—

திரு. நா. வரதராசன், புஞ்சைப்புளியம்பட்டி.

திரு. த. பி. மோஹன், கோயமுத்தூர்.

# ஸ்ரீ. முத்து விநயகர், ஸ்ரீ. காமாட்சி அம்மன் ஸ்ரீ. ஏகாம்பரேஸ்வரர் கோயில்

பெரிய கடை வீதி கோவை.

> ‘‘சீர் பெருகு கோவை வளர் தேவிகா மாக்ஷியாம் திருமகளினருளினலே,
> பார் முழுதும் வீறு கொளபக்தர்கள் மனங்குளிர பஞ்ச கிர்த்தியமுமோங்
> நீறணியு மிறை வனிட பாகமுறை ஆதியாம் நீலிதிரி சூலிகழல்கள்
> ஓர் பொழுது மறவாது ஓதுவது நியதியெனவு வந்த அஞ்சலி செய்குவாம்’’

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு விஸ்வப் பிராமணர்களால் இக் கோயில் ஸ்தாபிக்கப்பட்டு தங்கள் குலதெய்வமான ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரரை, ஸ்ரீ முத்து விநாயகர், ஸ்ரீ காமாட்சி அம்மன், ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆகிய தெய்வங்களுடன் காஞ்சீபுரத்திலிருந்து வந்த ஸ்தபதிகளைக் கொண்டு, காஞ்சீபுர சம்பிரதாயப்படி எழுந்தருளச் செய்துள்ளனர்.

மேலும் இந்த ‘ஏகாம்பரேஸ்வரர் என்று பெயர் வர, முன்பு காஞ்சிமா நதியில் ஸ்ரீ காமாட்சியம்மன், ஏகாம்பரேஸ்வரரை நினைத்து சிவபூஜை செய்ததாகவும், அப்பொழுது சிவபெருமான் அம்மனுக்கு காட்சி தர, அது சமயம் ஸ்ரீ சிவபெருமான் அம்மனல் ஸ்ரீ ஏகாம்பரேஸவரர் என்று அழைக்கப் பட்டதாகவும், அந்த ஏகாம்ரேஸ்வரரே இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டததாகவும் தெரிகிறது.

கோபுரவாயிலில் நுழைபவர்க்கு கோபுரத்திலேயே அம்மையும் அப்பனும் ரிஷபவாகனத்தில் அமர்ந்திருக்கும் திருக் கோலத்தில் காட்சி தருகின்றனர். உள்ளே நுழைந்ததும் முன் மண்டப மேற்சுவர்களில் ஜெயபவானி, ஸ்ரீ மார்க்கண்டேயர், அருணகிரி நாதர், மகிடாசுர மர்த்தனி, விஜய கணபதி, ஸ்ரீ லஷ்மி ஆகிய திரு ஓவியங்களைக் கண்டு மகிழலாம். உள் மண்டபத்தைத் தாண்டி கர்ப்ப கிருஹங்கள் கிழதிசை பார்த்து அமைந்துள்ளன. நடுவாக உள்ள கர்ப்ப கிருஹத்தில் ஸ்ரீ காமாட்சியம்மன், அழகும் கம்பீரமுடனும் காட்சி தருகிருர். அவரது இருபுரமும் அர்த்த மண்டபத்தில் துவார சுப்பிரமணியர் இடப்புறம்), துவார கணபதி (வலப்புறம்) துவார பாலகர்

களாக உள்ளனர். எதிரே நந்தி வாகனமும் உள்ளது. குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ அம்மன் சந்நிதிக்கு வலப்புறம் ஏகாம்பரேஸ்வரர் லிங்க வடிவில் அம்மனுக்கு சற்றுப் பின் தள்ளி காட்சி தருகிறார். எதிரே இவருக்கும் நந்தி வாகனமும் உள்ளது. ஸ்ரீ அம்மனுக்கு இடப்புறம் ஸ்ரீ வரதராஜப் பெருமாளை ஸ்ரீ தேவி பூதேவி சமேதராக எதிரே கருடாழ்வாருடன் தரிசித்து மகிழலாம். உள் மண்டபத்தின் வலப்புறம் ஸ்ரீ முதது விநாயகர், ஸ்ரீ எகாம்பரேஸ்வரர், ஸ்ரீ காமாட்சியம்மன் ஆகியவர்களது உற்சவ விக்கிரஹங்களை தருசிக்கலாம். ஸ்ரீ அம்மனது உற்சவருக்கு நீலோத்பலம், அபயவரதம், ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் மானும், மழுவும் ஏந்திய நிலையிலும் காட்சி தருகின்றனர். உட்புற மண்டபச் சுவர்களின் மேல்புறம் கவிதந்த படலம், அறுபடை வீடுகள் அம்மன் முருகனுக்கு ‘ சக்திவேல் ’ அளித்த படலம், முருகன் ஈசனுக்கு உபதேசம் செய்த காட்சி, அம்மன் ஏகாம்பரேஸ்வரரை பூசித்து வந்த காட்சி மருதமலை முருகனின் திருக் கோலம், ஸ்ரீ அம்மன் அமர்ந்த திருக் கோலம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள், திருப்பதி ஸ்ரீனிவாசன் விஸ்வகர்ம பஞ்சரிஷி நடராஜர் பச்சை நாயகி, நடன காளி, கோதண்டராமர், வள்ளி முருகன் திருமணக் கோலம், மீனாட்சி சுந்தரர் மணக் காட்சி ஆகிய ஓவியங்களைக் கண்டு மகிழலாம்.

பிராகார வலப்புற ஆரம்பத்தில் பைரவர் சந்நிதி, நவக்கிரஹங்கள், சூரியநாராயணர், ஆகியவர்களும் பின் பிரகாரத்தில் அரசும் வேம்பும் கலந்த மர நிழலில் மேடையில் விநாயகரும், தட்சிணாமூர்த்தியும், செல்வ விநாயகரும், சண்டிகேஸ்வரரும், உள்ளனர். இடப்பிராகாரத்தில் சேவற் கொடியும், வேலும் ஏந்திய ஸ்ரீ ஆறுமுக சுவாமி வள்ளி தெய்வானையுடன் மயில் வாகனத்தில் காட்சி தருகிறார். அறுமுகனின் அழகு உள்ளத்தைக் கவர்கிறது. எதிரே மயில் வாகனம் உள்ளது. ஆறுமுகன் தனியாக கோயில் கொண்டுள்ளார்.

இக் கோயிலில் கீழ்க்கண்ட உற்சவங்கள் விமரிசையாக நடைபெற்று வருகின்றன

சித்திரை வருடப் பிறப்பு—விஷு புண்ணிய கால அபிஷேகம் மேற்படி மாதத்தில் பிரம் மோற்சவம் நடைபெறுகிறது. வைகாசி விசாக நட்சத்திரத் தன்று சிறப்பான பூஜைகள் ஆடி வெள்ளிக்கிழமையில் விசேஷ

பூஜைகள் அம்மனுக்கு உண்டு. புரட்டாசியில்நவராத்திரி, அம்மன் கொலு, அம்பு சவாரி திருஉலாவுடன் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. ஐப்பசியில் தீபாவளிப் பண்டிகை ஷஷ்டியன்று சிறப்பான ஆராதனைகள் உண்டு. கார்த்திகையில் தீபம். அபிஷேகங்கள் உண்டு. மார்கழியில் தனுர் பூஜை, வைகுண்ட ஏகாதசி தையில் பொங்கல், பூசம் ஆகியவை. மாசியில் சிவராத்திரி உற்சவம் பங்குனியில்உத்திரம் சிறப்பான பூசைகளுடன் நடைபெறுகிறது.

இக் கோவிலில் மார்கழி 30 நாட்களும் பஜனையும், திருப் பாவை திரு வெம்பாவையும் பாரயணமும் உண்டு. ஒவ்வொரு திங்கட்கிழமையும் பஜனை நடைபெறுகிறது. தினம் இரு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

இக் கோவிலைச் சார்ந்த முத்து விநாயகர் கோவிலும் அருகிலுள்ளது.

முத்து விநாயகர், ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி அம்மன். வரதராஜப் பொருமாள் ஆகியோரை தரிசித்து திரும்புகிறோம்.


## "ஸ்ரீ கிருஷ்ண பவான்"

**(AIR CONDITIONED)**

காப்பி & சாப்பாடு ஹோட்டல்

268, பெரியகடை வீதி, கோயமுத்தூர்—1-

- உயர்தர சிற்றுண்டி சாலை
- குளிர் சாதன (AIR CONDITIONED) சாப்பிடும் அறை
- தென்னிந்திய—வட இந்திய உணவு ஸ்பெஷல் சாப்பாடு வகைகள்!
- ''கிருஷ்ணா'' காபி பவுடர்—எங்கள் தயாரிப்பு!

# ஸ்ரீ லக்ஷ்மி நாராயண வேணு கோபால சுவாமி கோயில் (கெரடி கோயில்) கோவை.

கோவை மாநகரத்திற்கு அநேக பெருமைகள் உண்டு. அவைகளில் மைசூர் சமஸ்தானத்திற்குத் தலைநகரமாய் ஒரு காலத்தில் இருந்த பெருமையும் ஒன்று. அந்தக் காலத்தில் மைசூரைச் சேர்ந்த ஜெட்டிகள் வந்து இங்கு குடியேறலாயினர். அவர்களில் ஒரு பகுதியினர் தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடி தேகப்பயிற்சி செய்வது வழக்கம். கன்னட மொழியில் தேகப்பயிற்சி செய்வதை 'கெரடி' என்று கூறுவர்.

பிற்காலத்தில் ஜெட்டிகள், மைசூர் சமஸ்தானத்தில் மகாராஜாவின் முன்னால் தங்கள் வல்லமையைக் காட்ட அரசர் அவர்களிடம் 'என்ன பரிசு வேண்டும்' என வினவினார். ஆனால் ஜெட்டிகள் செல்வந்தர்களாக இருந்த காரணத்தினால், மற்றொரு பொருளும் கேட்காமல், சமஸ்தானத்தில் தயாராக இருந்த ஸ்ரீ லக்ஷ்மி நாராயண வேணு கோபால ஸ்வாமி விக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டு, கோவைக்குக் கொணர்ந்து, சலிவன் வீதி கோபால ஸ்வாமி தெப்பக் குளத்தில் போட்டு வைத்திருந்தார்கள். சில காலம் கழித்து ஜெட்டிகளின் கனவில் தோன்றி "நீங்கள் கெரடி பழகிக் கொண்டிருக்கும் இடத்தைக் கோவில் கட்ட கொடுக்கும்படி" கடவுளின் உத்திரவு ஏற்பட்டது. அந்த சமயத்தில் திரு. நாதமுனிக் கவுண்டர் வகையரு, திரு. குட்டியண்ணக்கவுண்டர் கனவில் "ஜெட்டிகள் கொடுக்கும் இடத்தில், அவர்களது விவசாயத்தில் வரும் வருமானத்தில் கோவிலைக் கட்டும்படி" உத்திரவாயிற்று. சூலூரில் பிரதிவாதி "பயங்கரம் வெங்கடாச்சாரியாருக்குக் கடவுள் கனவில் தோன்றி "மேற்படி கோயிலைக் கட்ட வேண்டிய ஏற்பாடு செய்யும் படி" உத்தரவாயிற்று. எனவே ஜெட்டிகள் மேற்படி இடத்தை, தர்மசாசனமாகக் கவுண்டர்களுக்கு கொடுத்து விட்டார்கள். கோவிலுக்கு முன்புறத்திலுள்ள கிணறானது முன்பு குளமாக இருந்தது. ஜெட்டிகள் கெரடி பழகின உடனே அதில் இறங்கிக் குளிப்பதற்கு முன்பு பயன் படுத்தி வந்தனர்.

மேற்கூறிய மூன்றுபேரும் கலந்து சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் இக் கோயிலைக் கட்டினார்கள். மூலவர்கள் ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண வேணுகோபால ஸ்வாமி மைசூர் மகாராஜாவினால் கொடுக்கப்பட்டது. என முன்பே கூறினோம். உற்சவர்கள் ஸ்ரீ கஸ்தூரி ரங்கனுப ஸ்வாமி ஸ்ரீ தேவி, பூதேவி சமேதராக சுமார் 2 அடி உயரத்தில் உள்ளார். ஸ்ரீ ரங்கத்தில் மணவாள மாமுனிகள் என்ற ஆச்சாரியார் காலத்தில் ரெங்கநாதர் ஆலயத்தின் கீழ்புறம் சந்நிதி இருந்து திப்பு சுல்தான் காலத்தில் கலகங்கள் ஏற்பட்டு அந்த விக்ரகங்களை ரெங்கநாதர் ஆலயத்திற்கு கொண்டுவந்து வைத்தார்கள். மேற்படி பழைய சந்நதி நாளடைவில் ஜீரணமாகி விட்டது. கோவையில் சலிவன் வீதியில் வேதவியாச பட்டர் அவர்களால் ஸ்ரீ ரங்கத்தில் இருந்து அவைகள் கொண்டு வரப்பட்டன. திருக்குருங்குடி ஜீயர் ஸ்ரீச்சடாரியைப் பல்லக்கிலேயே கொண்டு வந்து 12 நாள் திருவாராதனம் செய்து பிரதிஷ்டை ெய்சவித்துள்ளார்.

கோவிலின் எதிர்ப்புறத்தில் துவஜஸ்தம்பம் உள்ளது. வெளி மண்டபத்தில் தீர்த்தக்கிணறு உள்ளது. சுவர்களில் மகாவிஷ்ணுவின் தசாவதாரக் காட்சிகளும், பன்னிரு ஆழ்வார்களின் திருவுருவங்களும், பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனும் பரமபத நாதரின் திவ்ய திருக் கோலமும் கண்ணைக் கவர்கின்றன. உள் மண்டபத்திலுள்ள ஸ்ரீ ராமரின் திருவுருவப் படம் (சுமார் 4 அடி உயரமுள்ளது) வைத்து பூஜிக்கப்பட்டு வருகிறது. முன்னர் இக் கோயில் மூலவர் பிரதிஷ்டைக்கு முன்னால் இந்த சீதா, லக்ஷ்மண, அநுமர் சமேதரான ஸ்ரீ ராமர் படத்தையே வைத்து ஜெட்டிகள் பூஜித்தனராம். மேலும் மேற்கு திசை நோக்கி நம்மாழ்வார், மணவாள மாமுனிகள் ஆகியோரின் மூலவர்களும் உற்சவர்களும் உள்ளனர்.

இக் கோயிலில் ஸ்ரீ ரங்கம் பாஞ்சராத்திர ஆகம முறைப்படி திருவாராதன பூஜைகள், உற்சவங்கள் நடை பெறுகின்றன. வருடத்தில் சித்திரை மாதம் ஸ்ரீ ராமநவமி பத்து நாள் விசேஷ அலங்காரத்துடனும், பதினோராவது நாள் ஸ்ரீ அநுமார் வாகனத்தில் திருவுலாவுடனும் நடை பெறுகிறது. சித்திரை திருவாதிரை நட்சத்திர தினத்தன்று உடையவரின் திரு வீதி புறப்பாடு நடைபெறுகிறது. வைகாசித் திங்களில், விசாக நட்சத்திரத்

தன்று நம்மாழ்வார் திருவுலாவும் நடை பெறுகிறது. ஆவணியில் ஸ்ரீ ஜெயந்தியின் 10 நாள் உற்சவத்தில் ருக்மணி கல்யாணத்தையும், 11-வது நாள் கருடவாகனத்தில் திருவுலாவும், உறியடியும் கொண்டாடுகிறார்கள். புரட்டாசியில் நவ ராத்திரி (9 நாள்) விசேஷ அலங்காரங்களும், 10 வது நாள் குதிரை வாகனத்திலும், கார்த்திகையில் குதிரை வாகனத்தில் திருவுலாவும், சொக்கப்பானையும் நடைபெறுகிறது. மார்கழியில் தினந்தோறும் காலை 5 மணிக்குத் திருப்பள்ளி எழுச்சி திருப்பாவையுடன், இரண்டாம் கால பூஜையில் திருவாய் மொழி நூற்றந்தாதி உபதேச ரத்ன மாலையும் பாடப்பட்டு, உச்சி கால பூஜை பூர்த்தியடைகிறது. தசமியன்று சுவாமியின் திருவுலா வெளி வீதிகளில் நடைபெறுகின்றது. வைகுண்ட ஏகாதசியன்று இரவு 8 மணிக்கு இராப்பத்து உற்சவம் திருவாய் மொழி சேவித்து சிறப்பாக நடைபெறுகிறது. ஏழாவது நாள் உற்சவ தினத்தன்று நம்மாழ்வாருக்கு மோகனுவதாரத்துடன் கைத்தல சேவையும் நடைபெறு கின்றது. சங்கராந்தி யன்றும், ஸ்வாமி திருவுலாவுடன், பூஜைகளும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இக் கோவிலுக்கு வைஷ்ணவ மடாதிபதி 'வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள்' அவர்கள் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்திருக்கிறார். திருக்குருங்குடி ஜீயர் அவர்களும், மற்றும் பல ஆச்சாரிய புருஷர்களும் வந்து திருவாராதனம் செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீ லக்ஷ்மி நாராயணரான வேணுகோபால ஸ்வாமி அவர்கள் கோயில் கொண்டிருப்பதை தரிசித்து விட்டு, இனி அடுத்த கோயிலுக்கு செல்வோமாக.

# ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமி கோயில்

**தெப்பக்குளம், சலிவன் வீதி, கோவை.**

கோவை இராஜ வீதியின் மேற்கோடியில், சலிவன் வீதியை சந்திக்கும் இடத்தில் உள்ளது இந்த ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமி கோயில். தெப்பக்குளம் கோபால ஸ்வாமி கோயில் என்று இக்கோயில் தற்காலத்தில் பொதுமக்களால் அழைக்கப்படுகிறது.

இதன் வரலாற்றைப் பார்க்கும்போது, கி. பி. 1752-ம் ஆண்டு கொங்கு நாட்டில் ஆரு நாட்டிற்கு சேர்ந்த 'கோப்பையநாடு' என்கிற பேரூர் நாடு மைசூர் ராஜா ஆதிக்கத்தின் கீழ் இருந்த பொழுது அனேக கோயில்கள் மைசூர் அரசனுல் கட்டப்பட்டன அக் கோயில்களில் ஒன்றுதான் இந்த ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமி கோயில். இந்த கோயில், அக்காலத்தில் பழைய மாதய ராஜா மகால் வீதி எனும் இன்றைய 'ராஜ வீதியின்' மேற்கு கோடியில் சலிவன் வீதி சந்திப்பில் அந்த அரசனுல் கட்டப்பட்டது. அந்த அரசன் இக்கோயிலைக் கட்டி, தனது குலதெய்வமான ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்து இக் கோயிலுக்கு மானியமும் எழுதி வைத்தான். இக் கோயிலை தனது தளவாயான திரு. சங்கரய்யன் என்பவர் மேற்பார்வையில் கட்டியதாகவும் தெரிகிறது.

மேலும் கரிகால சோழன் இக் கோயிலுக்கு மானியங்கள் எழுதிவைத்துள்ளான். தமிழில் சூரியன், சந்திரன், வாயு, நீர் நெருப்பு, பூமி, வானம், இரவு, பகல், சந்தியாகாலம், இதயம் ஆகிய என்றும் நிலையான இயற்கை சாட்சியங்களோடு செப்புப் பட்டயம் தமிழ் மொழியில் எழுதி வைத்துள்ளான்.

மைசூர் அரசனிடமிருந்து நாடு திப்புவினிடம் சிக்கியது. அதன்பின் ஆங்கிலேயர் வசம் வந்ததனுல் அவர்களால் இக் கோயிலின் சிப்பந்திகள் முறைப்படி நியமிக்கப்பட்டனர்.

ஸ்ரீ ராமநவமி 9 நாளும் ஸ்ரீ இராமர் ஊர்வலம் சிறப்பாக நடைபெறுகிறது. கோயிலுக்கு ஒரு சிறு தேரும், நரசிம்ம வாகனமும் உள்ளது. கோவிலுக்கு வலப்புறம் தெப்பக்குளம் உள்ளது.

ஒரே நேரத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமி ஸ்ரீ சீதாராமர் ஆகியவர்களின் திவ்விய தரிசனம் முடிந்து மன நிறைவுடன் வெளி வருகிறோம்.

★


WITH BEST COMPLIMENTS FROM :

"GORADIA MILL STORES"

47, Devangapet No. 1, COIMBATORE-18.

TEXTILE ENGINEERS :

Stockists of :
TEXTILE STORES &
Sizing Materials
Sole Selling Agents for :
"THREE CATS" Brand
'TEXLER' Leather Goods.

Phone : 22178. Grams : 'PROMPT'

# ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்வாமி கோயில்

## தெப்பகுளம் ராஜவீதி, கோவை.

அஞ்சிலே ஒன்று பெற்ருன் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒண்ருருக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக்காப்பான்.

கோவை ராஜவீதி மேற்கு கடைசியில் உள்ளது இக் கோயில். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னுல் மைசூர் மன்னர்களின் ஆட்சி காலத்தில் எழுப்பப்பட்டது இந்தக் கோயில். இங்கு வீற்றிருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் இதை அடுத்துள்ள தெப்பக்குளத்தில் இருந்ததாகவும் ஒரு நாள் இரவு ஒரு பக்தரின் கனவில் தோன்றி தன்னை வெளியே கொண்டு வருமாறு பணிக்கவும், அவ்வாறே இந்த ஸ்ரீ ஆஞ்சநேயரை வெளியே கொண்டு வந்து அவருக்கு திருக் கோயிலெடுத்து அங்கு பிரதிஷ்டை செய்ததாகவும் தெரிகிறது.

கிழ திசை நோக்கிய கோயில். வடதிசை நோக்சிய முன் வாயிலைத்தாண்டியதும் பெரிய மண்டபத்தைக் காண்கிருேம். அதனுள்ளே ஸ்ரீ ஆஞ்சநேயரின் திருவுருவப்படம் காட்சி தருகிறது. உள் மண்டபத்தில் மேலும் வட திசை பார்த்து ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமியின் தரிசனம் பெறலாம். பின் கிழதிசைபார்த்து ஸ்ரீ ஆஞ்சநேயரின் தரிசனம் பெறலாம், அதன் பின்னுல் பஞ்ச லோகத்தாலான ஸ்ரீ ஆஞ்சநேயரின் உற்சவ மூர்த்தி காட்சி தருகிருர். ஸ்ரீ ஆஞ்சநேயரின் பின்னுல் ஸ்ரீராம பிரானின் சீதாசமேதரான செப்புச்சிலை வடிவம் உள்ளது ஸ்ரீ சீதாராமனின் தரிசனமும் கூடவே கிடைக்கிறது. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமியின்பிரிதிஷ்டை 1929-ல் நடைபெற்றுள்ளது. ஆண்டு தோறும் ஸ்ரீ ராகவேத்திர ஸ்வாமியின் ஆராதனை ஆவணிமாதத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

கிழக்குப் பார்த்த ஆலயம். நுழைகையிலேயே முன் புறம் பெரிய தெப்பக்குளம் இருப்பதைக் காண்கிறோம். இடப்பக்கம் முன் பிரகார மூலையில் ஓர் பெரிய ஆலமரம் இருப்பதையும் பார்க்காலம். தீர்த்தக் குளத்தைத் தாண்டி கோயிலின் முன் துவஜஸ்தம்பம், 'முன் மண்டபம்' இவற்றைக் காண்கிறோம். துவஜஸ்தம்பத்தினருகே கருடாழ்வாரை தரிசிக்கலாம். உள்ளே அர்த்த மண்டபத்தில் ஸ்வாமியின் இருப்புறங்களில் இக் கோயிலைக் கட்டிய தளவாயான திரு. சங்கரய்யரும் அவரது மனைவியும் சிலை வடிவில் உள்ளனர். ஸ்வாமியின் வலப்புறம் அர்த்த மண்டபத்தில் ஒரு தேளின் உருவம் கல் சுவரில் செதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். நமது வீடுகளில் தேள் பயம் அதிகரிக்கும் போது இந்த தேள் உருவத்திற்கு எண்ணை இட்டு வேண்டிக் கொள்வரென்றும், பிறகு அந்த தேள் பயம் அகன்று வருவதாகவும் தெரிகிறது.

இத்தனையும் பார்த்து விட்டு உள்ளே கர்ப்பகிரு ஹத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமியின் தரிசனம் பெறுகிறோம். குழலூதும் கண்ணனாக மூலவர் அழகாக உள்ளம் கவரும் வகையில் காட்சி தருகிறார். முன்னால் உற்சவர் ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமி ஸ்ரீ தேவி பூதேவி சமேதராய் அழகுடன் காட்சி தருகிறார். கண்ணனின் தரிசனம் கிடைத்த மகிழ்வு நம் இதயத்தை நிரப்புகிறது.

இக்கோயிலில் தற்பொழுது ஸ்ரீ ரங்கப் சாங்கித்திய முறைப் படி பூஜைகள் நடக்கிறது. 34 தலைமுறையாக இக் கோயிலை பரிபாலித்து வரும் பட்டர் வம்சத்தின்ருக்குதான், ஆரம்ப நாள் முதல் திர்த்த மரியாதை இன்றும் நடைபெற்று வருகிறது. கோகுலாஷ்டமி, விஜய தசமி, ஆகிய உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்தனையும் கேட்டு ஸ்ரீ வேணு கோபாலரான குழலூதும் கண்ணனின் தரிசனம் முடிந்து உள்ள நிறைவுடன் வெளி வருகிறோம்.

# ஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமி கோயில்

## தடாகம் பஸ்நிலையம், கோவை.

கோவை சுக்கிரவாரப் பேட்டை தடாகம் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ளது இந்த ஸ்ரீ பாலண்டாயுதபாணி சுவாமி கோயில்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த ஸ்ரீ பாலதண் தண்டாயுதபாணி கோயில் எழுப்பட்டது. சமீபத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால் இக்கோயிலைச் சுற்றியுள்ள அன்பர்கள் கோயிலுக்கு திருப்பணி, கும்பாபிஷேகம் ஆகியவை நடத்தியுள்ளனர்.

நுழைவாயிலில் நுழைந்ததும், கிழபுறம் பார்த்து ஸ்ரீ பால தண்டாயுதபாணி சந்நிதி உள்ளதைப் பார்க்கிறோம். சந்நிதிக் கெதிரே சேவல் கொடியைக் காண்கிறோம். உள்ளே அர்த்த மண்டபமும், அதையடுத்து கருவறையும் உள்ளது. அங்கு தமிழ்க் கடவுளான ஸ்ரீ பாலதண்டாயுதபாணி வேலேந்தி அழகுடன் காட்சி தருகிறார். அர்த்த மண்டப வாயிலில் இடும்பன் வீரபாகு ஆகியோர் இருபுறமும் உள்ளனர். ஸ்ரீ பாலதண்டாயுதபாணியை உளம் நிறைய தரிசிக்கையில் ஆலய ஓதுவார் பாடும் கீழ்கண்ட பாடல் நம் மனதை நிறைக்கிறது.

(1) ''விழிக்குத் துணை திரு மென்-மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகாவெனு நாமங்கள் முன்பு செய்த

பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்தனி
வழிக்குத் துணைவடிவேலும் செங்கோடன்மயூரமே''

தரிசினம் முடிந்து பிரகாரச் சுற்று வரும் போது வலப்புறத்தில் ஸ்ரீ அருணகிரிநாதரையும் அதையடுத்து செல்வ விநாயகரையும் தரிசிக்கலாம். பிரகார வலப்புற மண்டபத்தில உற்சவர் ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமியை வள்ளி தெய்வானை சமேதராக தரிசிக்கலாம். ஸ்ரீ சுப்பிரமணியர் சந்நிதிக்கெதிரில் கோவில் தீர்த்தக் கிணறு உள்ளது. கோவில் சுற்று முடிந்து இடப்புற பிரகாரத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயரை தரிசிக்கிறோம். மேலும் முன் பிரகார இடப்புற மூலையில் நவக் கிரக மண்டபத் திருப்பணிகள் நடந்து வருகின்றன.



ஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமி

வருடத்தில் வைகாசி விசாகம், சூரசம்ஹாரம், கார்த்திகை தீபம், தைப்பூசம் ஆகிய உற்சவங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு கிருத்திகையன்றும் விசேஷ அலங்காரங்களுடன் பூஜைகள் நடைபெறுகின்றன.

சமீபத்தில் கோடி அர்ச்சனை 4—5—66 முதல் 26—1—67 முடிய வெகு சிறப்பாக நடந்தேறியது. நாளும் ஒரு அலங்காரமுடன் தமிழ்கடவுளை பொதுமக்கள் தரிசிக்கும் பேறு பெற்றனர்.

இவ்வாறு ஸ்ரீ பாலதண்டாயுதபாணி தரிசனம் முடிந்து மன நிறைவுடன் வெளி வருகிறோம்.

---

போன்: 26011

**தியேட்டர் உரிமையாளர்களுக்கும், சினிமா ரசிகர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்!**

**கோவை நீலகிரி ஜில்லாக்களுககு எங்கள் கைவசம் உள்ள படங்கள்!**

| | |
|---|---|
| எங்க வீட்டுப் பிள்ளை | பெற்றால்தான் பிள்ளையா? |
| | ஆயிரம் ரூபாய் |
| அன்பே வா | வீரபாண்டியக் கட்டபொம்மன் |
| | பாஞ்சாலி சபதம் (கலர்) |
| பரிசு | வீர சபதம் |
| | அசகாய சூரன் |
| பணக்காரக் குடும்பம் | இது சத்தியம் |
| | சாந்தி |
| தாயின் மடியில் | மகா பாரதம் |
| | அமர தீபம் |
| தெய்வத் தாய் | கல்யாண பரிசு |
| | நானும் ஒரு பெண் |
| கார்த்திகை தீபம் | நீதியின் கரங்கள் |

## சுஜாதா பிக்சர்ஸ்

7/1, தேவி அண் கோ லேன்

**கோயமுத்தூர்-18.**

# ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி கோவில்

மருதமலை.

---

சூலம் பிடித்து யமபாசஞ் சுழற்றித் தொடர்ந்து வருங்காலன்
தனக்கு ஒருகாலும் அஞ்சேன் — கீடல் மீதெழுந்த ஆலங்கு
டித்த பெருமாள் குமாரன் அறுமுகவன் வேலுந்திருக்கையும்
உண்டே நமக்கொரு மெய்துணையே.

(கந்தரலங்காரம்)

தமிழ் கடவுளின் கிரிகளில் கொங்கு நாட்டில் புகழ்கொண்ட மலை மருதமலை. 'குன்று தோருடலும் நின்றதன் பண்போ என்பது நக்கீரர் வாக்கு'. அதை மெய்ப்பிக்கும் தெய்வமாம் மருதமலை நாதனை, பார்க்க சென்றிடலாம் வாருங்கள்.

கோவைக்கு வடமேற்கில் மேற்குத்தொடர்ச்சி மலையினைக் காணலாம். இம்மலையின் மத்தியில் சுமார் 500 அடி உயரத்தில் ஒரு அழகிய பீடபூமியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது இரவு நேரங்களில் அத்திசையில் பார்த்தால் வெண்சங்கிலித் தொடர் ஒன்று அம்மலையில் செல்வதக் காணலாம். இதைபற்றி கேட்டால் மருதமலைப் படிகளின் ஓரத்தே ஒளி சிந்தும் வண்ண விளக்குகள் எனத் தெரியும். இம்மலையினை கோவை விவசாயக் கல்லூரியின் சாலை வழியாக சென்று அடையலாம். இது கோவையிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் உள்ளது. கோவையிலிருந்து ஏராளமான மக்கள் குமரன் திருவடி தரிசிக்க இம் மருதமலைத் தலம் நோக்கி ஒன்ரும் நம்பர் போன்ற பஸ்களிலும், கார்களிலும் செல்கின்றனர்.

மலை தன்னை நெருங்க நெருங்க மலை நடுவே அமைந்துள்ள அமைதியிலுறையும் முருகன் கோவில் தென்படும், படிகளில் ஏறி வசதியுடன் கோவிலை அடையலாம். உள்ளம் மகிழ படி ஏறத்துவங்கும் பொழுது முதலில் ஒரு மண்டபம் தென்படுகிறது இது 1915-ல் திரைப்புகழ் திரு சின்னப்பத்தேவரால் அமைக்கப் பட்டுள்ளது என்று தெரிகிறது. மண்டப நடுவே முருகனின் மயில் வாகனம் உள்ளதையும் காணலாம். இதைத் தாண்டி மேலே படிகளில் ஏறும் பொழுது இத்திருப்படிகளை மக்கள் மன முவந்து உபயமாக அளித்திருப்பதை அறிகிரும். இரண்டா

வது மண்டபம் எதிர்படுகிறது. இம்மண்டபத்தில் தான்தோன்றி விநாயகர் மலைமேல் ஆலயத்தைப் பார்த்து அமர்ந்துள்ளார். இவரை தரிசித்து மேலே சிற்றுளிபட்டு சீராயமைந்த படிகளில் ஏறத்துவங்குகிறோம். அடுத்து 'அருணகிரிநாதன் அருள்நெறி கிருத்திகைக் கழகம்' அமைத்த திரு மண்டபம் நம்மை வர வேற்கிறது.

'முருகா வெனவோர் தாமோ, தடியார் முடிமே விணை தாளருள்வோனே, எனும் திருப்புகழை மனம் கவருகிறது. 1960 முதல் 1962 வரை கட்டப்பட்டுள்ளது இம்மண்டபம். இங்கு காவடித்தூக்கிய இடும்பனை சுமார் இரண்டடி உயரத்தில் காண்கிறோம். அவனுக் கருகிலேயே ஒரு பூச்சி மரத்தில் பிள்ளை வரம் வேண்டுவோர் கட்டிய சிறு தூளிகள் தொங்குவதைப் பார்க்கிறோம். மண்டபத்தில் திருப்புகழ், கந்தரலங்காரம். கந்தரனுபூதி ஆகிய பாடல்கள் நமது கண்ணையும் கருத்தையுப் கவர்கின்றன. இடும்பன் சந்நிதியில் கீழ் காணும் 'வண்ணச் சரம் தண்டபாணி சுவாமிகளின்' பாடலை பார்க்கிறோம்.

"மருதமலையிடும்பா வம்பு செய்வேண்டாம்,
ஒரு பலியும் நீ ஏற்க ஒண்ணு(து) அருள் மகிமைச்
செவ்வேளடிமைத் திறமுடையார்க்கு உளன் ஆமோ?
இவ்வேளையீதுரைத்தேன் யான்".

அ. பா. மலை உச்சிக்குச் செல்கிறோம். மப்பும் மந்தாரமும் மனதிற்கு மகிழ்வை அளிக்கிறது. கோயிலை அமைகிறோம். இரு மலைகளுக்கிடையில் அடைந்துள்ளது இக்கோயில். கோயிலுக்கு வலப்புறம் ஒரு சிறு கல்யாண மண்டபம் உள்ளது. அதன் முன்புறம் அருகில் ஒரு அரசமடித்தடியில் விநாயகர் உள்ளார். துவஜஸ்தம்பத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் வெள்ளி மயில் வாகனம் ஒன்று காண்கிறோம். அதையடுத்து கருவறையில் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமியை தண்டாயுதபாணி தரிசித்து மகிழ்கிறோம். அர்த்த மண்டபத்தில் மருகனுக்கு வலது புறம் விநாயகரும், அம்மையப்பரும் தரிசனம் தருகின்றனர். பிரகாரச் சுற்றில் வலப்புறம் சிவலிங்க வடிவில் மார்க்கண்டேஸ்வரர் சிறு கோயில் கொண்டுள்ளார். இடப்பிரகாரத்தில் ஸ்ரீ மரகதாம்பிகை தரிசனம் தருகிறார். அதையடுத்து நவகிர

ஹச் சுற்றும் அத்துடன் கோபுர தரிசனமும் கிடைக்கிறது சூரிய ஒளியில் கோபுரத்தின் தங்கக் கலசம் கண்ணைக் கூசச் செய்கிறது. பிரகாரச் சுற்று முடிந்து வெளி மண்டபத்தில் நுழையும்போது அங்கே தனக்கும் இடம் பிடித்துள்ள ஸ்ரீ வரத ராஜப் பெருமாளையும் தரிசிக்கலாம்.

•

கோயிலை விட்டு வெளியே வந்து மூலவரின் பழைய கோயில் ஒன்றினை புதிய கோவிலின் வலப்புறம் காணலாம். அங்கு சுயம்பு வடிவில் ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை ஆகியோரை தரிசிக்கலாம். அக் கோயிலின் பின்புற வாயில் வழியாகச் சென்றால் 'பாம்பாட்டிசித்தர் குகைக்குப் போகும் வழி' என்ற பலகை நம்மை கூப்பிடுகிறது. மெல்ல மலைச் சரிவில் சென்று பாம்பாட்டி சித்தர் குகையை அடைகிறோம். சிறிய குகை இங்குதான் பாம்பாட்டி சித்தர் ஒருவர் அக்காலத்தில் இம் மலைக் குகையில் வாழ்ந்து மருதமலை ஆண்டவனை வழிபட்டு வந்ததை அறிகிறோம்.

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட கல்வெட்டில் இந்த மருதமலையைப் பற்றிய குறிப்பு இருப்பதை பூண்டி சாசனத்தின் வாயிலாக அறிகிறோம். மேலும் இந்த மருதாசல மூர்த்தியைப் பற்றிய 'மருதாசல மூர்த்தி சதகம்' மருதாசலபதி தாய் மகள் ஏசல்' ஆகிய நூல்களும் உண்டு. கச்சியப்ப முனிவர் எழுதிய 'பேரூர் புராணத்தில் மருதவரை குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. திருப்புகழில் 'திரிபுர மதனை ஒரு நொடியிதனில்' என்ற பாடலில் 'அணி செயும் மருதமலையோனை' என்றும் இருந்திருக்காலம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதுவும் தவிர திரு கோவைக்கிழார், சிரவணபுரம் திரு. கந்தசாமி அடிகள் ஆகியோரும் இத்தலம் குறித்து நூல்கள் எழுதியுள்ளா

இக்கோயிலில் தினசரி சிறப்பான பூஜைகள் நடைபெறுகின்றன. அருணகிரிநாதர் அருள்நெறிக் கழகத்தார் கிருத்திகை தோறும் சிறப்பான பூஜைகள் நடத்துகின்றனர். ஆண்டு தோறும் 'படிவிழா' சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

நித்ய பூஜைக்கு பரிசுத்தமான :

## ‘கோபால் கற்பூர பில்லைகள்’

உபயோகியுங்கள் !

‘ மைசூர் சுனந்தா அகர் பத்திக் கம்பெனியாரின் ’

— மலர்களின் இனிய மணம் தரும்

## ‘சுனந்த ராஜா அகர்பத்திகள்’

★

—ரோஜா மலரின் மணம் பரப்பும்—

## ‘குலாப்-கே-பூல்’ பத்திகள் !

—மனோகரமான மல்லிகை மணம் தரும்—

## ‘நிகர் க-கே—பூல்’ பத்திகள் !

## உபயோகியுங்கள்.....

N. B:— சுனந்த ராஜா & குலாப்-கே-பூல் பத்திகளுக்கு அனேக போலிகள் வருவதால் சுனந்த ராஜா & குலாப்-கே-பூல் பத்திகள் வாங்கும்போது பாக்கெட்டின் மேல் ‘ மைசூர் சுனந்தா அகர்பத்தி பேக்டரி’ என்ற விலாசம் இருக்கிறதா என்று கவனித்து வாங்குங்கள் !

(தொடர்ச்சி 43-ம் பக்கம்) ★

With the best compliments from:

'Lakshmi Textile Suppliers'

5/4, HEAD QUARTERS ROAD,

COIMBATORE-18.

Telephones : 23112 24514

Grams : 'ELTEX'

Telex : 042/248

'ELTIYESCB'

சினிமா ரசிகர்களுக்கு எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்:—

தரமான திரைப்படங்களை வெளியிடுபவர்கள்

# ராதாராணி

## தியேட்டர்ஸ்

திருச்சி ரோடு, சிங்காநல்லூர், கோவை:5.

## "Radha Rani Theatres"

TRICHY ROAD, SINGANALLUR, COIMBATORE-5

GK 21 Projects equipped with
Cinemoscope & Wide angle
Lenses

opened on 20-9-63

பொது மக்கள் ஆதரவை என்றும்

நாடுகிறோம்.

Proprietors :—

E. K. PALANISWAMY

K. VELUMANI.

Phone: 26136

'தமிழகத்திற்கு முற்றிலும் நம்பகமானதொரு

சரக்குப் போக்குவரத்து நிறுவனம்!




# ABT பார்சல் சர்வீஸ்

(Prop: ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட், பொள்ளாச்சி.)

டாக்டர் நஞ்சப்பா ரோடு, **கோயமுத்தூர்-1**



தந்தி: 'சஞ்சீவி'

டெலக்ஸ்: 262
போன்: 23360
(3 லைன்)

தாமதிக்காது விரைந்து வந்து குறித்த
காலத்தில் உரிய இடத்தில் உங்கள்
சரக்குகளைச் சேர்ப்பிக்கின்றன.

பல ஆன்ருேர்கள் வந்து இம்முருகனின் அழகு குறித்துப் பாடி தரிசித்து திரும்பிய வண்ணம் உள்ளனர். நாமும் இந்த மருதமலே ஆண்டவனே தரிசித்து பிரியாவிடைபெற்று மலே யிறங்கிவருகிருேம்.



தின்னத் தின்னத் திகட்டாதது :

-'ஷாலிமார் கிரீம் பிஸ்கட்டுகள்

R. கோபாலகிருஷ்ணன் & பிரதர்

Props for: *கோபால் கேம்பர் ஒர்க்ஸ்,*

'ஸ்ரீ லக்ஷ்மி நாதம்'

*24/90, தெலுங்கு பிராமணுள் வீதி,*

கோயமுத்தூர்.

*போன்: 23691.* *தந்தி:* 'PUBLICITY'

# ஸ்ரீ அனுபாவி சுப்பிரமணியர் கோயில்

*பெரிய தாடகம், கோவை.*

கோவை இரயில் நிலையத்திலிருந்து 34 ம் நம்பர் பஸ்ஸிலும் கோவை ஆனைகட்டி பஸ் மூலமாகவும் பெரிய தடாகத்தை அடையலாம். பெரிய தடாகம் பஸ் பாதையிலிருந்து தென் திசை நோக்கி சுமார் இரண்டு கல் தொலைவில் சென்றால் பெரிய தடாகம் எனும் சிறிய ஊரை அடையலாம் அதற்குமேலே சிறிது தூரம் தென் திசை நோக்கிச் சென்றால் மலைத் தொடரில் சிறிய கோயில் தென்படுகிறது. மலையடிவாரத்திலிருந்து கோயிலை நோக்கி சுமார் ஒரு கல் தொலைவு மலை மீது ஏறிச் செல்ல வேண்டும். படிகள் அமைக்கப்படாததால் சிறிது சிரமத்துடன் தான் ஏறவேண்டும். துன்பத்திற்குப் பின்தான் முருகனின் திருவடி இன்பம் உள்ளது என்பதை மலைமேல் சென்ற பின் அறிகிறோம்.

தலவரலாற்றைக் கேட்கும்போது இப்பகுதியிலுள்ள மலை மீது குறமகள் வள்ளியுடன் அவளை சிறை மீட்டு வரும் காலையில் தமிழ்கடவுளாம் முருகன் இம்மலை குகையில் களைப்பாறி ஞானத் துயில் துயின்றதாகவும் அப்போது முருகனை அடியார்கள் வணங்க வந்தததுயிலெழுந்து பக்தர்களுக்குக் காட்சி தந்ததாகவும் கூறப்படு கிறது. இதன் சரித்திர வரலாற்றை நோக்கும் போது 17-ம் நூற்றாண்டில் திருமலை நாயக்கர் ஆட்சியில் அவர்களது குறுநில மன்னனான சென்னைய மன்குடியார் என்பவருக்குக் கீழ்தளபதியாக ஒருவர் சரியாகக் கப்பம் கட்டாததால். அக் குறுநில மன்னன் மீது படையெடுத்து வந்ததாகவும், குறுநில மன்னன் இதற்குப் பயந்து இந்த மலைக்குகைகளில் தங்கி இருந்த போது கோயிலுக்கு எதிரிலுள்ள இருடி மலையில் இருந்த தாகரும் அப்போது அங்குள்ள குகைக் கோயிலையும் கொண்டிருந்த அந்த வேலையும் கண்டு வழி பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

1957-ல் மலை மீது பெரிய வெள்ளம் வந்த போது இந்த குகைக் கோயிலும் முருகனின் சுயம்பு வடிவும் அடித்துச் செல்லப்பட்தாக வும் தெரிகிறது. மலைமீது கோயிலை நோக்கி ஏறும்போது இப்படி

அடித்துச் செல்லப்பட்ட தாகவும் தெரிக்கிறது மலை மீது கோயிலை நோக்கி ஏறும் போது இப்படி அடித்துச் செல்லப்பட்ட குகைக் கோயிலின் மேல்புறபாறையை சிவலிங்கமும் நாரதரும் செதுக்கப் பட்ட நிலையில் பார்க்கலாம். இந்தக் காட்டாற்று வெள்ளம் ஐப்பசி மாதம் கிருத்திகை தினத்தன்று கோயிலை அடித்துச் சென்றது என்பது குறிப்பிடத்தக்கது. பழய குகைக் கோயில் மலைமீது கிழதிசை பார்த்து அமைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இக்கோயிலில் மலையிலிருந்து ஒரு சுனை 'அனுமதீர்த்தம்' சலசலத்து எப்போதும் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தச் சுனையைப் பற்றி பேரூர் புராணத்தில் கூட "மருதமலைக்கு அப்புறச்சாரலில் அனுமதீர்த்தம் ஒன்றுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. பழய குகைக் கோயிலுக்கு முன்புறம் மலைச் சாரலில் தலவிருட்சமான உயர்ந்த மாமரம் ஒன்று காட்சி தருகிறது. இம்மரத்துக் கனிகள் சுவையற்ற பொது மக்கள் உண்பதற்கு தகுதியற்றதாக உள்ளது. இது பற்றி விசாரித்த போது முற்காலத்தில் அஞ்ஞாத வாசம் இருந்த காலத்தில் இந்த மலையிலுள்ள முருகனை தரிசிக்க தருமர் தம்பியருடன் வந்ததாகவும் அப்பேது பீமன் இந்த மாமரத்தின் பழம் ஒன்றினை உண்டபோது 'பிற் காலத்தில் பீமனின் எச்சிலான இந்த மாங்கொட்டையிலிருந்து கிடைக்கும் கனிகள் மக்கள் சாப்பிடக்கூடாது' என்று தருமர் சாபமிட்டதாகவும் அதன்படி இம் மரக்கனிகள் யாராலும்பு சிக்க முடியாமல் சுவையின்றி இருப்பதாகவும் ஒருகதை கூறுகிறுர்கள்.

இந்தப் பழய கோயிலுக்குப் பின்புறம் புதிதாக ஒரு கோயில் கட்டப்படுகிறது. முன்மண்டபம், அர்த்த மண்டபமும் கர்பக் கிருகம் ஆகியவைகளும் சிறு பிராகாரமும் பிராகாரத்தில் நவக் கிரக மண்டபமும் உருவாகின்றன. கோபுரம் அழகாகக் காட்சி தருகிறது. கோபுரத்தின் நாற்புறமும் சுப்ரமண்யசுவாமி, ஈசுவரன், அம்மன் ஆகியோர் காட்சி தருகின்றர், கோயிலுக்குள் சுப்ரமண்யசுவாமி வள்ளி தெய்வானையுடன் அழகிய வடிவிலும் வீரபாகு தேவர், விஞயகர், நவக்கிரகங்கள் மயில் வாகனம் ஆகியவைகளை பிரதிஷ்டை செய்யத்தயாராய் உள்ளன கோயில் குபாபிஷேகம். விரைவில் நடைபெற உள்ளது.

With thc Best Compliments from :

VISCO

## Visalakshi & Company

**Machine Tool Manufacturers**

Works & Office: Aerodrome Road,

SINGANALLUR, COIMBATORE-5.



Manufacturer of:

**½" Bench type Drilling Machines:**

**I" Pillar type Drillng Machines:**

**Flexible Shaft Grinders**

**Coolant Pumps,**

**Motorised Bench Grinders**

**Fractional Horse Power Motors**

**DRILLING MACHINE**

Phone: 26546 P. B. No. 867 Grams: VISTOOL

ஸ்ரீ சுப்ரமண்யசுவாமியின் உற்சவர் வள்ளி தெய்வானை யுடன் மிக அழகாகக் காட்சி தருகிறார். முருகன் நாற்கரங் களுடன் அபய ஹஸ்தம், வரத ஹஸ்தம் சூலம்வேல் ஆகியவை களுடன் காட்சி தருகிறார். விநாயகருக்கும் உற்சவர் உள்ளார்.

கார்த்திகை தீபம், சூரசம்ஹாரம், அக்னி நட்சத்திரம், விசாகம் பாலாபிஷேகம் தைப் பூசம் ஆகியவை சிறப்பான உற்சவங்கள். வழக்கமான பூஜைகள் நடைபெறுகின்றன.

இந்தக் கோயிலுக்கு ஹைதர் அலி 30 ஏக்கர் நிலம் மானியமாக எழுதி வைத்துள்ளக் இக்கோயிலில் தேனீர் களும் மலை மீது மயில்களும் அதிகமாக உண்டு மலை உச்சியில் ஒரு நீர் நிலையும் விநாயகரும் உள்ளன. இம்மலையின் மறு சாரல் மருதமலை. இம்மலையில் அநேக சிவாலயங்கள் இருந்திருக்கின்றன. அதற்குச் சான்றாக மலை அடி வாரத்தில் சிதைந்த நிலையில் இன்றும் ஒரு சிவன் கோயில் உள்ளது.

இவ்வாறு வளர்ந்து வரும் குன்றுக் கோயிலான அனுபாவி சுப்ரமண்யசுவாமி ஆலயத்தை கண்டு திரும்புகிறோம்.

## ஸ்ரீ நாகசாயி மந்திர், கோவை.

கோவை மேட்டுப்பாளையம் சாலையில் அவினாசி லிங்கம் கல்வி நிலையங்களைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றால் சாயி பாபா காலனிக்குச் செல்லும் கிளைப் பாதையின் துவக்கத்தி லேயே அமைதியில் உறைவதுதான் ஸ்ரீ நாகசாயி மந்திர் எனும் ஸ்ரீ சாயிபாபா கோயில்.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு நிஜாம் ராஜ்யத்தைச் சேர்ந்த பாத்ரி என்ற சிற்றூரில் ஒரு அந்தணர் குடும்பத்தில் பிறந்த பின்னர் ஒரு முஸ்லீம் பக்கிரியால் வளர்க்கப்பட்டு, பம் பாய்க்கு அருகிலுள்ள கோபர்கான் பக்கத்திலுள்ள 'சீர்ட்டி'

(சீரடி) என்னும் தலத்தில் பல தெய்வீக அற்புதங்களை நிகழ்த்தியவரே ஸ்ரீ சத்திய சாயிபாபா என்று அழைக்கப்பட்டார் இவருக்கு ஸ்ரீ ராமனும் ரஹூமும் ஒன்றே. இவர் ஒரு நாள் தான் வணங்கி வந்த கோயிலின் விளக்கில் உள்ள எண்ணை தீரவே, அருகிலுள்ள கூஜாவிலுள்ள தண்ணீரை எடுத்துஊற்றி விளக்கை எரியவைத்தார். இந்த அதியத்தைப் பார்த்தபிறகே அவரை நாடி பக்த கோடிகள் தேடி வந்தனர். இன்னுமொரு அதிசயம் தமிழ் நாட்டின் கோவையில் நடைபெற்றது. 1943-ம் ஆண்டில் கோவையில் இரத்தினசபாபதி புரத்தில் சாயிபாபா பக்தர்களாக இருந்த இருவர் தங்களுடைய வீட்டில் சாயிபாபா படத்தை வைத்து பிரதி வியாழக்கிழமை பூஜைகள், வழிபாடுகள் செய்து வந்தனர். ஒரு நாள் பஜனை துவங்குவதற்கு சிறிது நேரம் முன்னல் எங்கிருந்தோ ஒரு பெரிய நாகம் திடீரென வந்து படம் விரித்து ஆடத்துவங்கியது. அந்த நாகத்தின் படத்தில் சங்குச்சக்கரம், திரி புண்டரம், ஆகிய சின்னகள் அழகாக இருந்தன. இதைக் காண பல பேர் கூடிவிட்டனர். அந்த நாகமும் நீண்டநேரம் ஆனந்தபரவசநிலையில் ஆடி மறைந்ததாம். இந்த அதிசயத்தைக் கண்ட பக்தர்கள் அந்த சிறு பர்ணசாலையையே பெரிய கோயிலாகக் கட்டினர்.

கிழக்கு நோக்கிய ஆலயம். வெளிமண்டபத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்தைச் சுற்றுவோமானுல் வலப்பிரகாரத்தில் முன்னுல் ஸ்ரீ விநயகரும், அவரை அடுத்து மயில்மீதமர்ந்த முருகனும் கோயில்கொண்டுள்ளனர். முன்னுல் நவக்கிரஹ ஆலயமும், அதையடுத்து ஸ்ரீ ஆஞ்சநேயரின் கோயிலும் உள்ளன. இவர்களை தரிசித்துவிட்டு உள்ளே நுழைந்தால் முன் மண்டபம் பெரிதாகக் காட்சி தருகிறது. அதையடுத்த மண்டபத்தில் ஸ்ரீ சாயிபாபாவின் பளிங்குச்சிலை உருவம் பெரிதாக அமர்ந்த நிலையில் சுமார் ஆறு அடிக்குமேல் காட்சி தருகிறது. சற்று மேலே பார்த்தால் 'யாமிருக்க பயமேன்' என்ற மந்திரச் சொல்லை காண்கிறேம்.

இந்த மந்திரில் ஒவ்வொரு ஞாயிறும், வியாழனும் எண்ணிறந்த பக்தர்கள் கூடி வணங்கி பிரார்த்தனை செய்கின்றனர். அந்தப் பிரார்த்தனைக்கு பலனும் கைமேல் கிடைக்கப் பெறுகின்றனர்.

இக்கோயில் கோபுரத்துடன் 1945 ம் ஆண்டில் கட்டப்பட்டது. முன் மண்டபங்கள் 1953ல் கட்டப்பட்டுள்ளன. 1953-1956க்கு இடையில் விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரஹங்கள் ஆஞ்சநேயர் ஆகியவர்களை பிரதிஷ்டை செய்துள்ளனர். 1960ல் ஸ்ரீ சாயிபாபாவின் பளிங்குச் சிலை ஸ்ரீ புட்டப்பர்த்தி சாயிபாபாவினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியை இலட்சக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

ஸ்ரீ சாயிபாபாவின் தரிசனம் முடிந்து வெளியே வந்து நிமிர்ந்து பார்த்தால் முன் கோபுரவாயில் ஸ்ரீ சாயிபாபாவின் திருவுருவமும், அதையடுத்து வெண்மை நிறக் கோபுரத்தையும் காணுகிறோம். இதைப்பார்த்ததும் நம் வாய் நம்மையறியாமல் கீழ்கண்ட கவியோகியின் பாடலைப் பாடுகிறது.

“தாயு மானவன் சத்தியத் தந்தையுமானான்
சேயுமாயினான் செவ்விய தோழனுமானான்
ஆயும் அன்பருக்க ணைத்துமாம் அமரசுத்தான்மா
சாயிராம் எனும் சத்குரு நாதனைப் பணிவோம் !!!



# ஸ்ரீ இரத்தின விநாயகர் கோயில்

## ஆர். எஸ். புரம். கோவை

இந்த ஸ்ரீ இரத்தின விநாயகர் ஆலயம் கோவை ஆர். எஸ். புரத்தில் நகரத்தின் முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. கோயில் சிறியது தான். எனினும் ஸ்ரீ விநாயகரின் கீர்த்தி கோவை நகரெங்கும் பரவியுள்ளது. ஆர். எஸ். புரம் திவான்பகதூர் சாலையில் சென்றால் கிழதிசை நோக்கி அமைந்துள்ள இக் கோயிலை அடையலாம் திரு. இரத்தின சாபாபதி முதலியார் அவர்களால் கட்டபட்ட கோயில் இது. 1949-ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

கோயிலுக்குள் நுழையும் போது. நேராக விநாயகர் கிழதிசை நோக்கி மூலஸ்தானத்தில் கற்சிலை வடிவில் சுமார் 3-அடி உயரத்தில் உட்கார்ந்த நிலையில் காட்சி தருகிறார். மூலவரான ஸ்ரீ இரத்தின விநாயகர் 'பாசம், அங்குசம், தந்தம், மோதகம் ஆகியவற்றை நான்கு திருக் கரங்களிலும் ஏந்திய காட்சி நம்மைக் கவர்கிறது. மூலஸ்தானத்தையடுத்து உள் மண்டபத்தில், உற்சவ மூர்த்தியான செப்புச் சிலை வடிவில் நின்ற திருக் கோலத்திலுள்ள விநாயகரை, மூலவருக்கு வலக்கைப் பக்கத்தில் தரசிசித்து மகிழலாம்.

அவரையடுத்து, அம்மையப்பரான பழமலை நாதரையும், பிரஹன்னாளை அம்மையாரும் (பெரிய நாயகி) கற்சிலை வடிவில் தோற்றமளிக்கின்றனர். மேலும் அம்மையப்பருக்கு அருகில் நால்வரைக் கற்சிலை விடிவில் காணலாம். மூலவருக்கு இடக்கைப் புறத்தில் உள் மண்டபத்தில் வள்ளி, தெய்வானை சமேதரான அறுமுகரை செப்புச் சிலை வடிவிலும், அதையடுத்தாற்போல் மயில் வாகனனான ஸ்ரீ முருகனையும், கற்சிலை வடிவில் தரிசிக்கலாம். அதனருகில் தென் திசை நோக்கிய நடராஜரையும் சிவகாமி அம்மையும் செப்புச்சிலை வடிவில் மாணிக்க வாசகருடன் காட்சி தருகின்றனர்.

இவ்வாறு மூலவரான ஸ்ரீ இரத்தின விநாயகரை உளமாற தரிசிக்கும் வேளையில் நமது மனம் கீழ்க்கண்ட பாடலைப் பாடத்துவங்குகிறது.

" திகடசக்கரச் செம்முக மைந்நுளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணியா வுறை
விகட சக்கரன் மெய்பாதம் போற்றுவோம் "

மூலவர் உற்சவரை தரிசித்து விட்டுப் பிராகாரச் சுற்று வரும் போது கிழதிசை நோக்கி கற்பக விநாயகர் அமர்ந்திருப்பதைக் காணலாம். அவரை தரிசித்து விட்டு சற்றுப் பின்னால் பார்த்தால் பெரிய அரசும், வேம்பும் கலந்து வளர்ந்த மர நிழலில் சிறிய விநாயகரும் அழகுடன் அமர்ந்துள்ளார். அந்தப் பிராகாரத்திலேயே ஒரு தேவாரத் திருப்புகழ் பாடசாலை இருப்பதை காண்கிறோம். பிராகாரம் அகலமாக மக்கள் அமர்ந்து சொற்பொழிவுகள் கேட்க வசதியுடன் அமைந்துள்ளது. கோபுரச் சுற்று வரும் போது கோபுரத்தின் கீழ் பாகத்தில் தென்திசை நோக்கி தக்ஷிண மூர்த்தியும், மேற்கு நோக்கி லிங்கோத்பவரும், வடதிசை நோக்கி தீர்த்தவாய்க் காலுக்கு மேல் பிரம்மாவும், அவரருகில் தனி மாடத்தில் துர்க்கை தேவியும் காட்சி தருகின்றனர்.

பிராகார வலது மூலையில் சண்டிகேஸ்வரரையும், அவரருகே கோயில் தீர்த்தக் கிணறு, நவக்கிரஹங்கள் ஆகிய வற்றையும் பார்க்கலாம். இக்கோயிலில் கந்தசஷ்டி உற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. இந்த உற்சவத்தில் சிறந்த பல அறிஞர்கள் கலந்து கொள்வது வழக்கம்.

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்பதை இக் கோயிலைப் பார்த்து அறியலாம். ஸ்ரீ இரத்தின விநாயகரை தரிசித்து விட்டு அந்த உள்ளப் பூரிப்பில் அவரிடம் விடைபெற்று அடுத்த கோயிலுக்குச் செல்கிறோம்.



# ஸ்ரீ விருந்தீஸ்வரர் கோயில்

## துடியலூர், கோவை.

'அரிய மறை முதற்பொருளா யண்ட பகிரண்டமுமாயதற்கப் பாலா
யுரியதவ முனிவரரு முணரவொண்ணுப் பேரின்ப வுருவாய்த் தூய,
துரிய முடி வான பரஞ் ஜோதியாய்ப் படிபுகழத் துடிசை மேவும்
விரிகிரண மதி வேணி விருந் தீசரடி முடியின் மேற்கொண்டுய்வாம்'

கோவையிலிருந்து 4-ம் நெம்பர் பஸ் மூலம் துடியலூரை அடைந்தால் இந்த ஸ்ரீ விருந்தீஸ்வரர் கோயிலேயடையலாம்.

இந்த திருத்துடிசயம்பதியானது மிகவும் பூர்வீகஸ்தல மென்றும் விநாயகர், அகத்தியர், கந்தமாமுனி, குருவவிருடி முதலானவர்கள் பூசித்துப் பேறு பெற்ற தலமென்றும் கணேச்சுரபுரம், அகத்திய நல்லூர், கந்தபுரி, திருத்துடிசை என்றும் பல காரணப் பெயர்களை உடைய தென்றும் சிவபெருமான் சுதந்ர மூர்த்தி நாயனுருக்கு வேடனுய் காட்சி கொடுத்தது இந்த ஸ்தலத்திலென்றும் அவருக்கு காட்டு முருங்கைக் கீரை அமுதமாக அளிக்கப்பட்ட ஸ்தலமென்றும், அந்த ஸ்தலத்தின் கண் உள்ள குருவ விருடிதீர்த்தம் சிவதீர்த்தமானது சகலவித நோய்களையும் தீர்க்கும் என்றும் அத்தலத்தின் கண் எழுந்திருளி யுள்ள எம்பெருமாட்டியாகிய உருப் பெருவழகியார் ஆகிய விஸ்வநாயகி அம்மன் அதிக கருணையுள்ள தெய்வமென்றும், வேண்டுவோர்க்கு வேண்டுவது ஓயாமல் அளிக்கும் தெய்வ மென்றும் போற்றப்படுகிறது.

சரித்திர வரலாற்றின்படி, குலோத்துங்க சோழன் காலத்தில் அக்கோயில் ஏறத்தாழ 700 ஆண்டுகளுக்கு முன்னுல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. முன் காலத்தில் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனுர் அவனுசிலிருந்து திரு முருகன் பூண்டிக்கு செல்கையில் இங்கு ஒரு காடு குறுக்கிட்டதாகவும் திசை தவறி இந்த குழுவிலிருந்தவர்கள் பல இடங்களுக்கும் பிரிய, ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனுர் தனியே விடப்பட்டார். வழி தெரியாத நிலையில் நிற்கும் பொழுது அத்துடிசையின் பதியின் கண்ணே எழுந்தருளியுள்ள அம்மையும் அப்பனுமாகிய ஈசனும் ஈஸ்வரியும் வேட்டுவ தம்பதி களாக இவர் முன்னே தோன்றி வழி

காட்ட, ஸ்ரீ சுந்தரர். துடிசையில் ஈசனை துதித்துப் பாடினர், சிவபெருமானும் கருணை கூர்ந்து 'நாம் அளிக்கும் உணவினை உண்டு பசி ஆறுவீர்' என உரைத்துசிவ கணங்களைக்கொண்டு அறுசுவை பதார்த்தமும், கனிச்சுவை உணவும், முருங்கையிலைக் கறியும் சமைத்து சுந்தரருக்கும் அடியார் குழாத்திற்கும் அளித்து அருளினர். சுந்தரரும் விருந்திட்ட ஈசனை விருந்தீஸ்வரர் விஸ்வநாயாகி என்று பாமாலை சூடி மனமகிழ்ந்து விடை பெற்றார்.

இது கிழக்கு நோக்கிய கோயில். முன்புறம் பெரிய அரச மரமுள்ளது. வெளிப் பிராகாரத்தில் நுழைந்தவுடன் மேற்கு நோக்கி சூரிய மூர்த்தியும் தென் திசை நோக்கி தக்ஷிண மூர்த்தியும் கிழக்கு நோக்கிய மூல விநயகரையும் பின்புறம் சண்டிகேஸ்வரர் ஆகியவர்களையும் பிராகாரத்தில் தரிசிக்கலாம். கோபுரம் பழமையானது. பிராகாரத்தின் இடப்புறத்தில் ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில் கொண்டுள்ளார். எதிரே மயில் வாகனம் உள்ளது. அதையடுத்து விஸ்வநாயகியம்மன் கோயிலும் உள்ளது. விஸ்வநாயகியம்மன் சுமார் 6 அடி உயரத்தில் உள்ளார். எதிரே நந்தி தேவரும் உள்ளார். அதையடுத்து ஸ்ரீ லட்சுமி நாராயண பெருமாளின் கோயில் உள்ளது. இவரை எதிர்நோக்கி அநுமார்சேவித்த நிலையில் உள்ளார் இவரை தரிசித்து விட்டு மேலே நவக்கிரஹக் கோயில், கால பைரவர் ஆகியவர்களையும் தரிசிக்கலாம் இவர்கள் அனைவரை தரிசித்து விட்டு ஸ்ரீ விருந்தீஸ்வரர் ஆலயத்தில் நுழைந்தால் அர்த்த மண்டபத்தில் ஸ்ரீ நடராஜர் சிவகாமியம்மை, வள்ளி தெய்வானை, சுப்பிரமணியர், சுந்தரர், மாணிக்க வாசகர் சூல தேவர், பிச்சாடனர், லட்சுமணப் பெருமாள், வீரபாகுத் தேவர், சோமாஸ் கந்தர் ஆகியவர்களின் உற்சவர்களை தரிசிக்கலாம். அதையடுத்து கர்ப்பகிருஹத்தில்ஸ்ரீவிருந்தீஸ்வரை தரிசிக்கலாம் இந்த சுயம்பு வடிவலிங்கம் சுந்தரரால் அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டதாக அறிகிறோம் இதற்கு முன்புறம் நாகசர்ப்பத்தின் கீழ் ஒரு சிவலிங்கம் காட்சிதருகிறார்.

மாசி மாதம் ஒரு நாள் சூரிய ஒளியின் கீற்று வெளிப்பிராகாரத்திலிருந்து லிங்கத்தின் மீது விழும்படி சிற்பி கோயிலை அமைத்துள்ளான்.

ஆடி மாதம் குரு பூஜையன்று அன்னதானம் சிறப்பாக நடைபெறுகிறது இக்கோயிலுக்கு திப்பு சுல்தானுல் நிலம் மானியமாக அளிக்கப்பட்டதாக அறிகிறோம். ஆருத்திரா தரிசனம் சிறப்பாக நடைபெறுகிறது. சுப்பிரமணியருக்கு கிருத்திகை தோறும் விஷே பூஜை நடைபெறுகிறது. விஸ்வநாயகியம்மன் கோயிலில் ஆடி ஐந்து வெள்ளிக் கிழமைகளிலும் ஊஞ்சலுடன் சிறப்பான பூஜைகள் நடைபெறுகின்றன. மார்கழி மாதத்தில் விஷேச பூஜைகள் நடைபெற்றுவருகின்றன.

இப்படியாக ஸ்ரீ விருத்தீஸ்வரர் தரிசனம் முடிந்து திரும்புகிறோம்.

## ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி கோயில்,

### ராம் நகர், கோவை.

---

நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறு படடழிய வாகை
சூடிய சிலை ராமன் தோள்வலி கூறினோர்க்கே

கோவை ஜெயில் ரோடிலிருந்து மேற்கு நோக்கி பிரியும் பாதையில் உள்ள ராம் நகரில் உள்ளது இந்த இராமர் கோயில் என்னும் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி கோயில்.

அஷ்டாட்சரம் 'ரா' என்னும் எழுத்தும் பஞ்சாட்ஷரம் 'ம' என்னும் எழுத்தும் ஒன்ருக 'ராமா' என்று மாறியது என்பது பெரியவர் கூற்று. இதையே இக்கோயிலில் கடவுளாகக் கொண்டனர். 1927ம் ஆண்டில் பிராமணர் தெருவாக இருந்த இன்றைய ராம் நகரில் பிராமணர்களால் எழுப்பப்பட்டது இக் கோயில். பிராமணர்களின் பிரிவுகளான வைணவர், ஸ்மார்த் தார், மத்வர் இவர்களுக்குப் பொதுவாக வழிபடும் வகையில் ஸ்ரீ இராமர், ஸ்ரீ விஞயகர் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆகியதெய்வங்களை பிரதிஷ்டை செய்து கோயில் கட்டினர். ஆறு ஆண்டுகள் சிறிது சிறிதாக கட்டப்பட்டு 1933-ல் மார்ச் மாதத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மேலும் 1934-ம் ஆண்டு நவக்கிர ஹப்பிர திஷ்டை செய்து அதற்கு சிறு கோயிலையும் அமைத்தனர். நகரின் செல்வந்தர்களால் கர்ப்பக்கிருஹம் முன் மண்டபங்கள் விஞயகர் சந்நிதி ஆகியவை கட்டப்பட்டன.

தெற்கு நோக்கிய இக்கோயிலின் முன்னுலுள்ள சிறு கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும் ஒரு துவஜஸ்தம்பம் தென்படுகிறது. அதற்கடுத்தாற்போல வெளித் திண்ணை போன்ற ஒரு மண்டபமும், உள்ளே ஒரு மண்டபமும் உள்ளன. உள்மண்டபத்தில் கிழதிசை நோக்கி மூலவரின் வலப்புறம் ஸ்ரீ விஞயகர் தனி கோயிலில் அமர்ந்துள்ளார் அதே மண்டபத்தில் இராமபக்தரான ஸ்ரீ ஆஞ்சநேயரும் ஸ்ரீ இராமச்சந்திரனை நோக்கி கூப்பிய கரத்துடன் தனிக் கோயிலில் தோற்றமளிக் கிருர்.

மூலவரின் இடப்புறம் நவக்கிர ஹங்களையும் தனி மாடத் தில் தரிசிக்கலாம். இவர்களையெல்லாம் தரிசித்தவாறு உள்ளே சென்ருல் மூலவரான ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி கையில் கோ தண்டத்துடன், அபய உறஸ்தனக கற்சிலை வடிவில் எழுந்தருளி யுள்ளார். அருகில் சீதாபிராட்டியும், கோதண்டஉறஸ்தனை ஸ்ரீ லக்ஷ்மணரையும் தரிசிக்கலாம். அருகிலேயே உற்சவரும் ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி, சீதாபிராட்டி, இலக்குவர் சகிதம் அழகுறக் காட்சி தருகிருர். (இராமர் வடிவம் நம் மனதில் வீர த்தையும், அழகினையும் ஒருங்கே அளிக்கிறது) ஸ்ரீ கோதண்ட

ராமஸ்வாமி தரிசனம் முடிந்து பிரகாரச் சுற்று வரும்பொழுது கோயிலுக்குப் பின்னால் ஒரு அரசமரமும் அதனடியில்பிள்ளையாரையும் தரிசிக்கலாம். கோயிலின் வடகிழக்குப் பிரகாரமூலையில் ஒரு பெரிய 'பிரவசன மண்டபம்' கட்டப்படுகிறது. (பிரசங்க மண்டபம்)

இக் கோயிலின் உற்சவங்களான விநயக சதுர்த்தி, கோகுலாஷ்டமி, விஜயதசமி, கார்த்திகை, அனுமத் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி ஆருத்திரா தரிசனம், நவமி, சிவராத்திரி, பிரம்மோற்சவம் ஆகியவை நடைபெறுகின்றன. விநயகர், உறனுமார் இராமர் ஊர்வலங்கள் உண்டு. மேலும் இக்கோயில் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமிக்கு பாஞ்சராத்திர முறைப்படி அருச்சனைகள் நடைபெறுகின்றன.

இக்கோயில் தெய்வீக மணம் நம் இதயத்தை நிறைக்க ஸ்வாமி ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி தரிசனம் முடிந்து மன மகிழ்வுடன் வெளியேறுகிறோம்.

## ஸ்ரீ தண்டபாணி சுவாமி திருக் கோயில்,

சிரவணபுரம், கௌமார மடம்.

கோவையிலிருந்து சிரவணம்பட்டியை டவுன் பஸ் மூலம் அடையலாம். சிரவணம் பட்டியிருந்து சிறிது தூரம் சென்றால் கௌமார மடத்தினை அடையலாம். அமைதியில் உறையும் இம்மடத்தின் மூலம் சமயமும் தெய்வீகமும் மணம் வீசித் தமிழ் நாடெங்கும் பரவுகிறது என்பதும் நமக்குப் புலப்படும்.

இந்த கௌமாரமடம் மேற்கு திசை பார்த்து அமைந்துள்ளது. இங்கு சொற்பொழிவு கூடமும் மடத்தின் நூல்கள் வைக்குமிமுடம் உள்ளன. மேலும் அங்கே ஆத்மீகக் கோட்பாடுகளைக் காட்டும் குறிப்புப் படங்களும் உள்ளன. மேலும் இம் மடத்தின்



அழகிய நாயகி அம்மன்

வெளியீடாக 110 நூல்கள் தோத்திர சாஸ்திர வரலாறுகளாக வெளி வந்துள்ளன. இந்த மடம் 1908-ம் ஆண்டுக்கு முன்னமேயே நிறுவப்பட்டது என அறிகிரேும். அருள் மிகு தவதிரு இராமானந்த சுவாமிகள் 1908-ம் ஆண்டிற்கு முன்பே சித்தி மகோற்கட விநயகர் கோவில். ஸ்ரீ தண்டபாணி சுவாமி திருக் கோயில், ஸ்ரீ தண்டபாணிசுவாமி திருக்கோயில், கௌமாரமடாலயம் ஆகியவற்றை நிறுவி அருவினர். மேலும் 1918 ஜனவரி 22-ம் தேதி நமது உடமையாகிய சொத்துக்களை தவத்தி கந்தசாமி சுவாமிகள், ஸ்ரீ தண்டபாணி கோவிலுக்கு சாசனம் எழுதி வைத்துள்ளார்.

1956-ல் அருள்மிகு இராமானந்த சுவாமிகள் திருவருட பேற டைந்த பின்பு அவர்களது நினைவாக தவத்திரு இராமனந்த அடிகள் உயர்நிலைப்பள்ளியும் துவக்கப்பட்டது. அதன்பிறகு 9—2—64ல் பழனி மலையில் ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சந்நிதியில் தவத்திரு சுந்தர சுவாமிகள் மடத்தின் தலைமையை ஏற்ருர் தவத்திரு சுந்தர சுவாமிகள் கத்தசாமி சுவாமிகளைப் போலவே பல இடங்களில் கோயில்களை நிறுவி சமயச் சொற்பொழிவுகளும் செய்து வருகின்ருர்.

கௌமார மடத்திலிருந்து சிறிது தூரம் சோலைகளுடே வட திசைசென்ருல் ஸ்ரீ பால தண்டாயுதபாணி கோயிலை அடையலாம். வடதிசை பார்த்த கோயில். முன்புரம் துவஜஸ்தம்பம் உள்ளது. அதை அடுத்து முன் பிராகாரமும் அதைத் தாண்டி உள்ளே சென்ருல் ஒரு சிறு மண்டபம் உள்ளது. அதன் நடுவே மயில் வாகனம் பால்தண்டாயுதபாணியை எதிர்நோக்கி உள்ளது. மூலவருக்கு வலப்புறம் அப்பனுகிய அழகிய நாதரும் இடப்புறம் அன்னை அழகிய நாயகி அம்பாளையும் தரிசிக்கலாம். அர்த்த மண்டபத்திலேயே உற்சபரான ஸ்ரீ குமரகுருபரரை வள்ளி தெய்வானை சமேதரராய் தரிசித்து மகிழலாம். பின்புரம் கருவறையில் ஸ்ரீபாலதண்டாயுதபாணியைவேலேந்திய அழகிய கோலத்தில் தரிசித்து மகிழலாம். மூலவர் அழகிய கற்சிலை வடிவம் சுமார் 5 அடி உயரம் இருக்கும்.

ஸ்ரீ பாலதண்டாயுதபாணி தரிசனம் முடிந்து பிரகாரச் சுற்று வரும்போது புதிதாக்கப்பட்ட கோபுரத்தையும் தரிசிக்கலாம். இக்கோயிலின் பின்புறம் வடதிசை பார்த்த ஸ்ரீ பால சந்திர விநாயகரும் கோயில் கொண்டுள்ளார்.

கோயிலில் பூசைகள் தவத்திரு சுந்தர சுவாமிகளாலேயே முறைப்படி செய்யப்பட்டு வருகிறது. 29—5—56 ஞாயிறு காலை கோயிலின் எல்லா மூர்த்திகட்கும் ஆராதனையும், கும்பாபிஷேகமும் நடைபெற்றது. தைபூசம் பங்குனி உத்திரம்கிருத்திகை சதுர்த்திவிழா ஆகியவை ஊர்வலத்துடன் நடைபெறுகின்றன.

வெள்ளிக்கிழமை தோறும் பகல் 12 மணி பஜனையும் சமயச் சொற்பொழிவும் நடைபெறுகின்றன. இவ்வாறாக கௌமார மடம் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி ஸ்ரீ பாலசந்திர விநாயகர் ஆகிய கோயில்களைத் தரிசித்து விட்டு திரும்புகிறோம்.

## தேனீஸ்வரமுடையார் கோயில்,

### வெள்ளலூர்.

---

சிங்காநல்லூருக்கும் தெற்கே நொய்யலாற்றுக்கும் அப்பால் தென் புறத்தில் அமைந்துள்ளது இந்த வெள்ளலூர் கிராமம். ‘வள்ளல்கள்’ அரசாண்டு வாழ்ந்து வந்த ஊராததால் ‘வள்ளலூர்’ என்ற பெயர் ஏற்பட்டிருக்குமென்றும், அதுவே நாளடைவில் மருவி ‘வெள்ளலூராக’ மாறியது என்றும் கூறப்படுகிறது. இத்தலம் வரலாற்று புகழ் மிக்க ஊரென்றுபுரிகிறது. இங்குள்ள பழமையின் சின்னமாக சிவன் கோயிலான தேனீஸ்வரமுடையார் கோவில்’ விளங்குகிறது. ஊரின் மேற்கே ஓதுப்புறத்தின் நொய்யலாற்றின் அருகே இந்த தேனீஸ்வரமுடையார் கோயில் அமைந்துள்ளது.

இப்பொழுது ''தேனீஸ்வரர் திருக்கோயில்கொண்டு விள ங்கும் வெள்ளலூர் 'அன்னதான சிவபுரி' என்ற பெயருடன் சுமார் 3000 வீடுகள் கொண்ட பெரிய கிராமமாக விளங்கிவந்த தாக தெரிகிறது. இக்கோயிலில் மூலவரான 'தேனீஸ்வர முடையார் லிங்க வடிவில் அமைதியாக உண்மையின் உதாரண மாகவிளங்குகிறுர். தேனீக்கள் எப்பொழுதும் கூடுகட்டி வாழ் வதும் பூசைவேளையில் கடவுளை அண்டி வந்து தேன் சொரிவ தாலும் இந்தக் கடவுளுக்கு 'தேனீஸ்வரமுடையார்' என்று பெயர்க் காரணம் கூறப்படுகிறது. கோவிலின் முன்புறம் ஸ்தல விருட்சமான அரசமரம் காலத்தில் அளவு கோலாய் ஓங்கி வளர் து தென்படுகிறது. மேலும் அங்கு நந்தியையும் பார்க்கிறோம். கோவிலில் நுழைவாயிலைக் கடந்து உள்ளே புகுந்ததும் இடப் புறம் தென்கிழக்கு மூலையில் பிராகாரத்தில் ஒரு சிறிய மாடம் தென்படுகிறது. அது குறித்து கேட்டபொழுது இம்மாடத்தில் அடியிலிருந்து பூமிக்குள் சுரங்கப் பாதை ஒன்று மூலவரான தேனீஸ்வரமுடையார் வரை செல்வதாகவும் சமீபத்தில் அதை சுத்தம் செய்ய எண்ணி பார்த்தபொழுதுகுகை நெடுகிலும் நல்ல திருநீறு கிடைத்ததாகவும் கூறப்பட்டது. இதிலிருந்த யாரோ ஒரு சந்நியாசி அக் குகையை அமைத்து வசித்திருக்கலாமென்று தெரிகிறது. பின்னர் குகையை சுத்தம் செய்து மூடிவிட்டனர்! இன்னும் பிராகாரத்தில் மற்ருெரு மாடத்தில் நடுவாகமீசையுடன் ஒரு ஆண்சிலையும் அவரது இருபுறத்திலும் ஆறு பெண்களின் உருவங்களும் இருக்கின்றன. அவை, அருகே அமைந்துள்ள அறுபத்தி மூண்று தாயன் மார்களைபிரதிஷ்டை செய்த வர்களின் சிலைகள் என்று தெரிகிறது. மேலே செல்லுகையில் சூரிய நாராயணரை தரிசிக்கிறோம். அதையும் தாண்டி 63 நாயன்மார்களின்சிலைகள் உள்ளன. ஆனுல் அந்தோ, அதில் பாதிக்குமேல் பின்னமாக்கப்பட்டு உடைந்த நிலையில் தோற்றமளித்து இதயத்தை நெகிழச் செய்கின்றது. வருத்தத்துடன் மேலே செல்லும் பொழுது மேற்குப் புறம்பெரிய சித்தி விநயகரை காண்கிறோம். மேலும் சென்ருல் பஞ்சலிங் கேஸ்வரரையும் பால தண்டபாணியின்சிலையையும் தரிசிக்கிறோம் பாலதண்டபாணியின் புதுச்சிலை மனதைக் கவர்கின்றது.

வடக்குப் பிரகாரத்தில் சண்டிகேஸ்வரரின் கோயிலும் உள்ளது கோபுரம் தஞ்சை பெரிய கோயில் பாணியில் நிழல் சாயா கோபுரமாக கட்டப்பட்டுள்ளது எனக் கூறுகிறார்கள்

பிராகாரத்திலேயே வடகிழக்கு மூலையில் நவக்கிரகங்களும் பைரவர் சந்நிதியும் உள்ளன. இந்த பைரவர் காசியிலிருந்து கொண்டு வரப்பட்டவர் எனத்தெரிகிறது உள் கோயிலின்நுழை வாசலில்நிலைப்படியில் உள்ள கல்தூண்களிலும்கல்வெட்டுகளைக் காண்கிறோம். உள்ளே 'தேனீஸ்வரமுடையார் அமைதியாகக் காட்சியளிக்கிறார் இடபுறம் சிவகாமி அம்மை எழுந்தருளியுள்ளார் இத்துணை புகழ்பெற்ற கோயிலின் தற்கால நிலைமையைப் பார்க்கும்பொழுது மனம் வேதனைப்படுகிறது. காலமாக கிருத்திகை தோறும் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன என்று அறிகிறோம்.

ஒருபழமை வாய்ந்த கோயிலை தரிசித்த திருப்தியுடன் வெளிவருகிறோம்.

## உலகளந்த பெருமாள் கோயில்.

### சிங்காநல்லூர்

வாய் மொழிந்து வாமனனாய் மாவலிபால்
மூவடிமண் நீளந்து கொண்ட நெடுமாலே
தாவிய நின் எஞ்சா இணையடிக்கே ஏழ் பிறப்பும்
ஆளாகி அஞ்சாதிருக்க அருள்

சரித்திரப் பிரசித்தி பெற்ற கரிகால சோழனின் (சுமார் கி. பி. 2-ம் நூற்றாண்டு) தந்தை சோழ சாம்ராச்சியத்தை ஆண்டு வந்த போது போர் மூண்டது. பகைவர்கள் வெற்றி பெற்றனர். அப்பொழுது சோழ அரசராக இருந்த கரிகால

சோழனின் தாயான 'சிங்களம்மாள்' நிறை கர்ப்பிணியாக இருந்தாள். அவள் தன் கணவனை இழந்த பொழுது தன் வயிற்றிலுள்ள சிசுவைக் காப்பாற்ற இந்த கிராமத்திற்கு வந்து. இங்குள்ள ஓர் அந்தணர் வீட்டில் மறைந்து வாழ்ந்திருந்தாள். இங்கேதான் 'கரிகாலன்' பிறந்து வளர்ந்தான். பின்னர் பகைவரது ஆட்சிக்குள் இருந்த சோழமண்டலம் சீர் குலைந்த பொழுது, மக்கள் பழைய சோழ மன்னர் பரம்பரையைத் தேடி இந்த ஊரிலிருந்த 'கரிகாலனைக்' கண்டுபிடித்து, தங்கள் நாட்டிற்கு கூட்டிச் சென்று முடி சூட்டினர். கரிகாலனும் தன் தாயாரின் துயர் துடைத்து ஆதரவளித்த இந்த ஊரிலே ஓர் கோயிலைக் கட்டி கோயிலைச்சுற்றி வீதிகளமைத்து, அந்த விதிகளெல்லாம் அந்தணர்களை குடியேற்றி அவர்கள் குறையின்றி வாழ தானியங்களையும் வழங்கினான். சிங்களம்மாளை ஆதரித்துப் போற்றி, அதனால் பெருமை பெற்ற இந்தச் சிறு ஊர் அன்று முதல் 'சிங்களம்மாள் ஊர்' என்று பெயர் பெயர் பெற்று, நாளடைவில் 'சிங்காநல்லூர்' என்று மாறியது. இது பழைய கதை.

ஆனால் சமீபத்தில் வெளியான அரசினர் அரசாங்கம் கெஜட்டில் (பக்க எண் 587, The Gazetter of India Madras CBE.) கோவைக்கு 'நான்கு மைல் தூரத்திலுள்ள சிங்காநல்லூர் என்ற கிராமம், ஒரு காலத்தில் பெரிய கோட்டையுள்ள நகரமாக விளங்கியது என்றும் அக்கோட்டை பிற்பாடு 'மராத்திய' அரசர்களால் அழிக்கப்பட்டது என்றும் இந்த கிராமமானது சிங்கம்மாள் என்ற ஒரு கொங்கு சோழ அரசனுடைய மனைவியால் அந்தணர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டதுஎன்றும்ஆதலால் இவ்வூருக்கு 'சிங்கம்மாள் ஊர்' என்று பெயர் வந்து அதுவே மருவி 'சிங்காநல்லூராக' மாறியுள்ளது என்றும் காணப்படுகிறது. மேலும் வேதியருக்கு தானமாக அளிக்கப்பட்ட ஊராதலால் இதை 'வேதபுரி' என்றும் வழங்கப்பட்டது.

அன்று அந்தணர்களில் பலர் சைவர்களாக இருந்தும் நாமம் தரித்தனர். இங்கு விஜயம் செய்த வைணவ மதச்சாரியார் ஸ்ரீ இராமானுஜரே.

**SERVICE STATION EQUIPMENT THAT SPELLS SERVICE**

ELGI URACA

Automatic Air Compressors



Piston type Car Washers



Hydraulic lifts



Manufactured by

**ELGI EQUIPMENTS PRIVATE LIMITED**

India House
Trichy Road, Coimbatore

Sole Selling Agents

**ASSOCIATED TRADES**

7/3, Patullos Road, Madras-2
Branches at: Bangalore-25
Bombay-1 ... Calcutta-16

High Pressure Greasing Equipment





## உலகளந்த பெருமாள் கோயில்

இத்தலத்தின் புராண வரலாற்றுப்படி பார்க்கும்பொழுது ஆதிகாலத்தில் மகாபலி என்ற ஓர் சக்கரவர்த்தி தேவேந்திரனிடம் போர் தொடுத்தான். அப்போரில் தோல்வியடைந்து தன்னுடைய சகல சம்பத்துக்களையும் இழந்தான் பின்னர் அந்தணர்களால் நடத்திவைக்கப்பட்ட 'விஸ்வஜித்து' என்ற யாகத்தால் தேவலோகத்தை ஆக்கிரமித்து, நூறு அசுவமேதயாகம் செய்ய யத்தனித்தான். தேவேந்திரன் இதைத் தடுக்க குருவாக்கின்படி தன்னுடைய பரிவாரங்களுடன் தேவலோகத்திலிருந்து பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள பரந்தாமனை அணுகினான். பரந்தாமன் காசிப முனிவருக்கும் அவரது பத்தினியான அத்தி தேவிக்கும் மகனாய் அவதரித்து, காசிபரால் உபநயனம் செய்யப்பட்டு மகாபலியின் யாகசாலைக்கு 'வாமனர் வடிவத்தில்' சென்று மூன்றடி மண் வேண்டி நின்றான் இது தெரியாத மகாபலியும் கொடுத்தேன் ' என்று சொல்ல வாமனர்விசுவரூபமெடுத்து திருவிக்கிரமனாக மாறி இரண்டடியால் அனைத்துலகையும் அளந்து, மூன்றாவது அடி அளக்க இடமெங்கே என்றான்? இடம் கொடுக்க சக்தியற்ற மகாபலியும் தன்னுடைய வாக்கு தவறாது சிரசை கொடுக்க, அதன் மீது காலைவைத்து பாதாள உலகில் மகாபலியை கடவுள் சேர்ப்பித்தார் தேவரும் உலகும் மகிழ்ந்தனர். அந்தத் திருவிக்கிரம நாராயணரே இங்கு உலகளந்த பெருமாளாக வீற்றிருக்கிறார்.

சோழன் தான் கட்டிய கோயிலில் உலகளந்த பெருமாளையே மூலவராக அமைத்தான். இந்த சிலைதான் 'திப்பு சுல்தான்' காலத்தில் அவனால் கவரப்பட்டு மைசூர்வரை( திரு தொ. மு பாஸ்கர தொண்டான் கூற்று) சென்று மீண்டது. இது நல்ல சோழர் காலத்து செப்புச்சிலை. இதையே சரித்திரப் பேராசிரியர் திரு க. சி. நீலகண்ட சாஸ்திரிதமது' தமிழர் பண்பாடு வரலாறும்என்ற புத்தகத்தில் 'பல்லவர் கால சிற்பம்' என்று குறிப்பிடுகிறார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இச்சிலை உருவாயிருக்கவேண்டும். எட்டு திருக் கரங்கள், ஒவ்வொரு கரத்திலும் ஒவ்வொரு ஆயுதம் (சுதரிசனம் என்கிற சக்கரம், பாஞ்சசன்னியம் என்கிற சங்கம் சாரங்கம் என்கிற தனுசு. கௌமோதகி என்கிற

கதை, சதசந்திரம் என்கிற கேடயம், வித்யாதரம் என்கிற வாள் அக்ஷயங்களான இரண்டு அம்பாருப் பொதிகள் ஆகியவை) தூக்கிய திருவடியையும், ஊன்றிய திருவடியும் இணைத்துநிற்கும் ஆடை அழகாக விரிந்து நிற்கிறது. ஒருகாலை தூக்கிய பொழுது அதற்கேற்ப தலை சாய்த்து நிற்பது அற்புதமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இச்சிலை உருவம் முழுவதும் ஊன்றிய ஒற்றைக் காலின் பலத்திலேயே நிற்பது என்று அறிகிறபோது நாம் வியக்கிறோம். கண்களில் ஒளிரும் சாந்தி, உதட்டிலே தவழும் புன்னகை, கைகளையும் கால்களையும் லகவகமாக பின்னிப் பிணைந்திருக்கும் எழில் எல்லாம் இந்தத் திருவுருவை செய்த சிற்பியின் முன்னால் நம்மை தலைசாயச் செய்கிறது. நம்மையும்.

'ஒரு குறளாய் இரு நிலம் மூவடி மண் வேண்டி
'உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருகென மாவலியை சிறையில் வைத்த தாடாளன்''

என்று பாடச் சொல்கிறது.

இங்குள்ள உற்சவமூர்த்தி ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸ்ரீ தேவி பூதேவி சமேதராய் தோற்றமளிக்கிறார். சுமார் மூன்றடி உயரமுள்ள இச்சிலை அழகான செப்புச்சிலைகளுக்கு ஒரு உதாரணம். நான்கு திருக்கரங்களோடு அருள் பாலிக்கும் தோற்றம் விஜயதசமி, வாமனஜெயந்தி, ஸ்ரீ ராமநவமி, புரட்டாசி சனிக்கிழமை ஆகிய உற்சவ காலங்களில் சுவாமி திரு உலாவரும் காட்சி கண்கொள்ளாதது. கர்ப்ப கிருகத்தை அடுத்து உள் மணடபமும் அதைச்சுற்றி பிரகாரங்கள், சமீபத்தில் கட்டப்பட்ட கல்யாணமண்டபம், முன்னால் பிரசன்ன மகா கணபதி மண்டபமும் அமைந்துள்ளன. கோயிலின் முன்னால் துவஜஸ்தம்பமாக ஒரு கம்பம் உள்ளது.

மகா கணபதி மண்டபத்தில் உள்ள பிரசன்ன மகா கணபதிக்கு பட்சந்தோறும் மகாபிர தோஷமும், விநாயக சதுர்த்தி அன்றுஉற்சவமும் சிறப்பாக கொண்டாடப் படுகின்றன.

இவ்வாறாக சிங்கை மாநகரின் பெயர் கொண்ட உலகளந்தப் பெருமாளை தரிசித்துவிட்டு மனதிருப்தியுடன் வெளிவருகிறோம்.

டுள்ளார். இதுதான் திப்புசுல்தானுடைய படை வீரர்களால் விட்டுச்சென்ற கல்லாகும். இந்த சுவாமி பொது மக்கள் பார்க்க இயலாமையால் சிற்ப வடிவில் மற்றொரு மூலவரை அம்மன் வடிவில் அமைத்திருக்கிறார்கள். அம்மனுக்கு வலப்புறம் விநயகரும் இடப்புறம் பஞ்சலோகத்தால் ஆன அம்மனின் உற்சவ மூர்த்தியும் அர்தத மண்டபத்தில் உள்ளனர். அதையடுத்த வெளி மகா மண்டபம் பக்தர்கள் வழிபட அமைந்துள்ளது.

இக்கோயிலில் சிறப்பாக, சித்திரை முதல் செவ்வாய் கிழமை பிரம்மோற்சவம் துவங்கி சுமார் 12 நாள் விமரிசையாக நடந்து வருகிறது. இது தவிர ஒவ்வொரு தமிழ் மாதப் பிறப்பும் பௌர்ணமி நாட்களில் மாலையில் விசேஷ அபிஷேகங்களும், கோயிலுக்குள் உற்சவருடைய திரு உலாவும் நடைபெறுகிறது. தினந்தோறும் இருவேளை பூஜையும், செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் விசேஷ அலங்காரங்களுடன் பூஜைகளும் நடைபெறுகின்றன. இது தவிர ஆடி மாத வெள்ளிக்கிழமைகளிலும் ஆவணியில் விநாக சதுர்த்தியும், புரட்டடாசியில் நவராத்திரி பத்து நாட்களும் விசேஷ அலங்கார பூஜைகளும், சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. கார்த்திகை விழா மூன்று தினங்களிலும் ஆயிரம் விளக்குகள் சிறப்பாக அமைக்கப்படுகின்றன. மார்கழி மாதம் 30 நாட்களும் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. தையில் சங்கராந்தி, சிவராத்திரி, உபாதி பண்டிகையிலும் சிறப்பாக பூஜைகள் நடைபெறுகின்றன.

இந்த ஸ்ரீ தண்டு மாரியம்மன் எந்தவித நோய் நொடிகளையும் தீர்க்கும் சக்தியுள்ளதாகவும், பக்தர்களின் வேண்டுதலுக்கு செவிசாய்க்கும் தெய்வமாகவும் இருப்பதால் மக்களின் கவனமும், பக்தியும் பெருமளவில் உள்ளது.

ஸ்ரீ தண்டு மாரியம்மனின் தரிசனம் முடிந்து அங்கு மூலவருக்கு அருகில் எழுதப்பட்டுள்ள கீழ்கண்ட பாடலைப் பாடி மன அமைதி பெற்று வெளிவருகிறோம்.

"மாரித்தாயின் மலரடி வாழ்க"

"நாயகி நான் முகி நாராயணி கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
ஆயகி யாதியுடையாள் சரணம் அரண் நமக்கே"

(அபிராமி அந்தாதி)

# ஸ்ரீ விஸ்வேஸ்வரஸ்வாமி கோயில்,

## பேட்டை.

---

மைசூர் மன்னர்கள் ஆண்ட காலத்தில் மருதைய யதார்த்தி, வீரப்ப யதார்த்தி என்ற இரு சகோதரர்கள் கோவையை அடுத்த பகுதியை ஆண்டு வந்தனர். அக்காலை, சிவதீர்த்தர் என்ற சிவநேயச் செல்வர் ஒருவர் பேட்டையிலிருந்த சிறிய சிவன் கோயிலுக்குச் சென்று மூர்த்தியை வழிபட்டு வந்தார். பேட்டை விஸ்வேஸ்வரன் மகிமையைக் கேள்வியுற்று யதார்த்தி சகோதரர்கள் அங்கு வருகை தந்து ஈஸ்வரனை வழிபட்டு பெரிய கோயிலை எடுத்திருக்கிறார்கள். இவர்களே கருங்கல் மண்டபத்தில் ஸ்ரீ நர்த்தன விநாயகர், சூரிய நாராயணர், சண்டிகேஸ்வரர், பைரவர் ஆகிய மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்தனர். இதற்குப் பிறகு பல நூற்றாண்டுகளுக்குப் பின் மாதேராஜா என்பவரால் கோயிலைச் சுற்றி வீதிகள் அமைக்கப்பட்டன. அந்த வீதிகளில் ஒன்றுதான் இன்று இருக்கும் ராஜ வீதியும் ஆகும். இதற்குப் பின்னர் திப்பு சுல்தானின் காலத்தில் இந்த கோயிலுக்கு மான்யங்கள் விடப்பட்டன. இன்று அரசினர் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி உணவு விடுதிக் கட்டிடம் அவருடைய அரண்மனையாக இருக்கின்றது. இங்கிருந்து சென்று அவர் பேட்டை ஈஸ்வரனை பூஜித்திருக்கிறார். மேலும் ஈஸ்வரன் கோயிலுக்கு அடுத்துள்ள பெருமாள் கோயிலுக்கும், ஆஞ்சநேயர் கோயிலுக்கும் மான்யங்கள் வழங்கியுள்ளார்.

கோவை ராஜ வீதியில் தேர்முட்டியை அடுத்து கிழக்கு நோக்கி பேட்டை ஸ்ரீ விஸ்வேஸ்வரசுவாமி கோயில் அமைந்திருக்கிறது. கோயிலுள் நுழைந்ததும் பெரிய வெளி மண்டபத்தில் வலக்கைப் புறத்தில் அருணகிரி நாதரும் அதையடுத்து நால்வரும், நர்த்தன விநாயகரும் தனித்தனிச் சிறு கோயில்களில் அமர்ந்திருக்கின்றனர். இடதுபுறம் ஸ்ரீ வேல்முருகன் வெள்ளி தெய்வானை சமேதராய் சிலை வடிவில் (சுமார் 2 அடி உயரம்) காட்சி தருகிறார். விஸ்வேஸ்வரருக்கு எதிரில் நந்திகேஸ்வரரும் த்வஜ ஸ்தம்பமும் உள்ளது. மயில் வாகனம் முருகனை எதிர்நோக்கி அமைந்திருக்கிறது. வெளி மண்டபத்தில் மேற்புறச் சுவரில் மீனாட்சி கல்யாணம் வேடன் கண்ணப்பன் போன்ற அழகிய ஓவியங்கள் உள்ளன

இடக்கோடியில் நடராஜ மூர்த்தியும் சிவகாமி அம்மையும் (சுமார் 2 அடி உயரம்) மாணிக்க வாசகரும் செப்புச் சிலை வடிவில் காட்சி தருகின்றனர். அதையடுத்து நவக்கிரகக் கோயில் அமைந்துள்ளது.

த்வாரபாலகரைத்தாண்டி உட்பிராகாரத்தில் நுழைந்தால் வலதுபுறம் சூரிய நாராயண மூர்த்தி சிலை வடிவில் அமைந்துள்ளார். சுவரின் மேற்புறத்தைச் சிவபெருமானின் திருவிளையாடல் ஓவியங்கள் அலங்கரிக்கின்றன. விஸ்வேஸ்வரர் லிங்கவடிவில் தோற்றமளிக்கிறார். எதிரில் நந்தி தேவர் உள்ளார். கோயில் கர்ப்ப கிருகத்தில் தட்சிணா மூர்த்தி சிலை வடிவில் புன்னை மரத்தடியில் அழகாகக் காட்சி தருகிறார் அதை அடுத்து வலப்புறம் மூலையில் சித்தி விநாயகர் சிலை வடிவில் (சுமார் 3 அடி உயரம்) உள்ளார். இடப்புறம் பாலதண்டாயுதபாணி (சுமார் 1 அடி) சிலை வடிவில் காட்சி தருகிறார். அதையடுத்து சண்டிகேஸ்வரஸ்வாமி உள்ளார். விஸ்வேஸ்வரர் ஆலயத்தின் இடப்புறம் விசாலாட்சி அம்மையின் சந்நிதி உள்ளது. சந்நிதிச் சுற்றுச் சுவர்களில் அஷ்டலட்சுமி ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அம்மன் அழகிய வடிவம். அம்மன் சந்நிதியில் இடது மூலையில் திருத்தொண்ட நாயனார், விநாயகர், அஸ்தரராஜர், விசாலாட்சி அம்மை, சுந்தரேஸ்வரர் சௌந்தரவல்லி, வள்ளி, தெய்வானை சமேதராய் முருகன் ஆகிய அழகிய செப்பு உற்சவ மூர்த்திகளைக் காண்கிறோம். இவைகளுக்கு அருகிலிருக்கும் பாவை விளக்கு ஒரு நேர்த்தியான கலை வடிவம். இவைகளையடுத்து காலபைரவர் சிலை வடிவில் இடது மூலையில் உள்ளார். அம்மன் சந்நிதிக்கு மேற்புறம் அறுபத்து மூவரின் அழகு ஓவியங்களும் காட்சி தருகின்றன.

வெளிப் பிரகாரத்தில் வலப்புற வாயிலைத்தாண்டிச் சென்றால் ஆஞ்சநேயர் ஆலயத்தை அடையலாம். ஆஞ்சநேயர் நல்ல சிலை வடிவம். அர்த்த மண்டபத்தில் துளசி தாசரின் சிலை உள்ளது. இதையடுத்து ஸ்தல விருட்சமான பழமையான வில்வமரம் உள்ளது. ஆனால் அது காய்ந்து போயுள்ளது. இதன் அடியிலே முன்பு வேலவர் இருந்ததாகக் கூறுகிறார்கள். பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் அரசமரத்தடியில் பட்டி விநாயகர் வீற்றிருக்கிறார். அதையடுத்து தேவாரப் பாடசாலை உள்ளது. அங்கு பிரதி வாரம் திங்கட்கிழமை மாலை 7½ முதல் 8½ மணி வரை பெரிய புராண வகுப்பு நடைபெறுகிறது.

விஸ்வேஸ்வரர் ஆலயத்தில் இடதுபுறம் ஸ்ரீ கல்யாண வெங்கடரமண சுவாமி கோயில் உள்ளது. வெளி மண்டபத்தை அடுத்த கற்பக்கிரகத்தில் ஸ்ரீ கலயாண வெங்கட்ரமண சுவாமி, ஸ்ரீதேவி, பூதேவி, சமேதரராய் காட்சியளிக்கிறார். சுவாமிக்கு இருபுறங்களிலும், நம்மாழ்வாரும், உடையவரும் உள்ளனர். பெருமானுக்கு முன்னிலையில் கருடாழ்வார் வணங்கியபடி உள்ளார். பிரகாரத்தில் தல விருட்சமான நாகமரம் உள்ளது.

பேட்டை ஈஸ்வரனை பூஜிப்போருக்கு மறுபிறவி இல்லையென பெரியோர்கள் போற்றுகின்றனர். நாமும் அவ்வாறே 'மறுபிறப்பு வேண்டேன் என வேண்டி' வணங்கி வழிபடுவோம்.

## ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில்

### பாப்பநாயக்கன்பாளையம்

### கோவை.

திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

(பேயாழ்வார்)

கோவை பாப்பநாயக்கன்பாளையத்தில் குப்புசாமி நாயுடு ஆஸ்பத்திரி அருகில் மணி உயர்நிலைப் பள்ளிக்கருகிலுள்ளது இந்த ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயில்.

கிழதிசை பார்த்து அமைந்துள்ளது இக்கோயில். முன் வாயிலில் தீபஸ்தம்பத்தைக் கடந்து கருடாழ்வாரைத் தரி

சிக்கிறோம். அந்தச் சிறு ஸ்தம்ப மண்டபம் தூண்களுடன் அழகாகக் காட்சி தருகிறது. முன் வாயிலில் ஐந்து நிலை கோபுரம் நம்மை வரவேற்கிறது. ‘சோழர் கால கோபுரமோ’ என்று அதிசயிக்கும் வண்ணம் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்தான் கட்டப்பட்ட அக்கோபுரம் உயர்ந்து நிற்கிறது. மேலே ஐந்து கலசங்கள் சூரிய ஒளியில் பளபளக்கின்றன. முன் வாயில் கோபுர தரிசனம் முடிந்து உள்ளே சென்றால் பல தூண்களோடு கூடிய முன் மண்டபம் ஒன்றினைக் காண்கிறோம். அதையும் தாண்டி உள் மண்டபத்தில் நுழைந்ததும் மூலவரின் வலப்புறம் மண்டபத்தில் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், உடையவர், தேசிகர் ஆகியவர்களை ஒருங்கே தரிசிக்கிறோம். உள் மண்டபத்தின் இடப்புறம் ஸ்ரீ விஸ்வக்ஷேணர் காட்சி தருகிறார். அர்த்த மண்டப வாயிலின் இருபுறமும் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு துவார பாலகர்களாக ஸ்ரீ ஜயவிஜயர்கள் காட்சி தருகின்றனர். இவர்களின் இடப்புறம் ஆஞ்சனேயர் தரிசனம் தருகிறார். அர்த்த மண்டபத்தில் ஸ்ரீனிவாசப் பெருமாள் வைர முடியுடன் உற்சவராக ஆண்டாள், தாயார் சகிதம் அழகிய முறையில் உள்ளத்தைக் கவருகிறார். இவரையும் தாண்டிப் பின்னால் மூலவரான ஸ்ரீனிவாசப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் சுமார் 5 அடி உயரத்தில் தரிசனம் தருகிறார். இவரது தரிசனம் திருப்பதி ஸ்ரீவெங்கடாசலபதி கோலத்தில் உள்ளது. கம்பீரமான தோற்றம். எப்பொழுதும் தரிசித்துக் கொண்டே இருக்கலாம் என்ற எண்ணம் எழுகிறது.

ஸ்ரீனிவாசப்பெருமாளின் தரிசனம் கிடைத்து வெளி வந்ததும் முன்பிரகாரத்தில் இடபுறம் மூன்று நிலை சொர்க்க வாசல் கோபுரம் ஒன்றைக் காண்கிறோம் இதையடுத்து பிரகார கிழ மூலையில் நாச்சியார் கோயில் உள்ளது. மேலும் ஸ்வாமிக்கு கருட வாகனம், சேஷ வாகனம், குதிரை வாகனம், பல்லக்கு ஆகிய வாகனங்களைப் பார்க்கிறோம்.

ஸ்வாமி தரிசனம் முடிந்து இக்கோயிலின் வரலாறு குறித்து விசாரிக்கையில் இக்கோயில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னால் கோவை லக்ஷ்மி மில் நாயுடு பரம்பரையினர் ஒருவரால் கட்டப்பட்டது என்றும், முன்னிலை ஐந்து அடுக்கு ராஜ கோபுரத் திருப்பணிகள் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது என்று தெரியவருகிறது.

சித்திரை மாதம் ஸ்ரீ ராமநவமி, ஆடியில் ஆண்டாள் திரு நட்சத்திரமும் ஆவணியில் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி, புரட்டாசி சனிக்கிழமையில் விசேஷ பூஜைகள், நவராத்திரிக் கொலு, விஜயதசமி உற்சவத்தன்று அம்பு சேர்வை, கார்த்திகை மூன்று நாட்கள் தீபம், மார்கழி 30 நாட்களும் திருப்பாவை பாராயணம், வைகுண்ட ஏகாதசியன்று ஸ்வாமி புறப்பாடு, சொர்க்கவாசல் திறத்தல், தை மாதம் தை உற்சவம், ஆகிய உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ்வாறு ஸ்ரீனிவாசப் பெருமாள் தரிசனம் முடிந்து மன நிறைவுடன் வெளிவருகிறோம்.

# ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் கோயில்,

## பூளைமேடு. கோவை.

பூளைமேடு பி. எஸ். ஜி. பொறியியல் கல்லூரிக்கருகே செல்லும் சாலையில் வடக்கு திசையில் சென்றால் இந்த ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் கோயிலை நாம் அடையலாம்.

ஊருக்குச் சற்று ஒதுப்புறமாக கிழக்கு திசைபார்த்து அமைதியில் உறைவது இந்த ஆலயம். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் பூளைமேட்டில் ஒரு சிறு கோயிலாக இந்த ஆலயம் இருந்து வந்தது எனவும், பிற்பாடு நாளா வட்டத்தில் இந்தப் பகுதியிலுள்ள பல அறநிலையக் காவலர்களின் பெருமுயற்சியில் இன்று உயர்ந்த நிலையில் உள்ளது எனவும் அறிகிறோம்.

துவஜஸ்தம்பத்தைத் தாண்டி உள்ளே நுழையும் போது கருடாழ்வாரை தரிசிக்கலாம். அவரையும் தரிசித்து விட்டு கோயிலின் வெளிமண்டபம் அர்த்தமண்டபம், பின்பு கர்ப்ப கிருஹத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக ஸ்ரீகரிவரதராஜப் பொருமாளையும் அவரது திவ்விய திருக்கோலமும்

தரிசித்து மகிழலாம். மூலவரின் தரிசனம் நம் மனதை நிரப்பும் வேளையிலேயே அருகில் ஒரு அறநிலைய பக்தர் ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் புகழ் மணிமாலை பாடல் பாடியது நம் நினைவிற்கு வர உள்ளம் உவகையடைகிறது.

ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் நல்ல அழகிய வடிவம் கொண்டு உற்சவராகவும் காட்சி தருகிறார்.

தரிசனம் மீண்டு பிரகாரச் சுற்று வரும்போது வலப் பிரகாரத்தில் வடதிசை பார்த்து ஆழ்வார்களின் தரிசனம் கிடைக்கிறது. அப்படியே சற்று நின்று கோபுர தரிசனமும் செய்து கொண்டு சுற்று முடிக்கையில் இடப்பிரகார மூலையில் சொர்க்க வாசலையும் அதன் பின்னால் நந்தவனமும் இருப்பதை அறிகிறோம். அருகே நாச்சியார் கோயிலும், வாகனங்கள் வைக்கும் அறையில் திரு உலா வாகனங்களையும் பார்க்கலாம்.

இக்கோயிலில் தினமும் வழக்கப்படி பூஜைகள் நடைபெறுகின்றன. மாதந்தோறும் திருவோண நட்சத்திரத் தன்று விசேஷ ஆராதனைகளும், மற்றும் வாரம் சனிக் கிழமையன்று வழிபாடும் பஜனையும் நடக்கிறது. மார்கழியில் முப்பது நாளும் அதிகாலையில் பஜனையும், திருப்பாவையும் கேட்டு மகிழலாம். மேலும், கிருஷ்ண ஜயந்தி, ஆஞ்சநேயர் உற்சவம், நவராத்திரி கொலு ஸ்ரீராமநவமி, தீபாவளியன்றும் புரட்டாசி சனிக்கிழமை, விஜயதசமி உற்சவம் ஆண்டாள் நட்சத்திரத்தன்று சிறப்பான பூஜைகளும், கார்த்திகை தீபம் ஆகியவை ஊர்வலத்துடன் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கே அடிக்கடி இலக்கிய சொற்பொழிவுகளும், பட்டிமன்றங்களும் கேட்டு மகிழலாம்.

இவ்வாறு பூனைமேட்டிலேயே மிகவும் புகழும் பழமையும் வந்த ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாளை தரிசித்த மன நிறைவுடன் வெளி வருகிறோம்.

# ஸ்ரீ நீலகண்டேசுவரர் கோயில்

## இருகூர்.

---

கோவையிலிருந்து ஈரோடு செல்லும் இரயில் பாதையில் இருகூர் ஒரு இரயில் நிலையம். இரயில் நிலையத்தை யடுத்து சில கஜதூரத்தில் இக் கோயில் உள்ளது.

வரலாற்றுச் சான்றுக இது எக்காலத்தில் கட்டப்பட்டது என்பதற்கான எதுவும் கிடைக்கவில்லை. பண்டைத் தமிழ் மன்னராவ சேர சோழ அரசர்கள் கட்டியிருக்கலாம் என்று அறிஞர்கள் கருத்து. ஒரே இடத்தில் சிவனுக்கும் அம்பிகைக்குமாக இரண்டிரண்டு கோயில்கள் அமைந்துள்ளன. ஒன்றைச் சேரமன்னன் ஒருவனும் மற்றதைச் சோழமன்னன் ஒருவனும் கட்டியதாகக் கூறுகிறார்கள்.

மேற்குதிசை நோக்கி திருநீலகண்டப் பெருமானும் பார்வதி தேவியும் தனித்தனிக் கோயில்களில் அமர்ந்துள்ளனர். கிழக்கு நோக்கி சுந்தரேசுவரரும் மீனாட்சியம்மையும் திருக்கோலம்கொண்டு எழுந்தருளியுள்ளனர். இதனையடுத்து கிழக்குநோக்கி சுப்பிரமணிய சுவாமியின் கோயில் உள்ளது. வள்ளி தேவயானை சகிதம் இறைவன் அமர்ந்துள்ளார். எதிரே மேற்கு நோக்கி ஞான தண்டபாணியின் சந்நிதியுள்ளது. அதனையடுத்து நவக்கிரகங்களின் சிறு கோயிலும் பைரவர் திருக்கோயிலும் உள்ளன. இவை மிக அண்மையில் கட்டப்பட்ட கோயில்கள்.

சுற்றுப் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் விநாயகரும், அடுத்து தென்முகக் கடவுளது சந்நிதியும் உள்ளன. சுந்தரேசுவரர் ஆலயத்துக்கு இடப்புறம் சண்டிகேசுவரர் கோயில் உள்ளது. சுப்பிரமணிய சுவாமி ஆலயத்து உற்சவ விக்கிரகங்களாக சவுந்திரவல்லி சமேத சந்திரசேகரரும், வள்ளி தேவயானையுடன் முருகனும் உள்ளனர்.

சைவ வைணவ ஒற்றுமையை எடுத்துக்காட்டும் சீரியமுறையில் இதன் வடபுறம் கரிவரதராஜப்பெருமாள் சந்நிதி அமைந்துள்ளது. இக்கோயிலை ஊர்ப் பிரமுகர் ஒருவர் கட்டிவைத்ததாகத் தெரிகிறது. இறையிலி நிலங்கள் இக் கோயில்களுக்கு உண்டு.

ஒவ்வொரு கிருத்திகையும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. சூரசம்காரப் பண்டிகைத் தேர்த் திருவிழாவாகும். கார்த்திகை மாத கிருத்திகை விழாவினை ஞான தெண்டபாணி தண்டமிழ்க் கழகத்தார் சிறப்பாக நடத்திவந்துள்ளனர். சிவ ராத்திரி, ஆருத்ரா தரிசனம் போன்றவைகளும் நன்கு நடத்தப் படுகின்றன. சமயகுரவர் நால்வரது குரு பூசையும் சிறப்பாக நடத்தப்படுகிறது.

கோயிலின் திருப்பணி நடந்து வருகிறது. விரைவில் முடிந்து குடமுழுக்கு விழா நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கோயிலைத் தவிர ஊர்த் தேவதைகளாக பொன்னூரம்மன், அழகநாச்சியம்மன், மாரியம்மன், அங்காளம்மன், மாகாளியம்மன் ஆகிய துர்க்கைக் கோயில்கள் உள்ளன. அங்காளம்மன் பண்டிகை மாசி மாதத்தில் குண்டத் திருவிழாவாக நடத்தப் படுகிறது.

எல்லாவற்றையும், இகழ்ந்து பேசுவது என்ற கேவலமான நோய், நம்மை பீடித்து வருகிறது. அதை விட்டு விடுங்கள். அதை அறவே அகற்றுங்கள். அதற்கு பதிலாக முயற்சியும், தன்னம்பிக்கையும், கொண்டு பலம் பெறுவீர்களாக! அதிலிருந்து அனைத்தும் தானே உண்டாகும்.

—விவேகானந்தர்.

# ஸ்ரீ வரதராஜ சுவாமி கோயில்

## வெள்ளலூர்.

காஞ்சி மாநதியாகிய நொய்யலாற்றை ஒட்டினாற்போல் அதன் கரையில் சற்றுத்தள்ளி அமைக்கப்பட்டிருக்கும் இக்கோயிலைப் பற்றி ஒரு கதையே கூறுகின்றனர். அன்று சோழன் தனது ஆட்சிக் காலத்தில் ஆற்றங்கரையில் நடந்து கொண்டே. ஒருநாள் காலை பல் தேய்த்துச் சென்றதாகவும் அச்சமயம் அங்கு ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த அந்தணர்கள் 'நடந்துகொண்டே பல் தேய்ப்பது ஆகாது' என்று தடுத்ததாகவும் சோழராஜா மேலே செல்லும் பொழுது ஒரு அசரீரி அவனை சாபமிட்டது போல கேட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த சாபத்திலிருந்து விடுபடும் வழியை அரசன் கேட்க, உடனே கடவுள் அவனுக்கு காட்சி தந்து 'நொய்யலாறு என்று இன்று அழைக்கப்படும்' காஞ்சி மாநதி'யின் துவக்கம் முதல் அது சங்கமமாகும் இடம் வரை 32 பெருமாள் கோயில்களும் 32 சிவன் கோயில்களும் எடுப்பிக்க வேண்டுமென்றும், இதைச் செய்தால் அவனுக்கு சாபவிமோசனம் கிடைக்குமென்றும்' கூறி அபய மளித்தார். சோழனும் அதன்படியே நொய்யலாறு உற்பத்தியாகும் வெள்ளியங்கிரி மலை முதல் தொண்டாமுத்தூர், பேரூர், குறிச்சி, வெள்ளலூர், இருகூர், சூலூர், விஜயமங்கலம், திருப்பூர் போன்ற 32 இடங்களில் கொடுமுடி வரை கோயில்களை எடுப்பித்தானும். அவ்வகையில் கட்டிய கோயில்களில் சேர்ந்தவையே இந்த வெள்ளலூர் பெருமாள் கோயிலும், சிவன் கோயிலும் ஆகும். முதலில் பெருமாள் கோயிலுக்குச் செல்வோம்.

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் கி. பி. 11-ம் நூற்றாண்டில் சோழன் கட்டிய இந்த 'வரதராஜ சுவாமி கோயில்' சுவர்கள் எல்லாம் கல்லாலேயே கட்டப்பட்டிருக்கிறது. இக்கோயிலை அடைய சரியான ரஸ்தா வெள்ளலூர் கிராமத்திலிருந்து கிடையாது. சுற்றிலும் தோப்புகளும் வயல்களும் இருப்பதால் ஒற்றையடிப்பாதை மூலம்தான் செல்லவேண்டும். கோயிலைப் பார்த்ததுமே அதன் பழமை புலப்படும். முன்புறம் ஒரு திறந்த புல் வெளியுடன்கூடிய இக்கோயிலில் ஒரு கல்லில் நான்கு புறமும் செதுக்கப்பட்ட சிங்கங்

களைக் கொண்ட அசோகச் சக்கர சின்னமும் அதையொட்டி முற் காலத்தில் கட்டப்பட்டு இன்று ஸ்தம்பமில்லாத துவஜஸ்தம்ப கற் பீடமும் உள்ளது. அதையடுத்து கருடாழ்வார், சுவாமியைப் பார்த்து தரிசனம் செய்யும் நிலையில் ஒரு சிறு மாடத்தில் காட்சி தருகிறார். கருடாழ்வாரைப் பார்த்துவிட்டு கோயிலை நோக்கி செல்லும்போது அங்கு கல்லினாலேயே கட்டப்பட்ட முன் மண்டபம் ஒன்று இருந்ததற்கான அடையாளங்களைக் காண்கிறோம்.

கோயிலின் முன்புறம் தும்பிக்கை ஆழ்வாரையும் கிருஷ்ண பகவான் காளிய நர்த்தனம் புரிவது போலவும் இரு சிலைகளைக் காண்கிறோம். அதையும் தாண்டி கோயிலின் உள்ளே சென்றால் முதலில் ஒரு பெரிய மண்டபமும் தென்படுகிறது. மண்டபத்தின் இடப்புறம் ஆஞ்சநேய ஸ்வாமியும்,கிழதிசை நோக்கி இராமாநுஜர், நம்மாழ்வார் சிலைகளும் நம்மைக் கவர்கின்றன. மேலும் இடது கைப்புறம் ஸ்ரீ வரதராஜ சுவாமி தனித்துச் சிலைவடிவில் நிற்கிறார். அந்த சிலையின் இருபுறத்திலும் தாயார்கள் இருந்த அடையாளம் தென்படுகிறது. இது குறித்து விசாரித்ததில், சுமார் 70 ஆண்டு களுக்கு முன் இக் கோயில் இடிந்து இச் சிலை பின்னப்பட்டதில் வரத ராஜ சுவாமி மட்டும் உடையாமல் எஞ்சியதாகவும் தெரிய வருகிறது. அதே நேரத்தில் தாயாரின் திருப் பாதங்களை மட்டும் பின்னப்பட்ட நிலையில் அருகில் காண்கிறோம். அப்படி இடிந்து போன கோயில் பிறகு திருப்பணி செய்யப்பட்டிருக்கலாமென்று அங்குள்ள கற்சுவர்களில் உள்ள அடையாள எழுத்துக்களின் மூலம் அறிகிறோம். இவையெல்லாம் பார்த்துக்கொண்டே உள் மண்ட பத்தில் சென்று கர்ப்ப கிரஹத்திலுள்ள ஸ்ரீ வரதராஜ சுவாமியை தரிசனம் செய்யலாம். ஸ்ரீ வரதராஜ சுவாமி ஸ்ரீ தேவி, பூதேவி சமேதராய் சங்கு சக்கரம் கெதை அபய கரத்துடன் கற்சிலை வடிவில் நம் மனதைக் கவர்கிறார். சுவாமி தரிசனம் முடிந்து கோயிலை வெளிப்புறமாக சுற்றிவரும்பொழுது கோயில் வெளிக்கல் சுவர் களின் கீழ்ப் பாகத்தில் கல் வெட்டுக்களை காண்கிறோம். மேலும் இந்தக் கல்வெட்டுகளும் சிற்பங்களும் பண்டைய காலந்தொட்டே இருந்து வருவதால் அவைகள் தேய்ந்து போவதையும் காணலாம். கோபுரம் இன்று இடிந்த நிலையில் இருப்பது கண்டு மனம் துணுக்குறுகிறது. கோயிலை ஒரு சுற்று வரும்பொழுது கோ யிலின் தல விருட்சமான பாரிஜாதமென்னும் பவழமல்லிகை மரமும் கிணறும் தென்படுகின்றன. இவ்வாறாக வெள்ளலூர் ஸ்ரீகரி வரத ராஜ சுவாமி தரிசனம் முடிந்து திரும்பவும் அதே ஒற்றையடிப் பாதை வழியாக ஊர் திரும்பலாம்.

○

# ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயில், கோவை.

கோவை ராஜவீதியில் வடபுறம் பார்த்த பிரம்மாண்டமான ஒரு ஐந்துநிலை ராஜ கோபுரம் நம்மைக் கவரும். விசாரித்தால் இக்கோயில் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி ஆலயம் என்று தெரிய வரும்.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட ஆலயம். வடதிசை பார்த்த ஐந்து நிலை ராஜகோபுரத்தில் நுழைந்து உள்ளே சென்றதும் முன் மண்டபத்தில் அழகான வண்ண ஓவியங்கள் நம்மைக் கவர்கின்றன. அவற்றில் சௌடம்மனின் ஓவியமும், திருவிளையாடல்கள் ஓவியம் ஆகியவை நம்மைக் கவரும். வலப்புறம் உள்ள கல்யாண மண்டபத்தையும் தாண்டினால் பிரகாரத்தில் கால பைரவர், சப்த கன்னிகைகள், சந்திரன். நவக்கிரஹங்கள் ஆகியவர்களை தரிசிக்கலாம். அதையடுத்து தனிக் கோயிலில் ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர் கிழதிசை பார்த்து குடிகொண்டுள்ளார், துவாரபாலகர்களும், மேலே சுதை உருவங்களான பிரம்மா, விஷ்ணு, சிவபெருமானின் திருமணக்கோலம் நம்மைக் கவர்கிறது. உள்ளே கர்ப்பகிருஹத்தில் ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர், சர்ப்பம் படம் விரிக்க அதனடியில் காட்சி தருகிறார். இவரை தரிசித்து மேலே பிரகாரச் சுற்று செல்லும் போது சூரிய தேவர், விநாயகர், லிங்கேஸ்வரர், மற்றும் அறுபத்து மூவரையும் தரிசித்து மகிழலாம். பிரகார கிழபுற மூலையில் தீர்த்தக்கிணறு உள்ளது. சௌடம்மன் கோபுரம், ராமலிங்கேஸ்வரர் கோபுரம் ஆகியவற்றை ஒருங்கே தரிசித்து மகிழலாம். இடப்பிரகார மேற்கு மூலையில் ஸ்ரீவிநாயகர் தனிக் கோயிலில் இடம் பிடித்துக் கொண்டுள்ளார். அவரையும் தரிசித்து விட்டு தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர் ஆகியோரைத் தாண்டிச் சென்றால் இடப் பிரகாரத்தையடுத்த மண்டபத்தில் ஸ்ரீ பாலதண்டாயுதபாணியையும், ஸ்ரீ தேவி பூதேவி சமேதரான ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணப் பெருமாள், ஆகியோரை தரிசிக்கலாம். மேல்புறச் சுவர்களில் அஷ்டலக்ஷ்மியின் திரு ஓவியங்கள் உள்ளத்தைக் கவர்கின்றன. இதுதவிர இக்கோயிலில் பார்க்குமிடமெல்லாம் திரு ஓவியங்கள் தமது உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி, கண்ணையும் கருத்தையும் கவர்

கின்றன. இவை அனைத்தையும் கண்டுகளித்துவிட்டு உள்மண்டபத்தில் நுழைந்தால் ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர், சௌடேஸ்வரி ஆகிய தெய்வங்களின் உற்சவ உருவங்களை அழகு மிகு கோலத்தில் தரிசித்து மகிழலாம். அருகிலுள்ள அழகிய பாவைவிளக்கின் ஒளியில் ஸ்ரீ விநாயகரின் அழகுச் சிலை வடிவையும் கண்டு களிக்கலாம். உள் மண்டபச் சுவர்களிலும் அழகு ஓவியங்களைக் காணலாம். கர்ப்ப கிருஹத்தில் ஸ்ரீ சௌடம்மன் வெள்ளிக் காப்பணிந்து நின்ற திருக் கோலத்தில் பாசம், அங்குசம், திரிசூலம், கபாலம் ஆகிய ஆயுதமேந்திய நாற்கரங்களுடன் தரிசனம் தருகிறார்.

இவ்வரிய காட்சிகளைக் கண்டபின் இக் கோயிலின் வரலாறு குறித்து அங்குள்ள பெரியவர்கள் கூறும் கதையைக் கேட்டால் இன்னும் சுவை கூடும். முன்னொரு காலத்தில் தேவர்களும், பூலோகத்தார்களுக்கும் ஆடை தரவேண்டி சிவபெருமான் 'தேவலர்' என்ற ரிஷியை தன்னுடைய இதயத்தினின்று தோற்றுவிக்க, அவர் 'ஆமோதகநகருக்கு' சென்று மஹாவிஷ்ணுவின் நாபிக் கமலத்தில் தோன்றிய தாமரை நூலைக் கொண்டு எல்லோருக்கும் ஆடை அளித்து அவர் தம் குறைதீர்க்க, ஈஸ்வரரும் மனமகிழ்ந்து தேவலருக்கு ரிஷபக்கொடியும், மகாசக்திவாய்ந்த வாளும் பரிசளித்தார். பின்னர் ஒரு சமயம் அசுரர்களுடன் நடந்த போரில் இந்திரனுக்கு உதவி செய்து ஜெயம் கொண்டார் தேவலர். ஈசனுடைய அனுக்கிரஹப்படி சூரியதேவனுடைய தங்கையான தேவதத்தையும் மணம் செய்துகொண்டார். மேலும் பின்னொரு காலத்தில் அசுரர்களுடன் தேவலர் போர்புரிந்த காலத்தில் தேவலர் அசக்தனுகி அம்பிகையை வேண்ட, அம்மையும் சிம்மவாகனத்தில் எண் தோள்களிலும் ஆயுதமேந்தி திருக்கரத்தில் திரி சூலத்தை ஏந்தி போரில் அசுரர்களை வென்று தேவலரைக் காத்தருளினுர். அது முதல் தேவலரும் அம்பிகையின் தாசானுதாசராகி அவரது அருள் பெற்று தன்னுடைய தூல தேகத்தை நீக்கி அமர உலகு எய்தினர். இவருடைய குமாரரான திவ்வியாங்கனும் அவருடைய சந்ததியாரும் அது முதற்கொண்டு ஸ்ரீ சௌடேஸ்வரியான (ஒளிமிக்க கிரீடத்தை அணிந்தவள், சௌடம்=கிரீடம்) அம்பிகையை கொண்டாடி தங்களது குலதெய்வமாக வணங்கிவருகின்றனர்.

இவ்வாறு புராண வரலாற்றுப்பின்னணியைக் கொண்ட இக் கோயிலில் ஆண்டு தோறும் நவராத்திரி ஒன்பது நாட்களும், மார்கழியில் ஆருத்திரா தரிசனமும் சிறப்பு. தைப்பூசம், விசாகம்,

கார்த்திகை நாட்களில் முருகனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. தினமும் பாலபிஷேகம், ருத்ர மிருத்யஞ்சய ஜபம், முக்கால பூஜை ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் அம்மனுக்கு சிறப்பு ஆராதனைகள் உண்டு.

இவ்வாறு ஸ்ரீராமலிங்கச் சௌடேஸ்வரியை தரிசித்து விட்டு, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் எழுப்பப்பட்ட ரங்கே கவுடர் வீதியிலுள்ள புதிய ராமலிங்க சௌடேஸ்வரர் ஆலயத்துக்கும் சென்று வரலாம்.

★

# ஸ்ரீ நரசிங்க பெருமாள் கோயில்
## இராமநாதபுரம், கோவை.

இராமனுதபுரம் உயர்நிலைப் பள்ளியைத் தாண்டி, அந்தப் பாதையில் சிறிது தெற்கு நோக்கிச் சென்றால் கிழதிசை பார்த்து அமைந்த ஸ்ரீ நரசிங்கப் பெருமாள் கோயிலை அடையலாம்.

திப்பு சுல்தான் படையெடுப்பு காலத்தில் மதுரையில் இருந்து சுமார் அறுபத்திமூன்று குடும்பங்கள் பயத்தால் இடம்பெயர்ந்து வந்ததாகவும், அப்பொழுது அடர்த்தியான காடாக இருந்த கோவை இராமனுதபுரத்தை அடைந்து, அவ்விடத்தை தமது இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்ததாகவும் தெரிகிறது. அப்படி வாழத் துவங்குகையில் தமக்கென்று ஒரு கோயில் வேண்டுமென்று அவர்கள் விரும்பி இக்கோயிலை அமைத்தனர்.

கிழதிசை பார்த்து அமைந்துள்ளது இக்கோயில். முன்கோபுரம் சிறியது தான். எதிரே கருடகம்பமும் உள்ளது. உள்மண்டபத்தில் நுழைந்ததும் துவார பாலகர்கள் காட்சி தருகின்றனர். அர்த்த மண்டபத்தில் ஸ்ரீ நரசிங்கப் பெருமாள் உற்சவ மூர்த்தியாக ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக அழகிய திருக்கோலத்தில் தரிசனம் தருகிறார். உள்ளே கர்ப்பகிரஹத்தில் மூலவரான ஸ்ரீ நரசிங்கப் பெருமாளும், ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாளும் எதிர் எதிராகக் காட்சி தருகின்றனர். அவர்களுக்கு முன் புறம் சுயம்பு வடிவில் ஸ்ரீ நரசிங்கப் பெருமாளையும் தரிசிக்கலாம்.

பிரகாரச் சுற்று வருகையில் கிழ மூலையில் ஒரு அரச மரமும், அதனடியில் விநாயகரையும் தரிசிக்கலாம். கோபுரம் பழங்கால கோபுரம். பிராகார இடப்புறம் கோயில் தீர்த்தக் கிணறு உள்ளது. முன்மண்டப திருப்பணிகள் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் செய்யப் பட்டு கும்பாபிஷேகம் நடந்துள்ளதை அறிகிறோம். மேலும் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் மீண்டும் குட நீராட்டுவிழா நடை பெற்றதை அறிகிறோம்.

ஆடியில் பூரம், ஆவணியில் கிருஷ்ணஜெயந்தி, புரட்டாசி யில் நவராத்திரி பூஜை, அம்பு சேர்வை, தீபாவளி மரவணை, கார்த்திகை மூன்றுநாள் தீபம், அத்துடன் அன்னதானம், மார்கழி யில் வைகுண்ட ஏகாதசி ஆகியவை இங்கு சிறப்பாக நடைபெறு கின்றன.

இவ்வாறு ஸ்ரீ நரசிங்கப் பெருமாள் புகழ் பாடி மகிழ்ந்து திரும்புகின்றோம்.

# ஸ்ரீ கரிவரதராஜப்பெருமாள் கோயில்

## நஞ்சுண்டாபுரம்.

கோவை இராமநாதபுரத்திலிருந்து 19-ம் நெம்பர் பஸ்ஸில் நஞ்சுண்டாபுரம் செல்லலாம். நஞ்சுண்டாபுரத்தில் பஸ்நிலையத்தை விட்டு சிறிது தூரம் மேற்கு நோக்கிச் சென்றால் ஸ்ரீகரி வரதராஜப் பெருமாள் ஆலயத்தை அடையலாம்.

1914-ல் துவங்கிய இக்கோயில் கிழதிசை பார்த்து காஞ்சி மாநதியின் அருகே அமைந்துள்ளது. பிரகாரச் சுற்றில் நாம் ஸ்ரீ விநாயகர், காரணப் பெருமாள், ஆஞ்சநேயர், ஆகியோரை தரிசிக்கலாம். கோயிலுக்குள் நுழைந்து அர்த்த மண்டபத்தி லிருந்தே கர்ப்ப கிருஹத்திலுள்ள ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாளை நாற்கரங்களுடன் தாயார்களுடன் தரிசித்து மகிழலாம். இக்கோயி லில் வருடத்தில் ஸ்ரீ ராமநவமி, ஸ்ரீ ஜெயந்தி, நவராத்திரி ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இப்படியாக ஸ்ரீ கரிவரத ராஜப் பெருமாளை தரிசித்து மகிழ்வுடன் திரும்புகிறோம்.

*

# இன்னும் சில ... ... ...

மேற்கண்ட தலைப்பில் எழுதும் போது எமது மனம் சிறிது துணுக்குறுமலில்லை கடந்த நவம்பர் 66 முதல் கோவை மா நகரத்திலும் டவுன்பஸ்கள்செல்லும் இடங்களிலும் எம்மால் இயன்ற அளவிற்கு அங்கு அமைதியில்உறையும் கடவுள்களை தரிசித்து, அந்த ஆலயங்களைப் பற்றிய விபரங்கள் சேமித்தோம். ஆனால் இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து புத்தக வடிவில் அமைக்கும் போதுதான் எமக்குச் சிறிது சிரமம் தெரிந்தது கடைசியில் வரலாற்றுப் புகழ் வாய்ந்த பழைய ஆலயங்களை மட்டும் பொறுக்கியெடுத்து அவற்றினைக் குறித்த விபரங்களை இத்த புத்தகத்தில் அளித்தோம் அவைதவிர அதிக அளவில் விபரங்கள் அளிக்க இயலாத ஆலயங்களைப் பற்றி ஓரளவிற்கு இங்கு கூற முயலுகிறோம். அதேநேரத்தில்நாங்கள் அடுத்து இரண்டாவதாக இதுபோல வேறு புத்தகம் வெளியிடும் பொழுது இவற்றினை குறித்தும் நிச்சயம் எழுதுவோம்என்றும் கூறுகிறோம்.

கோட்டை ஸ்ரீ சங்கமேஸ்வரர் கோயிலை அடுத்துச்செல்லும் கோட்டை பெருமாள் கோயில் வீதியில் சென்றால் ஸ்ரீ கரிவரத ராஜப் பெருமாளை தரிசித்துச் செல்லலாம். அதன் பிறகு உக்கடத்தில் கிழக்கு திசை பார்த்த ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மசுவாமி அருகிலேயே ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆகியோரை தரிசிக்கும் பாக்கியம கிடைக்கிறது.

ஈச்சனாரி ஸ்ரீ விநாயகரை தரிசித்தகையோடு அருகிலேயே மதுக்கரை பாலத்தில் உள்ள தருமலிங்க மலையேறி மேலே உள்ள ஸ்ரீ தருமலிங்க சுவாமியின் தரிசனம் பெற்று திரும்பலாம்

திரும்பி நகரை அடையும் போது உக்கடத்தில் ஒப்பணகார வீதியிலேயே வடக்குதிசைபார்த்து அமைந்திருக்கும் ஸ்ரீமாகாளியம்மன் ஸ்ரீ தாசபலிஞ்சகர் மாகாளியம்மன் ஆகிய தாயார்களின் திவ்விய தரிசனம் பெற்று வைசியாள் வீதியில் நுழைந்து ஸ்ரீ அங்காளம்மன், ஸ்ரீ தருமராஜா திரௌபதி அம்மன் ஆகிய ஆலயங்களையும் அங்கு உறையும் தெய்வங்களையும் கண்டுகளிக்கலாம்.

பிறகு தடாகத்தில் மருதமலைக்கு மறுபுறம் ஸ்ரீ அனுபாவி சுப்பிரமணியரை மலைமீது தரிசித்த கையோடு, அடிவாரத்தில் அமைந்துள்ள கிழதிசை பார்த்த ஸ்ரீ தருமராஜாவின் தரிசனம் செய்யலாம். மீண்டும் பஸ்ஸைப் பிடித்து நகரத்திற்குவந்து ஆர். எஸ். புரம் ஸ்ரீ ரத்தினவிநாயகர் ஆலயத்திற்குச் சென்று

அங்கு இன்று புதுப் பொலிவோடு விளங்கும் ஸ்ரீ விநயகரை தரிசித்து மகிழலாம் துதிக்கையானைக் கண்டு சாயிபாபா காலனியில் ஸ்ரீ சித்தி விநயகர் ஆலயத்திற்குச் செல்கிறோம்,

திரும்புகையில் காந்திபுரத்தையடுத்த ஸ்ரீனிவாசபுரந்தில் உள்ள ஸ்ரீ பிளேக் மாரியம்மனை வணங்கிச்செல்கிறோம் அதன் பிறகு ராம் நகரில் சபர்பன் ஆரம்பப் பள்ளியில் அமர்ந்திருக்கும் பள்ளிக் கூடப்பிள்ளையார் என்று பக்தர்களால் மிகவும் செல்லமாக அழைக்கப்படும் ஸ்ரீ பிரசன்ன மகா கணபதியை தரிசிக்கலாம் அதையும் தாண்டி அநுப்பர்பாளையத்தில் ஸ்ரீ மாரியம்மன் கோயில், ஸ்ரீ விநயகர் கோயில் ஆகியவைகளைக் கண்டு செல்லலாம். மேலே அவிநசிப்பாதை ஒப்பணக்கார வீதி சேரும் இடத்தில் ஸ்ரீ அத்திவிநயகரையும் அதையடுத்து ஸ்ரீ பசுவண்ணரையும் தரிசிக்கலாம். இடையர் வீதியில் அரசமரத்தடியில் கிழக்குபார்த்து அமர்ந்திருக்கும் ஸ்ரீ கூப்பிடுவிநயகரை வணங்கி பின் கே. கே. பிளாக் என்று அழைக்கப்படும் புதுமார்க்கெட்டில் மகா மாரியம்மன் என்ற சக்தியையும் வணங்கிச் செல்லலாம். அங்கிருந்து டவுன் பஸ்ஸை பிடித்து இராமநாதபுரத்தை அடைந்தால் அறுபடை வீடு கொண்ட திருமுருகனையும் கோகுல கண்ணன் ஸ்ரீ வேணுகோபாலனையும் தரிசிக்கும் பேறு பெறுகிறோம். அங்கிருந்து நஞ்சுண்டாபுரம் சென்று அங்கே ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ பத்திரகாளியம்மன், பாண்டுரங்கன் ஆகிய தெய்வங்களையும் கண்டு மீளலாம்.

பூளைமேடை அடையும்போது பூளமேட்டின் ஸ்ரீ மாரியம்மனையும், ஸ்ரீ சித்திவிநயகரையும் வணங்கிச்செல்லலாம்.

அதன் பிறகு சிங்காநல்லூரையடுத்திருக்கும் வெள்ளலூரில் அன்றைய தஞ்சைத் தனிக்குளத்தார் ஆலயத்தைப்போலவே ஆற்றங்கரையிலே அமைதியான சூழலிலே அமைந்திருக்கும் ஸ்ரீ கரிவரதாராஜப் பெருமாளை தரிசிக்கலாம். இந்தப் பழம்பெரும் ஆலயத்தைக்கண்டு ஸ்ரீ தருமராஜா கோயிலையும் பார்த்துவிட்டு சிங்காநல்லூரை அடைகிறோம்.

சிங்காநல்லூரில் நாம் முக்கியமாக செல்லவேண்டிய ஆலயங்கள், ஸ்ரீ செல்லபாண்டியம்மன் கோயில், ஸ்ரீ திருமலையப்பன், பட்டத்து அரசியம்மன் கோயில், ஸ்ரீ மாரியம்மன் கோயில் ஆகியவை.

இப்படியாக கோவைக் கோயில்களை ஒருங்கே தரிசிக்கத் துவங்கிய நாம் காலத்தையும் பொருளையும் அனுசரித்து கோவை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உறைந்துள்ள கடவுள்களின் ஆசிகளைப் பெற்று வாழ்வு பயனடையும் பாதையில் செல்வோமாக!

வணக்கம்

*With the best Compliments from :*

Tel : Grams : 'HOTELGURU'
Phone : 2 3 2 3 3

# B. B. HOTEL

BANGALORE BIRIYANI

&

MEALS HOTEL

BIG BAZAAR STREET,

(NEAR CLOCK TOWER)

COIMBATORE-1.

PROPRIETOR :-

K. S. M. GURUSWAMY NADAR & SONS.

PSG

# Products include...




MOTORS
BALING PRESSES
LABORATORY
EQUIPMENTS

## PSG INDUSTRIAL INSTITUTE

Coimbatore - 4 South India

PSG the hallmark of high standard

NPB/PSG/2

'ஷியல் பிரிண்டர்ஸ், கோவை.